முகப்பு:

சிதம்பரம்
அருள்மிகு சபாநாயகர் (நடராசர்)
திருக்கோயிலின் வடக்குக் கோபுரமும்,
சிவகங்கைத் தீர்த்தமும்.

# திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை: 22 | இரவுத்திரி ஆண்டு-ஆவணித் திங்கள்-ஆகஸ்ட்-1980 | மணி: 11

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

இரத்தினகிரியில் சித்த மருத்துவமனைத் திறப்பு விழாச் சிறப்புரை
—மாண்புமிகு திரு இராம. வீரப்பன் அவர்கள்

முருகன் உலவிய திருவிடைக்கழி
—வலயப்பேட்டை திரு கிருஷ்ணன்

திருவாசகத்தின் இலக்கியத்திறன்
—திரு ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

குன்றக் குரவை
—திரு கா.அ.ச. ரகுநாயகன், எம்.ஏ.,

தமிழக ஓவியச் சிறப்பு
—திரு க.சி.கமலையா

பிராட்டியின் பெருமை
—திரு நா. வேணுகோபால் நாயகர், பி.ஏ.பி.எல்

காசுமீர சைவம்
—பேராசிரியர் திரு பெ. திருஞானசம்பந்தம், எம்.ஏ., எல்.டி.

இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
—டாக்டர் திரு இரத்தினவேல் சுப்பிரமணியம்

காவளம்பாடிக் கண்ணன்
—டாக்டர் திரு ந.சுப்பு ரெட்டியார், எம்.ஏ., பி.எச்டி.,

கணபதி வரவும்-செலவும்
—திரு பண்டித வி.நடேசனார், பி.ஏ.ஜே.பி.

திருக்கோயில் வழிபாட்டின் பயன்கள்
—அருட்டிரு மறைமலை அடிகளார்

அப்பரடிகளும் அருள்நெறியும்
பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம், எம்.ஏ., எம் லிட்.

அத்வைத தத்துவம்
—டாக்டர் திரு டி.எம்.பி. மகாதேவன், எம்.ஏ பி.எச்டி.,

கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
—பேராசிரியர் திரு.செ. வேங்கடராம செட்டியார்

திருமூலர் கூறும் இயற்கை மருத்துவம்
—டாக்டர் திரு கே. வி. கிரி, ஆர்.ஐ.எம்.பி.

கோயில்
—திரு க.சி. கமலையா

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# இரத்தினகிரி, அருள்திரு பாலமுருகன் திருக்கோயில் இலவசச் சித்த மருத்துவமனைத்

# திறப்பு விழாச் சிறப்புரை

மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள்

**அறநிலையத்துறை அமைச்சர்**

இரத்தினகிரி பாலமுருகன் திருக்கோயி லில்-அதிலே வீற்றிருக்கின்ற முருகனின் அடிமை என்று தன்னை ஆளாக்கிக்கொண்டு சமு தாயப்பணி ஆற்றி வருகின்ற, தவத்திரு பால முருகன் அடிமை அவர்களுடைய சீரிய முயற்சி யினால், இங்கே மக்களுக்குப் பயன்படுகின்ற சித்த மருத்துவ மனையைத் திறந்து வைக் கின்ற வாய்ப்பை அளித்ததற்காக, நான் அவரு ருக்கும், அவருக்கு உறுதுணையாக இருப்பவர் களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நடைபெறுகிற இந்த விழா வில், தமிழகத்தினுடைய சமுதாய, அரசியல் வரலாறுகளை ஒட்டிய, ஒரு பின்னணியும் அடங்கியிருக்கிறது என்பதை, நான் தெரிவித் துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வர வேற்புரை நிகழ்த்திய திரு தியாகராசன் அவர் கள், தொல்காப்பியர் காலந்தொட்டுத் தமிழ் மண்ணிலே முருகனை வணங்குகின்ற தன்மை இருந்து வருகின்ற, அந்த வரலாற்று உண் மையை இங்கே எடுத்துச் சொன்னார்கள். தமிழ்நாட்டிற்கு உரிய கடவுள் முருகன் என்று வரலாற்றிலே இருப்பதை இன்றைக்கு எடுத் துச் சொல்லிக்கொண்டிருக்கின்ற ஓர் உணர்வு நாட்டிலே இருக்கிறது.

முருகன் என்று சொல்லும்பொழுது, தமிழ்நாட்டிலே அதற்கென்று ஒரு தனிப் பெருமை இருப்பதை, யாரும் மறுக்க முடி யாது. நம்முடைய இயற்கையோடு இணைந்த ஒரு வழிபாட்டுக்குரிய தெய்வமாக, முருகனை ஆண்டாண்டு காலமாக நம்முடைய மக்கள் வணங்கி வருகிறார்கள். அப்படிப்பட்ட முருகக்கடவுள் ஒரு நானூறு, ஐந்நூறு ஆண்டு களுக்கு முன்னாலே இருந்து, இந்த இரத்தின கிரி மலையிலே, ஒரு சிறிய கற்கோயிலாக உருப்பெற்று-இந்தப் பகுதியிலே இருந்தது உங் களுக்குத் தெரியும். சரித்திரம் படித்தவர்களுக் குத் தெரியும். இந்தப் பகுதியில் எப்படிப்பட்ட சரித்திரப் படையெடுப்புகள் நடைபெற்றன என்பதும், உங்களுக்குத் தெரியும். நமக்கு அருகிலே வேலூரிலே கோட்டைக்குள்ளே இருக் கிற ஆலயம் இன்றைக்கு ஆலயமாக இருக் கிறது. அங்கே கர்ப்பக்கிரகம் இருக்கிறது. அதற்குள்ளே ஆண்டவன் இல்லை என்பதும் தெரியும்.

ஆகவே இவ்வளவு பெரிய போராட்டங் களுக்கு இடையிலேயும் இந்த இரத்தினகிரிக் குன்றின்மீது வாழும் முருகன், அன்றைக்கு இருந்தது போலவே இருந்து கொண்டிருக்கி றார் என்ற சிறப்பைப்பெற்று, அந்த முருக னிடத்திலே-நம்பிக்கையிலே தன்னை ஈடுபடுத் திக்கொண்ட ஒருவர், அவர்கள் பாலமுருகன் அடிமை என்ற பெயரை இன்றைக்குப் பெற்றுக் கொண்டிருக்கலாம், அல்லது வேறு பெயரை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கலாம் என்றா லும், அவரவர்களுக்கு இதயத்திலே ஏற்படு கின்ற அந்தத் தெய்விக எழுச்சியை, உணர்ச் சியை, இதய சுத்தியை, நாம் போற்றக் கடமைப் பட்டுள்ளோம். இன்றைக்கு நாடு அதைத்தான் வேண்டுகிறது; எதிர்பார்க்கிறது.

எந்தக் காரியத்திலே யார் ஈடுபட்டாலும், அவர்கள் இதயசுத்தியோடு ஈடுபடவேண்டும்; தூய உணர்வோடு ஈடுபடவேண்டும்; நம்பிக்கை யோடு ஈடுபட வேண்டும்; முழு நம்பிக்கையோடு ஈடுபடவேண்டும். ஆகவே அப்படிப்பட்ட ஒரு வழியைத் தனக்கெனத் தேர்ந்தெடுத்து, கடந்த பத்தாண்டு காலமாக, ''ஏதோ ஒரு குன்றின் மீது ஒரு சிறிய கோயில் அல்லது மண்டபம் இருந்தது'' என்று இருந்த ஒரு வரலாற்றை மாற்றி, இன்றைக்கு அதைச் சுற்றிலும் சுமார் நாற்பது லட்ச ரூபாய் பெறுமானமுள்ள அள விற்கு ஆலயங்களும், மண்டபங்களும், கோபு ரங்களும், கடைவீதிகளும், மக்கள் வாழ்வதற்கு ஏற்ற வசதிகளும் ஏற்படுத்தியுள்ளார்.

அதுமாத்திரமல்ல, ஆண்டவன் திருப்பணி என்பது, ''மக்கள் தொண்டு மகேசன் தொண்டு'' என்று நம்முடைய முன்னோர்கள் சொன்ன தற்கு ஏற்ப, மக்களுக்குத் தொண்டு செய்வது தான் மகேசனுக்குத் தொண்டு செய்வது என்ற அடிப்படை இலக்கணத்தைத் தன்னுடைய உள்ளத்திலே ஏற்றுக்கொண்ட பாலமுருகன் அடிமை அவர்கள், இங்கே மக்களுக்குத்தேவை யான காரியங்களிலேயும் ஈடுபட்டு, அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணு கிறபொழுதுதான்,

நாற்பதாண்டு காலமாக, கோவில்களுக் குள்ளே சென்று வணங்குவதுதான் பக்தி என்ற இலக்கணத்திற்குக் கொஞ்சம் அப்பாற்பட்ட நிலைமையிலே இருக்கின்ற எங்களைப் போன்றவர்கள், எந்த இடத்தில் மனிதன் தூய்மையாக வாழ்கிறானோ அங்கே தெய்வம் அவனைத் தேடி வருகிறது என்ற நம்பிக்கையைப் பெற்ற நாங்கள், மனிதனுக்கு மனிதன் துரோகம் நினைக்காமல் எவன் வாழ் கிறானோ அவன்தான் உண்மையான பக்தன் என்ற உணர்வின்பாற்பட்ட நாங்கள்,

ஏழைகளுக்கு இரங்குகின்ற உணர்வும் பச் சாதாபமும், மனிதனுக்கு மனிதன் உதவுகின்ற தன்மையும், கஷ்டப்படுகிறவனுக்குக்கைகொடுக் கின்ற தன்மையும், பெற்றவர்களைப்பெரியவர் வர்களாக வணங்குகின்ற நாங்கள், 'அன்னை யும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று முன் னோர்கள் சொன்ன அந்த அறிவுரையிலே, அறவுரையிலே நடக்கின்ற நாங்கள், எவன் வாழ்க்கையிலே ஒழுக்கம் கடைப்பிடித்து நடக் கின்றானோ அவன்தான் பக்தன் என்ற எண் ணத்தின் அடிப்படையிலே வாழ்ந்துகொண்டிருக் கின்ற நாங்கள், எங்களைப்போன்றவர்களுக்குக் கூட, இப்படிப்பட்ட முயற்சிகளைப் பார்க்கிற பொழுது, அவர் யார் செய்தாலும்சரி, எந்தப் பெயரால் செய்தாலும் சரி, அது மக்களுக் காக, சமுதாயத்திற்காகச் செய்கிறார்களென்று எண்ணுகிறபொழுது,

அதற்காக ஒரு பத்தாண்டு காலம் தன் னுடைய வாழ்வை ஒப்படைக்கிறார்கள் என்று பார்க்கிறபொழுது, நான் அந்தக் காரியத்திலே ஈடுபட முடியாதவன் என்று என்னை வைத்துப் பார்த்து, நான் அவரை மதிக்கிறேன், வணங்கு கின்றேன்.

சமுதாயத்திலே பலபேர் வேகமாகப் பய ணம் செய்துகொண்டிருக்கிறார்கள். எதற்கு? அவரவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைக் காக! அவரவர்களுடைய பிள்ளை குட்டிகளைக் காப்பாற்றுவதற்காக! அவரவர்களுடைய குடும்பத்தைக் கடைத்தேற்றுவதற்காக! ஆயி ரம் ரூபாய் வந்தால் போதாது, இரண்டா யிரம் வரவேண்டும். இரண்டாயிரம் வந்தால் திருப்தி அடைவதில்லை, ஐயாயிரம் வரவேண் டும். ஐயாயிரம் வந்தால், அதோ மாடமாளி கையிலே இருக்கிறானே அவனைப்போல வாழ முடியவில்லையே! இன்னுமொரு லட்சம் வர வேண்டும். அதை எப்படிக் கொள்ளையடிப் பது? எப்படி ஊரை அடித்து உலையிலே போடுவது? எவன் அயர்ந்திருந்தால், எவன் கையிலே இருந்து எடுத்துக் கொள்வது? எவனை ஏமாற்றுவது? எப்படி ஏமாற்றுவது? என்று திட்டமிட்டுக் கொண்டு வேகவேகமாகக் காரி யங்களிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற இந்தச் சமுதாயத்தில், ஒரு பத்தாண்டு காலம் தான் எடுத்துக் கொண்டிருக்கின்ற, தன்னுடைய இதயத்திலே ஏற்றுக்கொண்ட,

உள்ளத்திலே, உணர்விலே, இரத்தத்திலே கலந்து தன்னுடைய உயிரோடு இணைத்துக் கொண்டிருக்கின்ற, ஒரு தத்துவத்துக்காக....

தன்னுடைய வாழ்வை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறவர் என்ற முறையிலே, பால முருகனடிமை அவர்களைப் போற்றுகின்றேன்.

அவரது பணி மக்களுக்காகப் பயன்படு கிறது என்று பார்க்கிறபொழுது, எங்களைப் போன்றவர்கள்கூட, அவர்களை வாழ்த்து கிறோம்! வணங்குகிறோம் என்று சொல்வது தவிர, வேறு எங்களுக்கு வார்த்தை கிடைக்க வில்லை.

இன்றைக்குக்கூட, இந்த இடத்தில் ஒரு மண்டபத்தைத் திறந்து வையுங்கள்! அல்லது இந்தக் கோபுரத்தைத் திறந்து வையுங்கள்! அல்லது இதற்குக் குடமுழுக்கு நடத்துகிறோம் அதனைப் பார்க்க வாருங்கள்! வாழ்த்த வாருங் கள்! என்று அழைத்திருந்தால்கூட, எனக்கு அவ்வளவு மகிழ்வு ஏற்பட்டிருக்காது. ஆனால் மனிதனுடைய உயிரைக் காப்பாற்றுவதற்கு, நோய் நொடிகளைத் தீர்ப்பதற்கு, இன் றைக்கு ஏற்பட்டிருக்கின்ற மருத்துவ வசதி களைப் பெறமுடியாமல் திண்டாடிக் கொண்டி ருக்கிறானே-ஏழை, எளியவன், பாட்டாளி, தொழிலாளி - தாழ்த்தப்பட்டவன், அவனுக்குக் கைநீட்டிய இடத்திலே ஒரு மருத்துவம் கிடைக் கிறது.

இலவசமாகக் கிடைக்கிறது என்று சொல்லு கிற அளவுக்கு, இந்தக் கிராமப்புறத்திலே சித்த மருத்துவ மனையைத் துவக்குகிறார்கள் என் றால், அதிலே இன்றைக்குஇரண்டாயிரம் ரூபாய் அளவிற்கு மருந்துகளைச் சேமித்து வைத்து, இந்தப்பகுதி மக்களுக்கு அவற்றை இலவசமாக வழங்கி நோய்நொடிகளைத் தடுக்கிறார்கள் என்றால், அது மிகவும் போற்றிப் புகழப்பட வேண்டிய ஒன்று அல்லவா ?

ஆண்டவனிடத்திலே நாம் போய் எதை வேண்டுகிறோம்! ''என்னை நீண்ட காலம் இந்த உலகத்திலே வாழ வை முருகா!'' என்று கேட்கிறோம். ''எனக்கு நல்ல வாழ் வைத் தரவேண்டும்'' என்று கேட்கிறோம். அந்த ஆண்டவன் இங்கே சித்த மருத்துவ மனையைத் துவக்கி, '' நீ நோய்நொடி இல்லா மல் இருந்தால்தான் நீண்டகாலம் வாழலாம்!'' என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றமுறை யிலே, இந்த மருத்துவமனையைத் திறந்து வைக்கின்ற-உருவாக்குகின்ற முயற்சியிலே பால முருகனடிமை அவர்கள், ஈடுபட்டிருக்கின்றார் கள். அதைத் திறந்து வைக்க என்னை அழைக் கிறார்கள் என்பதை அறிகிறபோது, ''இந் நாட்டு மக்களுக்காகப் பணியாற்றுகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அமைச் சர் என்ற முறையிலும் சரி! இந்த நாட்டுக் குடி மகன் என்ற முறையிலும் சரி! ஒரு நாற்ப தாண்டுகளுக்கு மேலாக ஒரு பகுத்தறிவு இயக் கத்தின் பாரம்பரியத்திலே வந்து கொண்டிருக் கின்ற தொண்டன் என்ற முறையிலேயும் சரி! ஒரு குடும்பத்தினுடைய தலைவன் என்றமுறை யிலேயும் சரி! இந்த நாட்டினுடைய ஏழை, எளிய மக்களுக்கு நன்மைகள் செய்கிற காரி யத்திலே நம்முடைய பங்கும் அதிலே சேரட் டும்!'' என்று எண்ணி, இதில் கலந்து கொள்

வதிலே நான் உண்மையிலேயே பெருமிதம் கொள்கிறேன்.

இன்றைக்குப் பாலமுருகனடிமை அவர்களுடைய முயற்சியாலே, இந்தத் திருக்கோயிலின் திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. மற்ற கோயில்களிலே திருப்பணிகள் நடைபெற வேண்டுமானால், குழுக்கள் அமைக்கப்படும். அது அரசாங்க நிர்வாகத்தினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும். ஆனால் இந்த முயற்சிகளுக்கு அப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் இல்லை!

''தவத்திரு பாலமுருகனடிமை அவர்கள் விரும்புகிற முறையிலே, காரியங்கள் நடத்தலாம் என்று அரசு அதற்கு அனுமதியளித்திருக்கிறது'' என்பதை நான் சட்டமன்றத்திலே தெரிவித்தேன். அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனக்கு எழுந்த வியப்பு, ''எப்படி இந்த ஆலயத்துக்கு இந்தப் பத்தாண்டு காலத்திலே இவ்வளவு பெரிய மகிமை ஏற்பட்டது? முருகன் கோயில்கள் எத்தனையோ இடங்களிலே இருக்கின்றனவே, இந்த இரத்தினகிரி முருகனுக்குமாத்திரம் எப்படி இவ்வளவு பெருமை ஏற்பட்டது? அதுவும் 1968-ஆம் ஆண்டுக்குப் பிறகு, இவர் வந்து தங்கியதற்குப் பிறகு எப்படி ஏற்பட்டது'' என்று நான் கேட்டேன்.

அதற்குப் பாலமுருகனடிமைஅவர்கள், மாயம் இல்லை, மந்திரம் இல்லை, தந்திரமெல்லாம் ஒன்றும் இல்லை. மனிதன் கட்டுப்பாட்டோடு, தூய உணர்வோடு பிரார்த்தித்தால், அவர்கள் எழுதிக்காட்டிய வார்த்தையை நான் சரியாகச் சொல்லுகிறேன்என்றே கருதுகிறேன். ''பிரார்த்தனை செய்தால் ஒருவன் வாழ்க்கையிலே எண்ணியதைப் பெறமுடியும்'' என்று சொன்னார்கள். ஆகவே பிரார்த்தனை என்பது ஒரு கட்டுக்குள்ளே வருவதுதான், கட்டுப்படுத்துவதுதான். மனத்தைக் கட்டுப்படுத்துவதுதான் பிரார்த்தனை. ஒழுக்கமாக இருக்கவேண்டும், உயர்வாக எண்ண வேண்டும், அமைதியாக வாழவேண்டும், அடுத்தவனைக் கெடுக்க நினைக்கக் கூடாது. இப்படி இப்படிச் சில தத்துவங்களை உள்ளடக்கிய ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளே இருப்பதுதான், பிரார்த்தனை.

என்னை மாத்திரம் வாழவைத்து, மற்றவர்களையெல்லாம் தொலைத்துவிடு என்று வணங்குவது, பிரார்த்தனை அல்ல. ஆகவே பிரார்த்தனை என்பதும், ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளே வருவதுதான். மனிதன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டுவிடுவதுதான். பத்தாண்டு காலம் அவர்கள் இங்கே துறவியாக இருக்கிறார்கள். ஆசை மனைவி, பாசத்திற்குரிய பிள்ளைகள் இருக்கிறார்கள், வணக்கத்திற்குரிய தந்தை இருக்கிறார். அவர்களை எல்லாம் தூரவைத்துவிட்டு, தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு பிரார்த்திக்கிற உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அது போற்றத் தக்கதேயாகும்.

தேவையான பொழுது மனிதனுக்குத் தேவையான சட்டங்களைச் செய்வதுதான் அரசு! அதற்காகத்தான் அமைச்சு! அந்தக் காரியங்களைச் செய்வதற்கு இன்றைக்கு நம்முடைய முதல்வராக இருக்கின்ற - மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற அரசு-என்றைக்கும் தயங்காது.

அது எங்களுடைய கொள்கைக்கு ஈடுபாடா! அதுபற்றி அல்ல பிரச்சினை. அது மக்களுடைய பிரச்சினையா! என்றுதான், நாங்கள் அந்தத் தராசிலே வைத்துப் பார்க்கிறோம். அந்த உரைகல்லிலே உறைத்துப் பார்க்கிறோம். மக்கள் விரும்புகிறார்கள் என்றால்.. மக்கள் வழங்குவதற்கு வருகிறார்கள் என்றால்.. மக்கள் நம்பித் தருகிறார்கள் என்றால்... அந்த நம்பிக்கைக்கு உரியவராகப் பாலமுருகனடிமை அவர்கள் விளங்குகிறார்கள் என்றால்...அவர்களை நம்புவதற்கு அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம்?

இலட்சோப லட்சமாக மக்கள் நம்பித் தருகிறார்கள். மக்கள் நம்பித் தந்ததை இங்கே வைத்திருக்கிறார்கள். ஆபரணமாகக் காட்டுகிறார்! கோபுரமாகக் கட்டி எழுப்பி இருக்கிறார்! மண்டபம் கட்டப்போகிறேன் என்கிறார்! திருக்குளம் வெட்டப்போகிறேன் என்கிறார்! தங்கத்தேர் செய்திருக்கிறேன் என்கிறார்! கடைகளைக் கட்டி வைத்திருக்கிறேன் என்கிறார்! காலனி கட்டியிருக்கிறேன் என்கிறார்! பள்ளிக்கட்டிடம் எழுப்பி இருக்கிறேன் பார் என்கிறார்! சித்தமருத்துவமனையை வைத்திருக்கிறேன் பார் என்கிறார்! இவ்வளவும் பொது மக்கள் அவரை நம்பித் தந்ததை, இப்படி இன்றைக்குப் பொது மக்களுடைய பணிக்காகச் செய்து காட்டிக் கொண்டிருக்கிற அவருடைய முயற்சியையும், சிறந்த பணியினையும் நாங்கள் மதிக்கிறோம்.

இன்றைக்கு இரத்தினகிரிக் கோயில் வளர்ந்து வருகிறது. அதை அவர்களைக் கேட்டால், முருகனுடைய அருள் என்பார்கள். என்னைக்கேட்டால் பாலமுருகன் அடிமையுடைய முயற்சி என்று சொல்லுவேன். அல்லது மற்றவர்களைக் கேட்டால், இந்த நாட்டு மக்கள் தருகின்ற பணம் என்று சொல்லுவார்கள். ஆனால் இது யாருடைய முயற்சி என்றாலும் மக்களுக்கான முயற்சி! மக்களுக்காக நடைபெறுகின்ற முயற்சி! இந்த இரண்டையும் இன்றைக்கே பார்க்கிற வாய்ப்பை நான் பெற்றேன். காடாகக் கிடந்த இடத்தை-இவ்வளவு பெரிய அற்புதமான கோவிலாக மாற்றியிருக்கின்ற இந்தக் காட்சியையும் பார்க்கிறேன்.

எந்தப் பெயராலே ஏற்பட்டது என்பது அல்ல.....
எந்த உருவத்தை வைத்துக்கொண்டு ஏற்பட்டது
என்பது அல்ல...
எந்த இலட்சியத்தைச் சொல்லி ஏற்பட்டது
என்பது அல்ல.

ஆனால், இந்த நாட்டு மக்களுக்குத்தேவையானது, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு வணங்குவோம்! அதற்கு உரியவர்களைப் பாராட்டுவோம்! அதற்குத் தலைசாய்ப்

போம்! என்பதுதான், இன்றைக்கு நாம் தெரிந்துகொள்ளவேண்டிய ஒன்று! நாம் புரிந்து கொள்ளவேண்டிய ஒன்று!

''மக்கள் தொண்டு மகேசன் தொண்டு'' என்று இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ''அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பிலே கலந்து கொள்கின்ற ஒருபேறு பெற்றேன்'' என்று, நான் உண்மையிலேயே மகிழ்கிறேன்! இன்றைக்கு ஆலயங்களுடைய பொருளாதார நிலைமை தமிழ்நாட்டிலே எவ்வளவுமோசமாகஇருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால், இரத்தினகிரியைப் பார்க்கிறபொழுது, இப்படிப்பட்ட பாலமுருகனடிமை, இந்த நாட்டிலே இன்னும் அதிகமாக வரக்கூடாதா? என்று எனக்குத் தோன்றுகிறது!

உண்மையிலேயே பக்தர்கள்-ஆண்டவனை வணங்குகிறவர்கள், ஆண்டவனின்மைந்தர்கள், திரு. பாலமுருகனடிமை அவர்களின் உழைப்பை எண்ணிப் பெருமைப்படவேண்டும். இப்படிப்பட்ட பாலமுருகனடிமைகள், இந்த நாட்டிலே தோன்றினால் ஆலயச் சொத்துக்கள் எப்படிக் காப்பாற்றப்படும்? எப்படி நடக்கும்? அவைகள் எல்லாம் எப்படி மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே திரும்பக் கிடைக்குப் என்று எண்ணிப் பார்க்கிறேன்.

பாலமுருகனடிமை அவர்கள் சேர்த்த இந்த நாற்பது லட்சத்திற்கும், சரியாகக்கணக்கு வைத்திருக்கின்றார்கள். ''கண்ணாடி போல் வைத்திருக்கிறார்கள்'' என்று சொல்லுவார்கள், சாதாரணமாகப் பழமொழி. அவர் கண்ணாடியைப் போலத்தான் வைத்திருக்கிறார். அந்தக் கணக்குப் புத்தகத்தை அற்புதமாக நிழற்படம் எடுத்து, அதைப் பக்கத்திலே வைத்து, அந்தப் படமும் இருக்கிறது, அந்தக் கிரீடமும் இருக்கிறது. அந்தக் கிரீடத்திற்குரிய விவரமும் இருக்கிறது பக்கத்திலே.

ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபா, இரத்தினகிரியின் ஆண்டுவருமானம் என்கிறார்கள். எண்ணிப் பாருங்கள். இவைகளை எல்லாம் இவர் செய்கிறார் என்கிறபோது, இவர் யாருக்காகச் செய்தார்? இதை ஒரு நாள் அவர்கள் குடும்பத்திற்கு எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தால் ஒன்றுமே செய்வதற்கு முடியாது. பலர் அப்படி எழுதி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கும் அது குறித்து நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'' என்ற அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற—

இந்த நிறுவனம் வளர வேண்டும்!
வாழ வேண்டும்! மக்களுக்குப் பயன்படவேண்டும்
என்று வாழ்த்தி,

இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த பாலமுருகன் அடிமை அவர்களுக்கும், மற்றவர்களுக்கும், அறநிலையத் துறையினருக்கும் நன்றிகூறி, விடைபெற்றுக் கொள்கின்றேன்,

வணக்கம்.

---

**திருவெழுகூற்றிருக்கைக் கல்வெட்டுத் திறப்புவிழா :** கும்பகோணம் அருள்மிகு சாரங்கபாணி சுவாமி திருக்கோயிலில், 26.9.1980 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில், திருவரங்கம் பெரியாச்ரமம் ஸ்ரீமத் ஆண்டவன் திருக்குடந்தை வேதாந்த இராமானுஜ மகா தேசிகன் சுவாமிகள் திருமுன்னிலையில், தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. யு. சுப்ரமணியன் அவர்கள், திருவெழுகூற்றிருக்கைக் கல்வெட்டைத் திறந்து வைத்தார்கள். காஞ்சிபுரம் நாயனாப்பிள்ளை மாணவர் திரு. வேங்கடவரதன் அவர்கள் திவ்வியப் பிரபந்த இன்னிசை வழங்கினார்கள். உதவியாணையர் திரு. ச.பெ. முனிசாமி அவர்கள் வரவேற்புரை கூறினார். திருவரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். பேராசிரியர் திரு. சி. ஜகந்நாதாச்சாரியார், திருச்சிற்றம்பலம் திரு.மு. அருணாசலம், தஞ்சை என்.எஸ். தாதாச்சாரியார், திரு. எல். இராஜகோபாலன், திரு.ஆர். இராமசேஷன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். செயல் அலுவலர் திரு. மு. சுப்பையா அவர்கள் நன்றியுரை நவின்றார்.

---

# முருகன் உலவிய திருவிடைக்கழி

வலையப்பேட்டை திரு. கிருஷ்ணன்
திருவல்லிக்கேணி சென்னை.

முருகப்பெருமான் தமிழ்நாட்டில் மிகவும் விரும்பி இரண்டு இடங்களில் உலவினாராம்! இந்தச் செய்தியை நான் சொல்லவில்லை. சொன்னவரும் சாதாரண மனிதரல்லர்! முருகப்பெருமான் திருவருட் கடலைப் பருகி அதன் இன்பத்தை நமக்கு வாரி வழங்கிய வள்ளலான அருணகிரிநாதசுவாமிகள், அவரது அற்புதமிக்க புகழான திருப்புகழ் என்னும் செஞ்சொற் சந்தக்கவி மாலையில் குறிப்பிடுகிறார். ஓர் இடம்:

குறவர்கூட்டத்தில் வந்து கிழவனாய்ப் புக்கு நின்று குருவியோட்டித் திரிந்த தவமானான வள்ளியைக் குணமதாக்கிச் சிறந்த வடிவுகாட்டிப் புணர்ந்த இடமான வள்ளிமலை.

''வள்ளிபடர்கின்ற வள்ளிமலை சென்று
வள்ளியை மணந்த பெருமாளே''

மற்றொரு இடம்:

முருகன் கடப்ப மாலையை விட்டுக் குரா மாலையைப் புனைந்து அக் குராவடி நிழல் தனில் உலவிய இடம், திருவிடைக்கழி.

''சிறக்கு மாதவ முனிவர் மகபதி
இருக்கு வேதனும் இமையவர் பரவிய
திருக்குராவடி நிழல்தனில் உலாவிய
பெருமாளே''

வள்ளிமலை இருக்குமிடம் அனைவருக்கும் தெரியும். ஆனால் திருவிடைக்கழி இருக்கும் இடம் பலர் அறியவில்லை. அமாவாசையைப் பௌர்ணமியாகக் காட்டச்செய்து அதிசயம் நிகழ்த்தி, நமக்கெல்லாம் உலக நாயகியின் அருள் திறத்தை எளிதில் பெற உதவிய அபிராமி பட்டரின் அற்புதநூலான ''அபிராமி அந்தாதி'' பெற்ற இடம் திருக்கடவூர். மாயூரத்திற்கு அருகிலுள்ளது. திருக்கடவூர் அருகில் தில்லையாடி என்னும் சரித்திர பிரசித்தி பெற்ற வள்ளியம்மை நகர் உள்ளது. அதற்கு மேற்கே இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளதுதான் திருவிடைக்கழி என்னும் தலம்.

திருவிடைக்கழி செல்லத் தில்லையாடியிலிருந்து சாதாரண மண் சாலையுள்ளது. கார்கள், பஸ் முதலியன செல்லலாம். இத்தகு வியத்தகு தலமானது, வள்ளிமலை பிரபலமடைந்த அளவிற்கு மக்களுக்குத் தெரியவரவில்லை. குறிஞ்சி நிலக்கடவுளான முருகன் மரத்தினடியில், அதுவும் மிகவும் புனிதம் வாய்ந்த திருக்குரா மரத்தினடியில் குமார சிவமாக அமர்ந்து அருள்பொழியும் ஒரே தலம் திருவிடைக்கழி. குராமலர் முருகனுக்கு மிகவும் உகந்தது.

''விழைவு குராப்புனையுங் குமரா''

என்று அருணகிரியார் பாடுகிறார். அவன் விரும்பி உறையும் இடங்களைப் பற்றிப்பாடும் அவர்,

''கொந்துவார் குரவடியினும் அடியார்
சிந்தை வாரிஜ நடுவினும் நெறிபல
கொண்டவேத நன்முடியினும் மருவியகுருநாத
கொங்கிலேர் தரு பழனியில் அறுமுக
செந்தில் காவல, தணிகையில் இணையிலி''

என்று பாடும்பொழுது முதலில் குராமரத்தினடியில் உறையும் திருவிடைக்கழி முருகனைக் குறிப்பிடுகிறார்.

இத்தலத்தில் மிகவும் அதிசயமான அமைப்பு; பிரதோஷ நாயகர், நடராஜர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், சண்டிகேஸ்வரர் ஆகிய எல்லாமூர்த்தங்களும் சுப்பிரமணிய சொரூபமாகவே விளங்குகின்றார்கள். நடராஜப்பெருமான் வலதுகையில் வேலும், இடதுகையில்வில்லும் கொண்டு இரணியாசுர சம்மாரமூர்த்தி என்ற பெயரில் காட்சியளிக்கிறார். சூரனின் மகன் இரணியாசுரனைச் சம்மரித்த இடம் திருவிடைக்கழி எனப் புராணம் கூறுகின்றது. திருவிடைக்கழி முருகனின் திருவுருவ அழகு எப்படிப்பட்டது? முருகன் திருக்கோலங்கள் பதினாறு. அதில் சுப்ரமணிய மூர்த்தியாய் இருப்பது ஒன்று. குமாரதந்திரத்தில் கூறப்பெற்றுள்ள அமைப்பில் ஒருமுகம், இரண்டு

கரங்கள், வலதுகரம் அபயம்-இடதுகரம் தொடையில். இந்த அமைப்பே திருவிடைக் கழியிலும் உள்ளது.

இந்த பாலகுமாரனைச் சென்று கண்டு தொழ நாலாயிரங் கண் வேண்டும். அத்தகைய ஒப்பற்ற அழகு காண்பாரைத் தன்பால் ஈர்த்துக் காதல்கொள்ளச் செய்யும் கவின்மிகு வனப்புடன் முழுமதியைப் போன்ற முகம். மலர்விழிகள், வயிரம் பதித்த செஞ்சுட்டி முதலிய திருவாபரணங்கள், இரத்தினக் குண்டலங்கள், தன்னை யடைந்தவர்களின் குறைகளை நீக்கி, வேண்டிய வரங்களை அளிக்கும் அபயகரம். அழகிய மணி பதித்த ஆடைகள். நம்முடைய பாவ வினைகளை அகற்றும் பாதாரவிந்தங்கள். இவை முழுவதுமாகச் சேர்ந்த அழகிய திருக்குமரனின் பேரழகுதான் என்னே!

வெளியில் தெற்கு நோக்கி அமைந்துள்ள மண்டபத்தில், சசிவல்லியான தேவையானை, தலையைச் சற்று வலதுபுறமாகச் சாய்த்து, அந்தத் திருக்குமாரனின் அழகில் மயங்கிக் காட்சியளிக்கும் நிலையினைக் கண்டவர் விண்டிலர். இக்குமரப் பெருமான் சந்நிதிக்குப் பின்புறம் (கர்ப்பக்கிரகத்தினுள்ளேயே) பாவநாசப் பெருமான் கருவறையும் அமைந்துள்ளது. இவ்வமைப்பு அதி அற்புதமானது. முருகனின் முன்னே ஸ்படிகலிங்கம் உள்ளது. ஆனால் அகிலாண்ட நாயகிக்குச் சந்நிதி, இக்கோயிலில் இல்லாமல் அருகிலுள்ள தரங்கம்பாடி கோயிலில் விளங்குகின்றது.

இக்கோயிலுக்கு எதிர்நோக்கிய வண்ணம் ஐந்நூற்று விநாயகர் திருக்கோயில் இருக்கின்றது. இதில் பதினாறு விநாயகர் திருவுருவங்கள் உள்ளன. வெளித் திருச்சுற்றில் திருக்காமேசுவரர் சந்நிதியுள்ளது. இவரே இத்தலத்து ஆதிமூர்த்தியாவார். மூலவர் கருவறையை அடுத்து வசிட்டரால் பூசிக்கப்பெற்ற வசிட்டலிங்கம் உள்ளது. சிவசண்டேசுவரர், குகசண்டேசுவரர் சந்நிதிகள் உண்டு. ஆனால் நவக்கிரக சந்நிதிகள் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

அர்த்த சாமத்தில் மட்டும் முருகப்பெருமான் குராமரத்தின் கீழிருந்து தவம்புரிந்த இடத்திலுள்ள பலிபீடத்துக்கு, முதன் முதலில் அபிசேக ஆராதனைகள் நடைபெறுகிறது. சிவபெருமானின் திருவருளைப் பெற்றபின் முருகப்பெருமானைப் பாடிப் பரவியவர் இருவர். ஒருவர் நக்கீரர். இறைவனது பாடலில் குற்றம் எனக்கூறி, அதனால் சாபம் பெற்று, யாத்திரை செல்லும் வழியில், அனுஷ்டானம் செய்யும் வேளையில் அதிலிருந்து சிந்தனை மாறி மனம் வேறொன்றில் லயித்தபோது, அங்கு தோன்றிய பூதம் அவரைச் சிறைபிடித்தது. அவ்வேளையில் ''திருமுருகாற்றுப்படை'' என்னும் சகலவேத சாரமான புகழ்மாலையை முருகனுக்கு அளித்தார். முருகப்பெருமான் உடனே அங்கு தோன்றி அப்பூதத்தினைக் கொன்று முன்பே சிறையிடப்பட்ட 999 பேர்களையும் விடுவித்தார் என்பது வரலாறு.

மற்றொருவர் சேந்தனார்: சேந்தனார் பட்டினத்தடிகளுக்குக் கணக்கராக இருந்து, பின் சிதம்பரத்தில் விறகு விற்று வாழ்ந்துவரும் நாளில் ஒருவருக்காவது உணவளிக்கும் கடமையை மேற்கொண்டிருந்தார். பலநாட்கள் தொடர்ந்து பெய்த மழையால் விறகு விற்க இயலாமையால், வருவாய் இன்றி அதனால் பசியால் வருந்திய சேந்தனார், ஏதோகிடைத்த சிறுபொருளில் வாங்கிய மாவினைத் தம் மனைவியிடம் கொடுத்துக் களியாக்கச் செய்து சிவனடியாரை எதிர்பார்த்திருந்தார். சிவபெருமான் முதுமைப்பருவமுடைய அடியவராகச் சேந்தனார் வீட்டிற்குச் சென்று, அவர் அன்பினால் அளித்த களியை உண்டு மகிழ்ந்து, அடுத்த வேளைக்கும் வேண்டும் என மீதியிருந்த களியைத் தன் பழங் கந்தையில் முடித்துக்கொண்டு பொன்னம்பலத்தை அடைந்தார்.

இஃது இவ்வாறிருக்கத் தில்லையில் கூத்தப்பெருமானுக்குத் தான் நடத்தும் வழிபாட்டில் சிலம்பொலி கேட்டு மகிழ்தலை நியதியாகக் கொண்ட சோழ மன்னன் அன்று முழுவதும் காத்திருந்தும் அவ்வொலியைக் கேட்கப் பெறாது வருந்தித் துயில் கொண்டான். இறைவன் அவனது கனவில் தோன்றி ''வேந்தனே, கவலை கொள்ளற்க இன்றுநாம் சேந்தன் அளித்த களியமுதை உண்ணச் சென்றமையால் நீ நடத்தும் வழிபாட்டிற்கு வரத் தாழ்த்தோம்' என்று கூறி மறைந்தருளினார்.

அந்நிலையில் விழிப்புற்ற வேந்தன், சேந்தனாரைக் காண விரும்பி விடியற்காலத்தே தில்லைச் சிற்றம்பலப் பெருமானை வணங்கச் சென்றவர், பொன்னம்பலத்திற் களியமுது சிந்திக் கிடத்தலைக் கண்டு, தான் கண்ட கனவின் உண்மையைத் தில்லைவாழ் அந்தணர் முதலிய எல்லார்க்கும் தெரிவித்தார். அதனை உணர்ந்த பலரும், சேந்தனாராகிய அடியவரைக் கண்டு வழிபடவேண்டும்மெனப் பெரிதும் விரும்பியுற்றிருந்தனர். மார்கழித் திருவாதிரைத் திருநாளில் மழைபெய்தமையால் திருத்தேர் சேற்றில் அழுந்தி ஓடாது நின்ற பொழுது, ''சேந்தா! தேர் நடக்கப் பல்லாண்டு பாடுக!'' என்று ஒரு வான் ஒலி எல்லோர்க்கும் கேட்கும்படியாகத் தோன்றியது. தேரிழுக்கும் அடியார் குழுவில் நின்ற சேந்தனார், ''மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்'' எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார். தேர் மிக எளிதில் நிலைக்கு வந்து சேர்ந்தது. இவ்வற்புதத்தைக் கண்டார் அனைவரும் சேந்தனாரது பேரன்பின் திறத்தை எண்ணி நெஞ்சம் நெக்குருகினர்.

இவ்வாறாகச் சிவபெருமான் திருவருள் பெற்றுத் திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார், பின் திருவிடைக்கழியை அடைந்து அங்குள்ள குராவடிக் குமரனைத் திருவிசைப்பா என்னும் திருப்பதிகத்தில் பதினொரு பாடல்களால் சிறப்பித்துள்ளார். நற்றாயிரங்கல் என்னும்

அகப்பொருள்துறையில் அமைந்துள்ள இப்பதிகம், பன்னிரு திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப்பெற்றுள்ளது. பன்னிரு திருமுறைகளில் பாடப்பெற்றுள்ள ஒரே தனி முருகன்தலம் திருவிடைக்கழிதான்.

முதன் முதலில் 9-ஆம் நூற்றாண்டில் தமிழிலக்கியத்தில் சுப்பிரமணியன் என்னும்சொல் கையாளப்பெறுவது இப்பதிகத்தில்தான். இதோ ஒரு பாடல்:

''கோவினை பவளக் குழமணக் கோலக்
குழாங்கள் சூழ்கோழிவேல் கொடியோன்
காவனற் சேனை யென்னக் காப்பவன்என்
பொன்னை மேகலை கவர்வானே
தேவிநற் றலைவன் திருவிடைக்கழியில்
திருக்குரா நிழல்கீழ் நின்ற
தூவி நற்பீலி மாமயில் ஊரும்
சுப்பிரமணியன் தானே''

—திருவிசைப்பா.

அருணகிரிநாதர் திருவிடைக்கழி அழகனை எட்டுத் திருப்புகழில் சிறப்பிக்கிறார். தவிர இதர தலத் திருப்புகழ் சிலவற்றிலும் வேல்விருத்தம், மயில்விருத்தம், திருவகுப்புகளிலும் இத்தலத்தைக் குறிப்பிடுகிறார். வேல் விருத்தத்தில் பாடுகிறார்.

''தாதார் மலர்ச்சுனை பழநிமலை சோலை
மலை
தனிப்பரங் குன்றேரகம்
சணிகை செந்தூர் இடைக்கழி ஆவினன்குடி
தடங்சடல் இலங்கை அதனிற்
போதார் பொழிற் கதிர்காமத் தலத்தினைப்
பகமும் அவரவர் நாவினிற்
புந்தியில் அமர்ந்தவன் கந்தன் முருகன்குசன்
புங்கவன் செங்கைவேலே''

பழநி, பழமுதிர்சோலை ,திருப்பரங்குன்றம், திருவேரகம், திருத்தணிகை, திருச்செந்தூர் திருவிடைக்கழி திருவாவினன்குடி, இலங்கையிலுள்ள கதிர்காமம் என்ற திருத்தலங்களைப் போற்றிப் புகழ்கின்ற அடியார்களின் நாவிலும், அறிவிலும், உள்ளத்திலும் வீற்றிருப்பவரும், கந்தக்கடவுளும் ,முருகப்பெருமானும், குகமூர்த்தியும், தூயவரும் ஆகிய எம்பிரானுடைய செவ்விய திருக்கை வேலாயுதமே என்கிறார்.

''ஏரகம் இடைக்கழி சிராமலை திருப்பழநி
ஏரணி செருத்தணியில் வாசக்சாரனும்''

என்று திருவேளைக்காரன் வகுப்பினும்,
'அருணையும் இலஞ்சியும் செந்தூர் திருப்பழநி
அடியர்மன பங்கயஞ் செங்கோடு
இடைக்கழியும்''

என்று பூத வேதாள வகுப்பிலும், மற்றும் வேடிச்சிகாவலன் வகுப்பு, பொருளைத் தலகைவகுப்பு ஆகியவைகளிலும் குறிப்பிடுகிறார்.

குராவடிக் குமரன் அருணகிரியார்க்கு இத்தலத்தில் அறிவும் அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும் அறி'' ஊஎன இமைப்பொழுதில் அனுக்கிரகித்தான். அப்பெருமானிடம் இத்தலத் திருப்புகழில் நமக்காகச் சகல செல்வ யோக மிக்கபெருவாழ்வை வேண்டுகிறார்.

''பகருமுத்தமிழ்ப் பொருளு மெய்த்தவப்
பயனும் எப்படிப் பலவாழ்வும்
பழைய முத்தியிற் பதமு நட்புறப்
பரவுகற்பகத் தருவாழ்வும்
புகரில் புத்தியுற் றரசு பெற்றுறப்
பொலியும் அற்புதப் பெருவாழ்வும்
புலனகற்றிடப் பலவி தத்தினைப்
புகழ்பலத்தினைத் தரவேணும்''

இத்தகைய மிகச் சிறப்பு வாய்ந்த தலத்தினை தரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பிள்ளைத்தமிழிலும், தில்லையாளி தம்பியப்ப செட்டியார் அவர்கள் அந்தாதியிலும், காஞ்சிபுரம் சிதம்பரமுனிவர் சேத்திரக்கோவை பிள்ளைத் தமிழிலும், வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் ஒரு பதிகத்தாலும், அருட்கவி சாதுராம்சுவாமிகள் சமீபத்தில் சண்தப்பாவிலும் போற்றியுள்ளனர்

ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பெற்றதாகத் தோன்றும் இக்கோயிலில் முசுகுந்த சக்ரவர்த்தி திருப்பணி செய்துள்ளார் இங்குள்ள கல்வெட்டுக் களில் குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாளவன் என்ற சோழனது பள்ளிப்படை இவ்வூரின் அருகே அமைந்திருந்தும், சேந்தனார் வரலாறும் தெரிய வருகின்றது. சென்னையிமுள்ள மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் நூல்நிலையத்தில் குரவைலிங்கன் என்பவர் பாடிய இவ்வூர்த் தல புராணம் கையெழுத்துப் பிரதியாக உள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வேதியியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றிவரும் திரு ஆ. மங்கலமுடையார் என்ற முருகனடியாரை இக்குமரன் தன்பால் ஈர்த்து ஆண்டுகொண்டுள்ளான். அவர் ஒவ்வொரு ஞாயிறும் பல அன்பர்களை இத்தலத்திற்கு அழைத்துச் சென்று புராவடிக்குமரன் பெருமைகளை எடுத்துச்சொல்லி தான்பெற்ற அருள் அனுபவங்களை அனைவருக்கும் வழங்கிவருகிறார். அவர் தொகுத்துள்ள இடர்களையும் இடைக்கழி முருகன்' என்ற நூலின் உதவி கொண்டு, இக்கட்டுரை உருவாகியுள்ளது.

இத்திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்யவும், இராஜகோபுரம் புதியதாகஅமைக்கவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதில் இவ்வன்பரோடு நாமும் பங்குகொண்டு இருதிவினையொடு மும்மலமும் இறவியொடு பிறவியும் நீங்கி இடர்களையும் இத்தலத்து அழகனைக் கண்டு வணங்கி திருவருளைப் பெற்று உய்வோமாக!

✻ ✻ ✻

# திருவாசகத்தின் இலக்கியத்திறன்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

(முற்றொடர்ச்சி)

## "என் பிழைக்கே குழைந்து வேசறுவேன்"

**நீத்தல் விண்ணப்பம் :**

திருவாசகத்தின்கண் 51 திருப்பதிகங்கள் உள்ளன. அவற்றுள் நீத்தல் விண்ணப்பம் என்பது ஒன்று. நீத்தல் விண்ணப்பப் பாடல்கள் அந்தாதி முறையில் அமைந்தவை; சிறந்த சொற்பொருட் சுவைநலங்களும், அழகிய பல உவமைத் தொடர்களும், அரிய இனிய கவிதைத் திறங்களும் செறிந்தவை; அன்புடன் ஓதுபவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுஉருக்கி மகிழ்விக்கும் சிறப்புடையவை.

''திருவா சகநற் பதிகங்கள்,
சிறப்பின் ஐம்பத் தொன்றாகும்;
ஒருவா தவற்றுள் ஒவ்வொன்றும்
உயர்வும் சிறப்பும் உடைத்தெனினும்,
'இறைவா எனைநீ கைவிடற்க'
என்னும் நீத்தல் விண்ணப்பம்,
நிறைவாம் கவிதை நலங்கள்பல
நிரம்பிச் சிறந்து திகழ்ந்தோங்கும்!'' (1)

''அரிய நல்ல கவிநலங்கள்,
அழகார்ந் தொளிரும் சொற்பொருள்கள்,
உரிய சிறந்த பொருத்தமிகும்
உவமைத் தொடர்கள், பழமொழிகள்,
தெரியத் தெரியத் தெய்வநலம்
தேற்றும் திறன்கள் என்பவற்றால்,
பெரிதும் நீத்தல் விண்ணப்பம்
பிறங்கி ஓங்கிச் சிறந்துநிற்கும் !'' (2)

—ந.ரா.மு.

**பாடற் பொருள் :**

இத்தகைய நீத்தல் விண்ணப்பத்தின்கண் வரும் ஒரு செய்யுளின் சொற் பொருட் சுவை நலங்களை மட்டும், இங்கு இறுதியாக ஒரு சிறிது கண்டு இன்புற்று அமைவோம்.

''ஏசினும் யான்உன்னை ஏத்தினும்
என்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்,
செம் பவளவெற்பில்
தேசுஉடை யாய்என்னை ஆளுடை யாய்
சிற் றுயிர்க்குஇரங்கிக்
காய்சின ஆலம்உண் டாய்அமுது
உண்ணக் கடையவனே!''

''பழித்து உரைத்தாலும், அல்லது உன்னைப் புகழ்ந்து உரைத்தாலும், யான் என்னுடைய பிழையையே நினைந்து நினைந்து, உள்ளம் குழைவுற்றுக் கரைந்து உருகி, மிகவும் வருந்துவேன்! அத்தகைய என்னை நீ கைவிட்டு விடுவாயோ! விட்டுவிடாதே! செந்நிறமுடைய பவளமலை போல, ஒளிவிடுகின்ற திருமேனியை உடையவனே! எளியேனையும் ஆளாகக் கொண்டவனே! சிற்றுயிர்களாகிய தேவர்களின் பொருட்டு இரக்கங் கொண்டு, கொதித்து எழுந்த ஆலாலம் என்னும் கொடிய நஞ்சை (முன்வந்து) உண்டருளியவனே! அமிழ்தம் உண்ணுதலில் இறுதியாக இருப்பவனே!'' என்பது, இப்பாடலின் திரண்ட பொருள்.

**சொற்பொருள் நயங்கள் :**

1. மனிதர்க்கு அறிவு அறியாமை ஆகிய இரு நிலைகள் உண்டு. அறியாமை நிலையில் இறையுணர்வு இன்றியும், அறிவு நிலையில் இறையுணர்வு மிக்கும், மனிதர்கள் இருப்பர். இறையுணர்வு இல்லாத அறியாமை நிலையில் இறைவனை ஏசுதலும், இறையுணர்வு மிக்க அறிவுநிலையில் இறைவனை ஏத்துதலும், மனிதர்க்கு இயல்பு. ஆதலின் ''ஏசினும், உன்னை ஏத்தினும்'' என்றார்.

2. இனி, ''வாயார உண்டபேர் வாழ்த்துவதும், நொந்தபேர் வைவதுவும் எங்கள் உலகர் வாய்பாடு'' எனத் தாயுமானவர் பாடுதல் போல, நலம் பெற்றபோது துதித்தலும், நலம் பெறாதபோது இகழ்தலும் பற்றி, ''ஏசினும் உன்னை ஏத்தினும்'' என்றார் எனினும் ஆம். ஏசுதலில் அன்றி, ஏத்துதலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட திறம், ஓர்ந்துணர்ந்து மகிழற்பாலது.

3. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பது உணராமல், 'செய்தீவினை இருக்கச் சிவனை நொந்து' ஏசிய தம் சிறுமையினை நினைந்து, அந்தோ! அந்தோ! அந்தோவே! (திருவா. 612) எனக் கழிவிரக்கம் கொண்டு வருந்துதலின் ''என் பிழைக்கே குழைந்து வேசறுவேன்' என்றார். வேசறுதல் - வருந்துதல். ''இரைதேர் கொக்கு ஒத்து இரவு பகல் ஏசற்றிருந்தே வேசற்றேன்'' [illegible] 380) என்பது காண்க.

4. ஏசியதற்கு வேசறலாம். ஏத்துதற்கு வேசறுதல் எற்றுக்கு? எனின், இறைவன் எல்லையற்ற பொருள்சேர் புகழும், சிறப்பும் உடையவன். இறைவனின் எல்லையற்ற பெருமைகளை உணர்தலும் நம்மனோரால் இயலாத செயல். அங்ஙனமாகவும், 'இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் எளிது?' என்று எண்ணி அமையாமல், 'உய்த்தல் அறிந்தும் புனல் பாய் பவரே போல்', இத்தகையதென்று இறைவனின் புகழை அளவிட்டுக் கூறத் துணிந்த தமது அறியாமை முனைப்பின் திறம் நினைந்து ''ஏத்தினும், என்பிழைக்கே குழைந்து வேசறுவேன்'' என்றார்.

5. இறைவனை வியப்பிக்கவும் மகிழ்விக்கவும் விழைந்து, அவனது எல்லையற்ற புகழைச் சொல்லத் தலைப்பட்டு, அதனில் ஒரு சிறிதேனும் செவ்விதின் உணராது, ஈங்கும் ஊங்குமாகச் சில பிதற்றி, 'இவன் அறிந்தவாறு இதுவே போலும்' எனக் கருதி, இறைவன் எள்ளல் நகை கொள்ளும்படி செய்வித்து, தாம் தமது அறிவின்மையைப் புலப்படுத்திக் கொண்டதாகக் கருதி, 'ஏத்தினும் என் பிழைக்கே குழைந்து வேசறுவேன்' என்றார் எனினுமாம்.

''நின்புகழ் விரித்தனர் கிளக்குங்கால், அவைநினக்கு
இறும்பூது அன்மை, நற்கு அறிந்தேம் ஆயினும்,
நகுதலும் தகுதி; ஈங்கு ஊங்குநிற் கிளப்ப''

எனவரும் பரிபாடல் வரிகள், இங்கு நாம் நினைவு கொள்ளத் தக்கவையாகும்.

6. ''என் பிழைக்கே'' என்புழி, ஏகாரம் பிரிநிலை; இதற்கு முன்பெல்லாம் இறைவனின் பிழையாகத் தாம்பிறழ உணர்ந்து கருதி வந்ததனை விலக்குதலின். தம் பிழையைப் பிறர்மேல் ஏற்றிவிட முயலுதல், கீழோர் செயல். அங்ஙனம் இன்றித் தம் பிழையைப் பிழை என உணர்ந்து உடம்பட்டுக்கொண்டு, அதற்காக மனம் வருந்தித் திருந்துதல் பெரியோர் செயல். ஆகலின் ''என் பிழைக்கே குழைந்து வேசறுவேன்'' என்றார்.

7. தம் பிழை யுணர்ந்தவழிக் குழைதல் அல்லது வேசறுதல் என்னும் இரண்டனுள் ஒன்றே அமையாதோ? இரண்டினையும் கூறுதல் எற்றுக்கு? எனின்-'எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல் மற்றன்ன செய்யாமை நன்று' என்றபடி, பிழையைப் பிழை என்று உணர்ந்தால், பிழை செய்தமைக்கு வருந்துதல் வேண்டும்; வருந்துதலோடு மட்டும் அமைந்துவிடாமல் ,அதற்குக் கழுவாய் தேடுவதுடன், இனி அத்தகைய பிழை செய்யாமல் இருக்க உறுதிபூண்டு முனைந்து முயலுதலும் வேண்டும். ஆதலின் அவ்விருவகைத் திறனும் உணர்த்தக் ''குழைந்து வேசறுவேன்'' என்றார். குழைதலின் விளைவாகவே வேசறுதல் நிகழ்கின்றது; குழைதல் காரணம், வேசறுதல் காரியம். ஆதலின் 'குழைவேன், வேசறுவேன்' என்னாமல் ''குழைந்து வேசறுவேன்'' என்றார். குழை[illegible]ல்-நெகிழ்தல், மனம் கசிந்து உருகுதல். ம[illegible]ாசகர் 'குழைத்த பத்து' பாடியருளியவர்[illegible]ும், இங்கு நினைக்கத் தகும்.

8. மணிவாசகரை இறைவன் ''செந்தழல் புரை திருமேனியும் காட்டித், திருப்பெருந் பெருந்துறையுறை கோயிலும் காட்டி, அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டான்'' ஆதலின், இறைவனது வண்ணமும் வடிவும் ஒளியும் நினைந்து வியந்து ''செம் பவளவெற்பில் தேசு உடையாய்'' எனப் புகழ்ந்து போற்றினார். ''முத்து - மா மணி-மாணிக்க - வயிரத்த -பவளத்தின் முழுச்சோதி'' (திருவா. 432) என்றது காண்க. 'வெற்பில்'' என்புழி, ஐந்தன்உருபு உறழ் பொருளில் வந்தது. பவளம் நெய்தல் நிலப் பொருள். ஆதலின் 'பவள வெற்பு' என்றது அதிசய அணி.

9. 'என்னை(யும்) ஆளுடையாய்' என்பதில், இழிவு சிறப்பு உம்மை தொக்கது. ''சிவன் எம்பிரான் என்னையும் ஆண்டு கொண்டான்'' என்றும், ''இந்திரனும் மாலயனும் ஏனோரும் அந்தரமே நிற்கச் சிவன் அவனி வந்தருளி எந்தரமும் ஆட்கொண்டான்'' என்றும், ''யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான், யாவர்க்கும் கீழாம் அடியேனை யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தான்'' என்றும், மணிவாசகப்பெருமான் ஆங்காங்கே அருளிச் செய்திருத்தல் காணலாம்.

10. இங்ஙனம் தம்மை ஆட்கொண்டதற்குத் தம்முடைய தகுதி எதுவுமின்றி, இறைவனின் கருணையே காரணம் என்பார், அக்கருணைத் திறனை வியந்து வியந்து, ''சிற்றுயிர்க்கு இரங்கிக் காய்சின ஆலம் உண்டாய்'' என்று புகழ்ந்தார்.

11. சிறிய அறிவும் சிறிய தொழிலுமே உடையன ஆதலின் உயிர்களைச் ''சிற்றுயிர்'' என்றார். அறம் பாவம் என்னும் அருங் கயிற்றாற் கட்டுண்டு பிறந்தும் இறந்தும் உழன்று வருதல் ஆகிய சிறுமை பற்றி உயிர்களைச் 'சிற்றுயிர்கள்' என்றார் எனினுமாம்.

12. ''சிற்றுயிர்'' என்றது, ஈண்டுத் தேவர்களைக் குறித்து நின்றது. மணிவாசகப் பெருமான் தேவர்களின் சிறுமையினைப் பல இடங்களிலும், ஆங்காங்கே குறிப்பிட்டருள்வர். ''சாவ முன்னாள், தக்கன் வேள்வித் தகர் தின்று....ஆவ எந்தாய் என்று அவிதாஇடும் நம்மவர் அவரே, தேவர் என்றே இறுமாந்து என்ன பாவம் திரிதர்வரே'' (திருவா. 8) என்றும்; ''மிகுகுறைவானவர்'' (மிகு, குறைவு ஆனவர்-திருவா. 590) என்றும், ''பொய்வானவர்'' (பிறர்கூறும் பெருமை அவர்க்கு இன்மையிற் 'பொய்வானவர்' என்றார் ,கோவை-67) என்றும், பிறவாறும் வருதல் காண்க.

13. ''கோலாலமாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த ஆலாலம்'' ஆதலின், அதன் கொடிய இயல்பினைக் குறிக்கக் 'காய் சின ஆலம்' என்றார்.

14. சிவபிரான் ஆலம் உண்டிலனேல், குமரகுருபரர் பாடுவது போலத் தேவமாதர் களின் செங்கைகளும் கொங்கைகளும் சிவக்கும்

படி (மார்பில் அடித்துக்கொண்டு புலம்புமாறு), அன்று அயன் மால் உள்ளிட்ட மேலான தேவரெலாம்,

''மால்எங்கே? வேதன்உயர் வாழ்வுஎங்கே?
இந்திரன்செங்
கோல்எங்கே? வானோர் குடிஎங்கே?—கோலஞ்சேர்
அண்டம்எங்கே? அவ்வவ் அரும்பொருள் எங்கே?
உனது
கண்டம்அங்கே நீலம்உறாக் கால்''

என்று இராமலிங்கர் பாடுதல் போல, ஒருங்கே வீடி அழிந்தொழிந்திருப்பர்ஆதலின், ''இரங்கி'' என்றார்.

15. ''நம்பா நினக்கு ஓலம்! முறையோ எனக் கால நஞ்சுண்டு பித்துண்டு, நாம்தேவர்! என்பார்தம் பாவையர்க்கு அன்று காதோலை பாலித்த தயவாளர்'' என்று குமரகுருபரர் பாடுதற்கு ஏற்ப, 'இரங்கி' என்றார் எனினுமாம்.

16. ஆலம் உண்டது தம் வீரமும் பெருமையும் விளக்குதற்கு அன்றி, சிற்றுயிர்களைக் காத்தருளுதற்கு விரும்பிய பரிவு காரணமாகவேயாதலின், 'இரங்கி' என்றார். இறைவன் தனது எல்லையற்ற பேரிரக்கத்தால் புரிந்தருளிய செயல் ஆதல் பற்றியே, இறைவன் நஞ்சுண்ட நயத்தக்க நனிநாகரிகச் செயல், அவனது எண்வகை வீரச் செயல்கள் போன்றதொரு வீரச் செயலாகக் கருதப் பெறாமல், கருணை இரக்கச் செயலாகவே நூல்களாலும் பெரியோர்களாலும் போற்றப்படுவதாயிற்று.

17. திருமால் முதலிய தேவர்கள் அனைவரும் திருப்பாற்கடலில் நஞ்சு தோன்றிய போது பிந்தினர்; ஆனால் அமுதம் தோன்றிய போது அதை உண்ணுதற்குத் தம்முள் ஒருவரை ஒருவர் இகலி முந்தினர்; அமுதுண்ணப் பிந்தினன் என்பார், இறைவனது பேரருளையும் பெருந்தகைமையையும் வியந்து, ''அமுதுண்ணக் கடையவனே'' என வியந்து புகழ்ந்து மகிழ்ந்தார்.

18. இறைவன், தானே எவருக்கும் இறவாப் பேறு அளிக்கும் அமிழ்தமாகத் திகழ்தலின், தேவர்களைப்போல் அமுதம் உண்ண வேண்டிற்றிலன் என்பது கருத்து. ''விண்ணோர் அமுதுண்டும் சாவ, ஒருவரும் உண்ணாத நஞ்சுண்டு இருந்து அருள் செய்குவாய்'' என முத்தமிழ்ப் புலமை வித்தகராகிய இளங்கோவடிகள் அருளிச் செய்திருத்தல், இங்கு அறிந்து இன்புறற்பாலது.

19. 'அமுதுண்ணக் கடையவன்' என்றது, தேவர் யாவரும் உண்ட பிறகு இறைவன் கடைசியில் அமுதுண்டான் என்னும் கருத்தில் வந்ததன்று. ஒரு செயலை யான் அது செய்திலேன், செய்யேன் எனக் கூறுவோர், 'அதனைச் செய்தற்கு நான்தான் கடைசி ஆளாக இருப்பேன்'(I will be the last person to do it) என்று கூறுதல் போன்ற ஒருவகைக் குறிப்பிற் போந்தது எனலாம். இஃது ஒரு சார்பு எடுத்துக்காட்டேயன்றி, தமிழ் வழக்கிற்குப் பொருள் காண ஆங்கில வழக்கினை மேற்கொள்ளலாம் போலும் எனச் சிலர் பிறழ உணர்ந்து கொள்ளுதற்கு அன்று. ''மலத்திலக்கணம் வடமொழி வழக்குப் பற்றி ஓதுவார் 'ஞான திரோதகமாய்' எனவும், அதனைத் தமிழ்மொழியின் உரைத்துக் காட்டுவார் 'மறைத்துக் கொடு நிற்றலான்' எனவும் கூறினார்'' எனவரும் சிவஞான போதப் பேருரை போல்வன, இங்குச் சிந்திக்கத் தகும்.

20. இறைவன் 'அமுதுண்ணக் கடமைப் பட்டவன்' எனச் சிலர் பொருள் கொள்கின்றனர். அப்பொருள்படவேண்டுமாயின் 'கடமையனே' என்றோ, அல்லது 'கடவியனே' என்றோதான், சொல்லமைப்பு இருந்திருத்தல் வேண்டும். மேலும் 'கடமை' என்பது 'கடன்மை' என்பதன் மரூஉ. அதற்குக் கடன்படுந்தன்மை (Due, Duty) என்பது பொருள். இறைவனைக் கடன்பட்டவனாகக் கருதுதல் பொருந்தாது.

21. தேசுடையாய்! ஆளுடையாய்! ஆலமுண்டாய்! என்பனபோல, அமுதுண்ணக் கடையவனே! என்பதும் ஒரு விளி. அது 'விடுதி கண்டாய்' என்பதனைக் கொண்டு முடியும். ஆதலின் இங்குக் கடையவன் என்பது சிவபெருமானையே குறிக்கும். எல்லாவற்றிற்கும் ஆதியும் அந்தமும் ஆக விளங்கும் இறைவனைக் கடையவன் என்றலிற் பிழை ஒன்றும் இல்லை. இதனை மணிவாசகர்க்கு ஏற்றுவதாயின், சொற்கிடந்தவாறே பொருள் கொள்ளாது 'கடையவன் அமுதுண்ண ஆலமுண்டாய்; எனை விடுதி கண்டாய்' என்று தேவையின்றிப் பிரித்துக் கூட்டிப் பொருள் கொள்ளல் (விபாக யோகம் புரிதல்) வேண்டும். மேலும் மணிவாசகப் பெருமான், தாம் அமுதம் உண்டதாக எங்கும் பாடிற்றிலர் என்பதும் கருதுதற்கு உரியது. மணிவாசகர் தம்மைக் கடையவன் என்று குறிப்பிட்டுக் கொள்ளுதலில் யாதொரு வியப்பும் சிறப்பும் இல்லை. அவர் சிவபிரானைக் கடையவன் என்றதே, ''சேர்ந்தறியாக் கையான்-குணமிலி - மானிடன் - தேய்மதியான்'' என்றாற் போன்ற சுவைநயம் உடையது.

22. அந்தாதி முறையில் அமைந்த இந்த நீத்தல் விண்ணப்பப் பகுதி, மணிவாசகப் பெருமானால் 'கடையவனே!' என்பதனை முதலாகக் கொண்டு தொடங்கப் பெற்றதனால், இவ் இறுதிப் பாடலின் இறுதியிலும், 'கடையவனே' என்னும் சொல் அமைந்து மண்டலித்து நிறைவு பெறுவதாயிற்று. இதன்கண் ''என் பிழைக்கே குழைந்து வேசறுவேன்'' என்றது, பிரபஞ்ச வைராக்கியம்.

**முடிவுரை:**

இங்ஙனம் தொட்டனைத்தூறும் மணற்கேணிபோல, அறிஞர்களாயினார் எண்ணுந்தோறும் எண்ணுந்தொறும் பலப்பல நுண்ணிய பொருள்களை யுணர்த்திக் கொண்டு திகழ்தல், திருவாசகத்தின் இலக்கியத் திறனுக்குச் சிறந்த சான்றாகும். இத்தகைய தெய்விகநலம் சிறந்த

திருவாசகத்தையும் ஒருசிலர் எளிதாக எண்ணு வர், புறக்கணிப்பர். அதனால் திருவாசகத் திற்கு ஓர் இழுக்கும் இல்லை. திருவாசகத்தை ஓதியும் ஒருசிறிதும் உருக்கம் அடையாத நெஞ் சம் உடையவர்கள் இருக்க நேருமாயின், அது திருவாசகத்தின் குறையாகாமல், அவர்களின் பண்படாத மன இயல்பினையே உணர்த்துவ தாகும். *(11)* ஏனெனில்,

> மலரினும் மென்மை கவிதை; சிலர் அதன்
> செவ்வி தலைப்படு வார்

என்பது அறிஞர்கள் அனைவரும் கண்டறிந்த உண்மை. ''எத்தனையோ பல லட்சக் கணக் கான மக்கள் உடல் உழைப்பினை மேற்கொள்ள வல்லவராயிருப்பர்; ஆனால் பத்து லட்சம் மக்களில் ஒரே ஒருவர் மட்டுமே, சீரிய சிந் தனைச் செயற்பாட்டின் திறம் வாய்ந்தவராகத் திகழ்வர்; எத்தனையோ கோடிக்கணக்கான மக்களில், ஒரே ஒருவர்மட்டும்தான், கவிதை யின்பம் அல்லது தெய்விக வாழ்க்கையுணர்வு உடையவராக விளங்குவார்'' *(12)* என்று, அமெரிக்க நாட்டுத் தத்துவஞானியாகிய என்றி டேவிட்தோரே என்பவர் கூறியிருத்தல், இங்கு இயைபுடைமை பற்றி நாம் சிந்தித்து உணர்தற்குரியது.

**முடிவுரை :**

திருவாசகத்தினை இராமலிங்கர், சிவப் பிரகாசர், சிவஞானமுனிவர், தாயுமானவர் போன்ற, எத்தனையோ பல்லாயிரக்கணக்கான மாபெரும் சான்றோர்களும், அருளாளர்களும் போற்றி ஓதி உய்ந்துள்ளனர் என்னும் உண்மை யினை, நாம் நூல்கள் வாயிலாக அறிகின் றோம். எனவே, அத்தகைய அருட்பெருஞ் சான்றோர்கள் பலரின் அடிச்சுவட்டைப் பின் பற்றி, நாமும் திருவாசகச் செந்தமிழ் மாமறையினை இடையறாது ஓதி, இறையருள் பெற்று உய்ய முயலுவோமாக!

இனியநல்ல தமிழ்க்கடலார்,
**இராயசொக்க லிங்கனூர்,**
நினைவறக்கட் டளைச்சார்பில்,
நினைந்தெனைஇங் கினிதழைத்து,
நனிதிருவா சகம்பற்றி
நல்லுரைகள் நிகழ்த்துவித்த
அனைவருக்கும், என்நன்றி,
வணக்கங்கள், அளவிலவே!

தண்ணார் தமிழ்க்கும், சிவநெறிக்கும்
தகவே பணிகள் பலபுரிந்த,
எண்ணார் சிறப்பின் இராயசொக்க
லிங்கர் இனிய நினைவாகப்,
பண்ணார் திருவா சகம்பற்றிப்
பேசப் பரிந்திங் கெனையழைத்த,
**அண்ணா மலைப்பல் கலைக்கழகம்,**
வாழி அளவில் பல்லூழி!

11. "Modern works have to pass before the bar of test and taste of successive generations; whereas, with classics, which have been through the ordeal, almost the reverse is the case. Your taste has to pass before the bar of the classics. That is the point. If you differ with a classic, it is you who are wrong, and not the book".

*—Arnold Bennett,*
*Literary Taste, How to Form it.*

12. "The millions are awake enough for a physical labour; but only one in a million is awake enough for effective intellectual exertion, only one of a hundred millions to a poetic rapture or Divine life".

*—Henry David Thoreau,*
*Where I Lived and what I Lived for.*



**பாராட்டு விழா** : சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் (ஸ்ரீநடராசா) கோயில் திருப்பணி யில் பங்குபெற்ற பொறியாளர்கள், கலைஞர்கள், மற்றும் அலுவலர்கள் ஆகியோருக்கு, 26.10.80 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில், சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் கோயில் ஆயிரக்கால் மண்டபத்தின் முகப்பில், அறநிலைய ஆணையர் திரு. யு. **சுப்ரமணியன்** அவர்கள் தலைமையில் பாராட்டுவிழா நடைபெற்றது. அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள் அரசுமானியம் ரூ. 3 லட்சத்துக்கு உரிய காசோலையைத் திருப்பணிக்குழு வினரிடம் வழங்கித், திருப்பணித்தொண்டில் ஈடுபட்டு மிகவும் சிறப்புடன் பணியாற்றிய பொறி யாளர்கள், கலைஞர்கள், மற்றும் பிற அலுவலர்களைப் பாராட்டிப் பரிசளித்தார்கள். திரு. கே. விவேகானந்த தீட்சிதர், பொதுத்தீட்சிதர்கள் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினார். திருப்பணிக்குழுத் தலைவர் அவர்களின் வரவேற்புரைக்குப் பின்னர், செயலாளர் அறிக்கை வாசித்தார். திரு. வி.வி. சுவாமிநாதன், எம்.எல்.ஏ., திரு.கே.ஆர். கணபதி, எம்.எல்.ஏ., திரு.சி.ஆர். இலட்சுமிகாந்தன், எம்.எல்.சி., திரு. டாக்டர். வெ. குழந்தைவேலு, எம்.பி., நெடுஞ்சாலைத்துறைத் தலைமைப்பொறியாளர் திரு.கே.எஸ். லோகவிநாயகம் முதலிய பெரு மக்கள் கலந்துகொண்டு, பாராட்டுவிழா நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

# குன்றக் குரவை

திரு. கா. அ. ச. ரகுநாயகன், எம்.ஏ.,

(திருப்பத்தூர், வ.ஆ.மா.)

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

மதுரையில் கணவனை இழந்தாள் கண்ணகி. துயரமே உருவாகி நின்றாள். உற்றார் ஒருவரும் உடனில்லை. மதுரைமா தெய்வம் அவள் முன்தோன்றி ஆறுதல் கூறியது. 'கோவலன் வானுலகம் சென்றுவிட்டான்; இனி அவனை மண்ணுலகில் காணுதல் இயலாது' என்று இயற்கை நியதியை அத் தெய்வம் கூறியது. கண்ணகியின் மனம் அக்கூற்றை ஏற்க மறுக்கிறது. ''என் கணவனைக் காணும்வரை நான் ஓரிடத்திலும் இருக்கேன்; ஓரிடத்திலும் நிற்கேன்'' என்று கண்ணகி வெகுண்டு கூறுகிறாள். கொற்றவைகோயில் முன் தன்கை வளையல்களை உடைத்தெறிகிறாள். மதுரை மாநகரின் கிழக்கு வாயிலில் நுழைந்தபோது என் கணவனுடன் நுழைந்தேன்; இப்போது மேற்கு வாயிலின் வழியாகத் தனியளாய்ச் செல்கிறேன் என்று சொல்கிறாள். அவள் உள்ளத்தில் மண்டிக் கிடக்கும் துயரமெல்லாம் திரண்டு அவ்வுரையில் வெளிப்படுகின்றன. அவலச் சுவையின் எல்லையைத் தொடுகிறார் ஆசிரியர்.

கண்ணகி, தான் கூறியபடி மேற்கு நோக்கி நடக்கிறாள். இரவும் இல்லை, பகலும் இல்லை. தொடர்ந்து நடக்கிறாள். வைகையாற்றின் கரையோரமே போய்க்கொண்டிருக்கிறாள். அவளுக்கு மேடும் தெரியவில்லை. பள்ளமும் தெரியவில்லை. அவள் செல்லும் வழியில் திருச்செங்குன்று என்னும் மலை குறுக்கிடுகிறது. அம்மலைமீது ஏறிச் செல்கிறாள். அம்மலைச் சாரலில் ஒரு வேங்கை மரம்; பூத்துக் குலுங்கி நிற்கிறது. அம் மரத்து அருகே செல்லும்போது ''என்ன தீவினை உடையேன் யான்'' என்று அவள் வாய்விட்டுச் சொல்லி உடல் சோர்கின்றாள். ''மதுரை மாதெய்வம் சொன்ன பதினான்கு நாள் எல்லை முடிந்ததோ? என் கணவனை நான் கண்டு தொழும் நாள் இன்றோ?'' என்று எண்ணுகிறாள்.

அப்போது குறமகளிர் சிலர் அம்மலையிலிருந்து இறங்கி வருகின்றனர். ''வள்ளியைப் போல் உள்ளீர்; ஒரு முலை இழந்துள்ளீர்; இந்த வேங்கை மரத்து நிழலில் நிற்கும் நீர் யாரோ?'' என்று அப்பெண்கள் கண்ணகியிடம் கேட்கின்றனர். ''ஊழ்வினையினால் மதுரை மாநகரம் அழிந்தது; அந்த நாட்டு அரசனும் மடிந்தான். அங்கு என் கணவனை இழந்து இங்கு வந்து நிற்கிறேன்'' என்று தன் துயரக் கதையை வெளியிடுகிறாள் அவள். அவள் கூறியதைக் கேட்ட பெண்கள், அவள் துயருக்கு இரங்கினர்; அவளைக் கைகூப்பித் தொழுதனர்.

இப்படி இவர்கள் இருந்தபோது வேறு சிலரும் அங்கு வந்து கூடினர். அப்போது வானத்திலிருந்து மலர்மாரி பொழிந்தவண்ணம் வானவர் வந்து கண்ணகி முன் தோன்றினர். அவள் பெயரைச் சொல்லிப் புகழ்கின்றனர். வானவர் வந்திறங்கிய ஊர்தியில் கோவலனைக் காண்கிறாள் கண்ணகி. அந்த ஊர்தியில் அவளும் ஏறிக் கொண்டாள். அங்குக் கூடியிருந்தவர் கண் முன்பாகவே அந்த ஊர்தி மேலே எழுந்து சென்றது.

அக்குன்றத்தின் மக்கள் வியப்படைந்தனர். வள்ளியோ என்று முதலில் ஐயுற்ற அப்பெண்கள் கண்ணகியைத் தம் குல தெய்வமாகவே எண்ணினர். தம் ஊர் மக்களை விளித்துக் கண்ணகி வந்து நின்ற வேங்கை மரத்தின் அடியில், அவளுக்கு ஒரு கோயில் அமைக்குமாறு வேண்டுகின்றனர்; விழா எடுக்க விரும்புகின்றனர். 'தொண்டகமும் சிறுபறையும் கொட்டுங்கள்; கொம்பினை ஊதுங்கள்; மணி அடியுங்கள்; குறிஞ்சிப் பண்ணைப் பாடுங்கள்; நறும்புகை எடுங்கள்; மலரை அணியுங்கள்; அவள் புகழைப் பாடுங்கள்; பன்மலர் தூவி வழிபடுங்கள்'' என்று அவர்கள் கூறுகின்றனர். ''இந்தப் பெரிய மலை எல்லா வளங்களையும் இடையறாது தருக' என வேண்டி விழா எடுப்போம்!'' என்று சொல்கிறார்கள்.

அந்த ஊரில் ஒரு தலைவி; அவளுக்கு ஒரு தோழி. இருவரும் அந்த மலையிலிருந்து வீழும் அருவியின் அழகைக் கண்டு மகிழ்கின்றனர். அஞ்சனம், அரிதாரம், சிந்துரம் முதலான நறுமணப் பொருளையெல்லாம் அருவி ஏந்திவந்து அந்த இடத்தை மணம் கமழச் செய்கிறது. அந்தப் பொருள்கள் பல்வேறு நிறத்தை உடையன. அருவி இந்திர வில்போல் அழகிய காட்சியைத் தருகிறது. அருவி வீழும்போது 'இழும்' என்னும் இனிய ஒலி எழுகிறது. இவ்வாறு புலன்களுக்கு நல்விருந்தாக இருக்கிறது அருவி.

அருவியில் நீராட விரும்புகின்றனர் இந்தப் பெண்கள். அருவி வீழும் மலையில் வாழும் தலைவன் ஒருவன் இந்தத் தலைவியிடம் காதல்

கொண்டிருக்கிறான். இருவரும் சில நாள் பழகினர். பின்னர் அந்தத் தலைவனைக் காணோம். தலைவியை நாடி இப்போதுஅவன் வருவதில்லை; அவனை எண்ணித் தலைவி துய ருறுகிறாள். தலைவி அவனுடன் பழகிய நாளில், ''உன்னை நான் திருமணம் செய்து கொள்வேன்; இது உறுதி; நீ அஞ்ச வேண்டாம்' என்று பலமுறை சொல்லியிருந்தான். இந்தச் செய்தி தோழிக்கும் தெரியும்.

''அஞ்ச வேண்டாம்; உன்னை மணப் பேன்'' என்று உறுதி சொல்லி உன் அழகைத் துய்த்த தலைவன் பின்னர் உன்னை மறந்துவிட் டான்; அந்தத் தலைவனுடைய மலையிலிருந்து வீழும் அருவியில் நாம் நீராடுவோமா? என்று தோழி, அருவியில் நீராட விரும்பிய தலைவி யிடம் கேட்கிறாள்; அவள் பேச்சில் தலைவனை எள்ளும் குறிப்புத் தோன்றுகிறது. தோழியின் எள்ளலைத் தலைவியின் உள்ளம் ஏற்கவில்லை. தலைவனின் மலையில் உள்ள கற்களைத்தீண்டி வருவதால் அந்த அருவிநீர் நமக்கு என்ன தவறி ழைத்தது? அதனை ஏன் நாம் வெறுக்க வேண் டும்? என்று தலைவியின் மொழி பிறக்கிறது. ''ஆனால் தோழி, வேறு பெண்கள் வந்துஅந்த அருவியில் நீராடினால் என் மனம் வருந்து கிறதே; அது ஏன் என்று எனக்கு விளங்க வில்லை'' என்று அவளே மேலும் சொல்கிறாள். இவ்வாறு மூன்று அழகான பாடல்களில் தலைவி தன் உள்ளத்தைத் தோழியிடம் வெளியிடு கிறாள்.

தலைவன் வேறு கடமைகளில் ஈடுபட்டி ருக்கக்கூடும். அதனால் இப்போது என்னை நாடி வருவதில்லை. ஆனால் அவன் என்னை மறந்திருக்க மாட்டான். விரைவில் வருவான். வந்து மணம் செய்து கொள்வான் என்று தலைவி யின் உள்ளம் உறுதியாக நம்புகிறது. இந்தக் கருத்து அவள் கூறும் மொழிகளில் மிக நுட்ப மாக மறைந்து கிடப்பதை உணரலாம். தலைவி பாடும் ஒரு பாட்டு:

''எற்றொன்றும் காணேம் புலத்தல் அவர்மலைக்
கற்றீண்டி வந்த புதுப்புனல்
கற்றீண்டி வந்த புதுப்புனல் மற்றையார்
உற்றாடின் நோம்தோழி என் நெஞ்சன்றே''

பின்னர் இரு பெண்களும் அருவியில் விளை யாடினார்கள், நீராடினார்கள். நீண்ட நேரம் ஆடியதால் அவர்கள் கண்கள் சிவந்தன. உடல் குளிர்ந்தது. உள்ளமும் குளிர வேண்டுமே! குன்றுடையானைக் கூற உள்ளம் குளிரும். குன் றவர்க்கு இறைவன் முருகன். அவனைப் பாடி ஆடுவதே அவர்கள் செய்யும் வழிபாடு. ''நாம் குரவை ஆடி முருகனைப் பாடுவோம்'' என்று தலைவியை அழைக்கின்றாள் தோழி. குரவை ஆடுதற்கு எழுவரேனும், ஒன்பதின்மரேனும் வேண்டும்; ஆனால், ஈண்டு இவ்விரு பெண்கள் மட்டுமே ஆடுவதாக அமைத்திருக்கிறார் ஆசிரி யர். ''அவனை வேண்டிப் பாடுவோம்'' என்று தோழி சொல்கிறாள். வேண்டுவது என்ன? தலைவியின் மணமே. இக்குறிப்பை அறிந்த தலைவியும் தோழியுடன் கூடிக் குரவை ஆடிப் பாடுகிறாள். மூன்று பாடல்களில் முருகனின் பெருமையைப் பாடுகிறார்கள்.

முன்னொரு காலத்தில், சூரபதுமன் என் னும் அசுரன் கடலின் உள்ளே புகுந்து மாமர மாக மறைந்து நின்றான். அவனை அழித்தது ஒரு வேல். அது யாருடையது? திருச்செந்தில், திருச்செங்கோடு, திருவெண்குன்று, திருவேரகம் முதலான இடங்களில் கோயில் கொண்டு நீங் காது உறைகின்ற முருகப் பெருமான், தன் கையில் ஏந்தியுள்ள வேல்தான், அந்த அரிய செயலைச் செய்த வேலாகும். அதுமட்டுமா? அசுரர்களின் பெருமைகளை அழித்துப்பகையை ஒழித்ததும் அறுமுகப்பெருமான் ஏந்தியுள்ள வேல்தான்; கிரவுஞ்ச மலையாக நின்றவன் மார்பைப் பிளந்து அவனை அழித்த வேலும் சரவணன் ஏந்திய வேல்தான். இவ்வாறு அந்தப் பெண்கள் முருகவேளின் பெருமையை வியந்து போற்றிப் பாடுகின்றனர். அந்தப் பாடல்கள் அழகானவை; பக்திச்சுவை சொட்டுபவை. அவற்றில் ஒன்று:

''அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்தியவே லன்றே;
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும்வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே''

முருகனை இவ்வாறு பாடி ஆடிய தலை விக்கு வீட்டில் ஒரு செய்தி காத்திருந்தது. தலைவியின் உடல் மெலிந்து வருவதைத் தாய் உணர்ந்தாள். முருகன் தன் மகள்மேல் 'அணங்கு' கொண்டிருப்பானோ என்று அந்தத் தாயின் உள்ளம் ஐயுறுகின்றது. வேலனை வரச்செய்து வெறியாடிக் காண்போம் என்று எண்ணுகிறாள். தாயின் எண்ணத்தை அறிந்த தலைவி ''என் தலைவனால் வந்த நோய் இது என்று என் தாய் அறியவில்லையே; இதனைத் தீர்த்தற்கு வெறியாடினால், அது நகைத்தற்கிடமாகுமே!' என்று வருந்தித் தோழியிடம் சொல்கிறாள்.

வெறியாட்டு அயர்வதற்கென்று வேலன் வருவனாயின், அவன் அறியாமையுடையவனே; வெறியாடு களத்தில் வேலன் செய்யும் வேண்டு தலை ஏற்று முருகப் பெருமானும் அங்கு வந்து தோன்றுவானாயின், அவனும் அறியாமை உடையவனே. இவ்வாறு தலைவி தன் ஆற்றா மையை வெளியிடுகின்றாள். தலைவி பாடும் மூன்று பாடல்களும் வஞ்சப் புகழ்ச்சியாய்-பழிப்பதுபோல் புகழ்வதாய்-முருகன் பெருமை களையே பேசுகின்றன. குறவர் வாழ்க்கை முறைகளையும், அவர்கள் செய்யும் வழிபாடு களையும், அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை களையும் இப்பாடல்களில் நாம் அறிகிறோம்.

தலைவி இவ்வாறு தன் ஆற்றாமையைச் சொல்லியதற்குத் தோழி பதில் சொல்கிறாள். தோழி அறிவே வடிவானவள். ''வேலன் வந்து வெறியாடினால், அங்கு முருகன் வருவான்; மயில் மீது ஏறி வருவான்; வள்ளி நாயகியோடு வருவான். அது நமக்கு நல்ல வாய்ப்பு. நாம் அப்போது முருகனிடம் வேண்டுவோம். உன் உள்ளத்திருக்கும் தலைவன் வந்து உன்னை மணக்குமாறு அருள்செய்ய அவனை வேண்டு வோம்'' என்று தோழி சொல்கிறாள். வள்ளி யுடன் முருகன் வருவதால், 'களவுவழி வரும்

கற்புக்கு' அவன் மகிழ்ந்து அருள் செய்வான் என்பது தோழியின் குறிப்பு. இது முடிந்த பாட்டு.

இரண்டாவது பாட்டில் வள்ளியின் திருவடிகளை வணங்குவோம் என்று கூறுகிறாள்தோழி. ஒரு பெண்ணின் உள்ளத்தை மற்றொரு பெண்ணே உணரக்கூடுமாதலின், வள்ளியின் திருவடிகளை வணங்கினால், தங்கள் நோக்கம் எளிதாக நிறைவேறும் என்பது குறிப்பு. தவிர, தலைவியின் உள்ளத்தில் அக்குன்ற நாடன் ஒருவனே நிறைந்துள்ளான். அந்நிலையில் வேற்றார் மணத்தைப் பெற்றோர் விரும்பினால், தலைவியின் உள்ளம் அதனை ஏற்க இயலுமா? இத்தகைய சிக்கலான நிலையை வள்ளிதேவி நன்கு பட்டறிந்தவள்; 'வேட விருத்தர்கள்' வந்து தன்னை அலைக்கழித்தபோது தன் உள்ளம் பட்ட பாட்டை அவள் மறந்திருக்க முடியாது. ஆகவே, அந்த வள்ளியம்மையை நோக்கி அயலார் மணத்தை ஒழிக்கும்படி வேண்டுவோம் என்று தோழி கூறுகிறாள். 'ஒழி' என்ற சொல்லில், அவர்கள், உள்ளத்தில் குமுறும் உணர்வுகளை வெளியிடுகிறார்கள்.

மூன்றாவது பாடலில் 'வள்ளியையும் முருகனையும் இணைத்து வணங்கலாம்' என்று சொல்கிறாள் தோழி. தலைவனும் தலைவியும் மனம் ஒன்றினார்கள். அவர்கள் மணம் முன்னரே முடிந்தது. ஆனால் அதனை மற்றவர் அறியார்; அது களவில் நடந்த மணம். அவர்கள் மக்களிடையே கணவனும் மனைவியுமாக வாழ வேண்டுமாயின், ஊரார் எல்லோரும் ஒன்றுகூடிக் காணுமாறு மணவினை நடைபெற வேண்டும். பலரும் அறிகின்ற அந்த மணவினையை அருள வேண்டும் என்று வள்ளி மணாளன் திருவடிகளை வணங்குவோம் என்று, தோழி தலைவியை அழைக்கின்றாள்.

இம் மூன்று பாடல்களில் மூன்று வேண்டுகோளை வெளியிடுகிறாள் தோழி. மூன்றாம் பாடலில் 'தலைவி' தலைவனிடம் கொண்ட நட்பை ஏற்கவேண்டும்' என்பதும், இரண்டாவது பாடலில், 'தலைவி விரும்பும் தலைவனை அன்றி வேற்றார் மணத்தை விலக்க வேண்டும்' என்பதும், மூன்றாவது பாடலில் 'தலைவியின் திருமணம் நடைபெற வேண்டும்' என்பதும் வேண்டுதல்களாகும்.

கடைசியாக, முருகனை வழிபடுவோர் அனைவர்க்காகவும் பொதுவான வேண்டுதலைச் செய்யலாம் என்று சொல்கிறாள் தோழி. ''நாட்டில் நல்ல மணவினைகளே நடைபெற வேண்டும், புறம்பான மணங்கள் நிகழ்தல் கூடாது'' என்பதே அந்தப் பொதுவான வேண்டுதல். காதலால் மனம் ஒன்றியோர் திருமணங்களை நாடு போற்ற வேண்டும்; மனம் ஒன்றாத மணங்களைத் தவிர்க்க வேண்டும் என்பது அப்பெண்களின் உள்ளக்கிடக்கை.

தலைவியிடம் தோழி கூறிய செய்திகளை அங்கு வந்திருந்த தலைவன் மறைவாக இருந்து கேட்டான். பலர் அறியும் மணத்தையே அவர்கள் விரும்புகின்றனர் என்பதை உணர்ந்துகொண்ட தலைவன், தான் வந்த வழியே செல்லப் புறப்பட்டான். தோழி அவன் முன்னே சென்று வணங்கி நின்றாள். தலைவன் திருவடிகளைத் தலைவியோ அல்லது தோழியோ தொழுவதாகக் கூறுவது அகப்பொருள் மரபு அன்று. ஈண்டுத் தோழி தலைவன் திருவடிகளைத் தொழுதாள் என்று கூறுகிறார் ஆசிரியர். தலைவன் கடம்ப மாலையைச் சூடியும், வேலினை ஏந்தியும் வந்தானாகலின், அவன் புனைந்த கோலத்தினை அவள் தொழுதாள் என்பது பெறத்தக்கது.

''தலைவனே! கடம்ப மாலையையும் வேலையும் கண்டு, அவற்றையுடைய, உன்னைத் தெய்வம் என்று 'தெளியும்' அறிவு இம் மலை வாழ் மக்களிடம் இல்லை. ஆறுமுகங்கள், பன்னிரு தோள்கள், மயில் ஆகிய இவற்றோடு வள்ளியம்மையையும் கண்டால், ஒருகால் முருகன் என்று உன்னை அவர்கள் தெளியக் கூடும். எனவே, யாரோ ஒருத்தியை நாடி வந்தவன் நீ என்று அவர்கள் அறிந்து விட்டார்கள். அதனால் ஊரில் அலர் எழுந்தது'' என்று தோழி சொன்னாள்.

தோழியின் மொழியைக் கேட்ட தலைவன் வாடினான். வாட்டமுற்றவன், வருந்தும் தன் நெஞ்சகத்தைத் தலைவியிடம் போக்கித் தனியனாய்ச் சென்றான். தலைவன் சென்றதை நான் பார்த்தேன். அவன் திரும்பி வந்து உன்னை மணந்து கொள்வான் என்ற நம்பிக்கை எனக்குத் தோன்றுகிறது என்று தோழி தலைவியிடம் சொல்கிறாள். தலைவியும் ஆறுதல் பெறுகிறாள். இவ்வாறெல்லாம் தலைவன் தலைவி நட்புக் குறித்துப் பேசி வந்த தோழி. இப்போது கண்ணகியைக் குறித்துப் பாடுவோம் என்று கூறுகிறாள். கண்ணகியைக் குறித்து இவர்கள் பாடக்கூடியது என்ன? இவர்களுக்கு அவளைக் குறித்துத் தெரிந்த செய்தி ஒன்று தான். வானோர், கோவலனோடு வந்திறங்கிக் கண்ணகியையும் உடனழைத்துச் சென்றார்கள் என்பதே அது.

மதுரை மாநகரின் மேற்றிசை வாயிலைக் கடக்கும்போது கண்ணகி ஒன்று சொன்னாள். மதுராபதித் தெய்வம் கூறிய ஆறுதல் மொழிகளை ஏற்காத கண்ணகி, ''என் தலைவனை நான் காணும் வரையில், ஓரிடத்தில் நான் இருக்கவும் மாட்டேன்; நிற்கவும் மாட்டேன்'' என்று சூளுரை போலச் சொல்லிப் புறப்பட்டாள். அவள் பலர் தொழும் பத்தினியாகலின் அவள் உரை பொய்க்கலாகாது; மெய்யுரையே ஆதல் வேண்டும். எனவே, வானவர் கோவலனோடு வந்திறங்கினர்; அவளைக் கண்ணகிக்குக் காட்டினர். அவள் தன் கணவனைக் கண்டாள்.

''முலையினால் மாமதுரை கோளிழைத்தாள்காதல்
தலைவனை வானோர் தமராரும் கூடிப்
பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலையொன்று பாடுதும் யாம்''

இப்பெண்கள் தாமறிந்த செய்தியைக் கொண்டே கண்ணகியின் பெருமையை வியந்து

போற்றுகின்றனர். கண்ணகியைப் போற்றும் போதும், தலைவியின் மணத்தைக் குறித்து வேண்டுவோம் என்று சொல்கின்றனர்.

''தீமுறை செய்தாளை ஏத்தியாம் பாடுங்கால்
மாமலை வெற்பன் மணவணி வேண்டுதுமே''

முருகப்பெருமான் ஒருவனையே தெய்வமாக வணங்கி வந்த அக்குன்றுவாழ் மக்களின் உள்ளத்தில் கண்ணகியும் ஒரு தெய்வமாக இடம் பெற்று விட்டாள் என்பதை ஆசிரியர் குறிப்பாகத் தெரிவிக்கிறார்.

வேங்கை மரத்தடியில் நின்ற கண்ணகி கணவனோடு வானுலகம் சென்ற அந்த வியப்புக்குரிய காட்சி அம்மக்களின் கண்ணிலிருந்தும் கருத்திலிருந்தும் அகலவில்லை. கண்ணகியின் செய்தியை அவர்கள் ஓயாமல் பேசுகின்றனர். பத்தினிப் பெண்கள் அவளைப் போற்றிப் புகழ்கின்றனர். கண்ணகி வானுலகம் சென்றதை அவர்கள் தம் கண்ணால் கண்டிருந்தும், அவள் வேங்கை மரத்தடியில் என்றும் தங்கியிருக்கின்றாள் என்று நம்புகின்றனர். தங்கள் பசிய புனத்தை விட்டு அவள் நீங்கிச் செல்லாள் என்பது அவர்கள் எண்ணம்.

வானகம் சென்ற கண்ணகியைப் புகழ்ந்து பாடிக் குரவைக் கூத்து ஆடுகிறார்கள். அப்படிச் செய்வதனால் தங்கள் ஊர்க்கு ஒரு நன்மை உண்டாகும் என்று இப்பெண்கள் எண்ணுகின்றனர். என்ன நன்மை? தலைவி, மணம்பெறும் நன்மை. தலைவியின் மண விழாவினைக் கண்டு களிக்கும் நல்ல பெற்றி அந்த ஊருக்குக் கிடைக்கும். இப்பெண்கள் ஆடிப் பாடுவதைத் தலைவன் காண்கிறான். தலைவியின் ஆழ்ந்த அன்பை உணர்ந்து உள்ளம் நெகிழ்ந்து அவளை மணந்து கொள்ள முற்படுகின்றான்.

இப்படித் தலைவன் தலைவியின் காதலையும், முருகப்பெருமானின் பெருமைகளையும், கண்ணகியின் கற்பு மேம்பாட்டையும், மாறி மாறிப் பாடி வந்த பெண்கள் இறுதியாகத் தங்கள் மன்னன் சேரனை வாழ்த்தி முடிக்கின்றனர்.

கண்ணகியின் வரலாற்றைக் கூறி வரும் ஆசிரியர் இளங்கோவடிகள், தக்கதோர் இடத்தில் இந்தக் குன்றக்குரவையை அமைத்துக் குறமகளிர் வாயிலாக முருகப்பெருமானின் பெருமைகளை மிக அழகாக எடுத்துக் கூறுகிறார்; கண்ணகியை அவர்கள் தெய்வமாகப் போற்றி வழிபடுவதையும் குறிப்பிடுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக இப்பகுதியில் வரும் அகப்பொருட் செய்திகள் அறிவுக்குப் பெரு விருந்தாய் அமைந்துள்ளன. பழந்தமிழ்ச் சான்றோர் பாடல்களில் காணும் நயங்கள் அனைத்தையும் காண்கிறோம். அகழ அகழ வற்றாத தங்கச் சுரங்கம் போல இப்பகுதியை ஆழ்ந்து படிக்கப் படிக்க இலக்கிய நயங்கள் வெளிப்பட்டுச் சுடர்விட்டு ஒளி பரப்புகின்றன. உலகம் கண்ட உயர்ந்த இலக்கியங்களுடன் ஒப்புமை கூறத் தக்க ஒரு பகுதியாக இது அமைந்துள்ளது.

***

# முப்பெரும் தலங்கள் - வளர்ச்சித் திட்டம்

இராமேசுவரம், மகாபலிபுரம் என்னும் புகழ்மிக்க பழம்பெரும் தலங்களை, அயல் நாட்டவர் பலரும் மேலும்மிக அதிக அளவில் வருகைதந்து கண்டு களிப்பதன் பொருட்டு, சிறந்த சுற்றுலாத் தலங்களாக்கப் பெரும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு ரூபா 34 கோடி செலவிடப்படும் என்று செய்தி-சுற்றுலா-அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், அண்மையில் அறிவித்துள்ளார்கள்.

இராமேசுவரத் தலத்தின் முக்கியத்துவத்தை முன்னிட்டு, தமிழ்நாடு அரசு ரூ.28 கோடி செலவில் இப்பெருந்திட்டத்தை வரைந்துள்ளது. இத்திட்டம் 5 ஆண்டிலிருந்து 7 ஆண்டுகளுள் செயல்படுத்தப்படும். இப்பெருந்திட்டத்தின்கீழ், சுற்றுலாவின் அடிப்படை அமைப்புத் தேவைகள் இராமேசுவரத்தில் அமைக்கப்பெறுவதோடு, அயல் மாவட்டமான இராமநாதபுரமும் மேம்படுத்தப்படும். பாம்பன் - கீழக்கரை இரண்டு இடங்களும், இத்திட்டத்தின்கீழ்க் கடற்கரை வளாகங்களாக மேம்படுத்தப்படுவதுடன், இங்குத் தங்குமிட வசதிகளும் விரிவுபடுத்தப்பெறும். துறைமுக வளர்ச்சி, மற்றும் புதியசாலை அமைப்புகளின் வளர்ச்சி ஆகியவையும் செய்யப்படும்.

மாமல்லபுரம் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மாமல்லபுர நகரம் ஒரு சர்வதேசக் கடற்கரை வளாகமாக்கப்படும். இதற்குஎன மத்திய அரசின் உதவியோடு, ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாரதநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளினின்றும் வருகின்ற சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை பெருகி வருவதனால், புகழ்மிக்க பழம்பெரும் தலமாகிய கன்னியாகுமரியின் வளர்ச்சிக்கும், மாபெரும் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இத்தகவல்களை அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் அண்மையில் அறிவித்துள்ளார்கள்.

# தமிழக ஓவியச் சிறப்பு

திரு. க. சி. கமலையா, அசோக் நகர்

**இலக்கியம் இயம்பும் ஓவச் செய்தி:**

ஓவியம் தோன்றியது, மனிதன் அநாகரிக னாய்க் குகைகளில் வாழ்ந்த காலம் எனலாம். காடுகளில் சென்று வேட்டையாடி, இறைச்சி யுண்டு, குகைகளில் ஒதுங்கிய நேரத்தில், கையில் கிடைத்த கரித்துண்டை வைத்துக் கொண்டு குகைகளின் சுவர்களில் கிறுக்கிக் கொண்டிருந்த பொழுதுதான் மனிதன் ஓவியனானான். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் தோன்றிய ஓவி யர்களும் குகைச்சுவர்களை ஓவியம் தீட்டும் பலகையாகக் கொண்டார்கள். நாகரிகம் முதிர்ந்த பின்னர் அதற்கெனப் பதப்படுத்தப் பட்ட சுவரில் எழுதினார்கள். திரைச்சீலைகள் உபயோகப்படுத்தப்பட்ட காலத்தில் துணியில் ஓவியம் தீட்டினார்கள். நிறங்களைப் பாகுபாடு செய்யத் தெரிந்து, இயற்கை காட்டும் எழிற் காட்சிகளைத் தங்கள் கைத்திறமையால் சிறப் புறச் செய்யவேண்டும் என்ற எண்ணம்எழுந்த போது வண்ணக்கலவைகளை உண்டாக்கும் விதத்தை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். பாடின பாடல்களைக்கூட நிறம் என்றுசொல்லி மனிதர்கள் அதனைப் பாகுபடுத்திக் கொண் டார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்புள்ள தமிழிலக்கியத்தில் ஓவியம் மிகப் பழைய காலத்திலேயே உயர்நிலையிலிருந் ததைத் தெரிந்து கொள்ள முடியும். பொருள் தேடுவதற்காகச் செலவு மேற்கொண்ட கண வனை வழியனுப்ப வந்த மனைவியின்நிலையை அகநானூற்றுப் பாடல் ஒன்று எடுத்து இயம்பு கிறது. வாய் திறவாமல் அமைதி இழந்த முகத் துடன் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு, பிரிவில் அவள் கண்ட இன்னலை, ஓவியம் நிலைத்து நின்று ஒரு செய்தி சொல்வதுபோல், உணர்த்திக் கணவன் முன்நின்றாள். கண் பார்வையை நீர்மறைத்தது.

''ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஒற்றிப்
பாவை மாய்த்த பனிநீர்''

ஓவியத்தில் வல்லார்கள் ஓவியர் எனப்பட் டார். ஓவியர்களைக் கண்ணுள் வினைஞர் என்று மதுரைக் காஞ்சி சிறப்பித்துக் கூறுகிறது.

''எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞர்''

—மதுரைக்காஞ்சி, வரிகள் 516—518.

நோக்குவார் கண்ணெதிரே தம் தொழிலை நிறுத்துபவர் என்பது பொருளாகும். பரிபாடலி லிருந்து பண்டைத் தமிழ்நாட்டில் ஓவியக்கூடங் களிருந்தனவென்று தெரிந்து கொள்கின்றோம். அவைகள் எழுத்துநிலை மண்டபங்கள் எனப் பெயர் பெற்றன. முருகனை வணங்க வந்த பாண்டிய அரசனுடன் சேனைப் பரிவாரங்களும் வந்தனர். வழுதியுடன் வந்தவர்கள் திருப்பரங் குன்றத்தில் எழுத்துநிலை மண்டபங்களிலிருந்த ஓவியங்களைக் கண்டு களித்தார்கள். அங்கு இரதியையும் காமனையும் கண்டார்கள். பூனை யுருவெடுத்த இந்திரன் இவன், அகலிகை இவள், கௌதமன் இவன், அவனால் சபிக்கப்பட்டுக் கல்லுருவானவாறு இப்படி என்று, ஒவ்வொரு சித்திரத்தையும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

இரதி காமனிவள் இவன்எனாஅ
விரகியர் வினவ வினாவிறுப் போரும்
இந்திரன் பூசை இவள் அகலிகை இவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிதென் றுரைசெய் வோரும்
இன்ன பலபல எழுத்து நிலை மண்டபம்

—பரிபாடல், 19. செவ்வேள்.
வரிகள் 48—53-
ஆசிரியர், நப்பண்ணனார்.

சென்றவர்களால் சுட்டிக் காட்டிக் கேட்கவும், கேட்டவற்றை அறிவிக்கவும் இருந்தது.

வண்ணம் கொண்டு தீட்டப்படாதஓவியம் புனையா ஓவியம் எனப்பட்டது. 'நெடுநல் வாடை'யில் புனையா ஓவியம் பற்றிய குறிப் பொன்றுளது. ஓவிய நூல்கள் இருந்தன என் பதை,

நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரை நூற் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை

என்ற வரிகள் தெரிவிக்கின்றன. சுதை தீற்றப் பெற்ற ஒவ்வொரு வீட்டுச் சுவரின் மேலும் எழுதப்பட்ட ஓவியங்கள் பற்றியும் மணி மேகலை சுட்டுகிறது.

''சுடு நிலை ஓங்கிய நெடுநிலை மனை தொறும் மையறு படிவத்து வானவர் முதலா எவ்வகை உயிர்களும் உவமங்காட்டி வெண் சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய கண்கவர் ஓவியம்.'' காவிரிப்பூம்பட்டினத்துத் தெருக் களில் தேர்கள் விரைந்து சென்று எழுப்பிய

புழுதி, சித்திரங்களையுடைய ஒளி பொருந்திய கோயில்களின் மேல் படுவது, புழுதியை மேலே பூசிக்கொண்ட யானையைப் போல் தோன்றியது என்று, பட்டினப்பாலை செய்தி சொல்கிறது. மாதவி நாட்டியமாடுவதற்கு எழுந்த அரங்கில் 'பூதரையெழுதி மேனிலை வைத்து' ஒருமுக எழினியும், பொருமுக எழினியும், கரந்துவரல் எழினியும், வகுத்து எழுந்த அருந்தொழில் அரங்கில் ஓவிய விதானமிருந்தது என்று சிலப்பதிகாரத்தினின்றும் அறிந்து கொள்ள முடியும். திரையில் ஓவியம் தீட்டப் பட்டிருந்தது என்று சிலப்பதிகாரம் கடலாடு காதையில் குறிக்கப்பட்டிருக்கிறது.

''ஓவிய எழினி சூழவுடன் போக்கி
விதானத்துப் படுத்த வெண்காலமளி''

*(வரிகள் 169.170)*

### சித்தன்னவாசல் ஓவியங்கள் :

சிலப்பதிகாரத்தில் யாழைத் தாங்கிய மாதவி, யாழை மீட்டிப் பாடி ஓய்ந்து சித்திர நூல்களில் சொல்லப்பட்ட ஒன்பது நிலைகளில் ஒன்றில் நின்றாள் எனவும் அறிந்து கொள்கிறோம். ஓவு, ஓவம், ஓவியம், எழுத்து, படம் என்பவை ஒருபொருட்கிளவி. ஓவியங்கள் வைக்கப்படும் இடம் ஓவியக்கூடம் எனவும், எழுத்து நிலை மண்டபம் எனவும் வழங்கின. ஓவியங்கள் சுவர்களிலும், திரைச் சீலைகளிலும் பாறைகளிலும் தீட்டப்பட்டன. ஓவியம் தீட்டும்கோல் 'துகிலிகை' என்றும், 'தூரிகை' என்றும் 'வட்டிகை' என்றும், வண்ணக்குழம்புகள் கொண்ட பலகை - வட்டிகைப் பலகை' என்றும் சொல்லப்பட்டன.

இலக்கியத் தொன்மையின்றித் தமிழ்நாட்டின் கலைச் சிறப்பைத் தெரிந்து கொள்ளமுடியாது. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த சித்தன்ன வாசலிலுள்ள ஓவியங்களே நாம் காணக்கூடிய பழைய ஓவியங்கள். அதற்கு முன்பிருந்த ஓவியங்கள் கிடைத்தில. பல்லவர் காலத்துக்கு முன்பு இருந்திருக்கக்கூடிய ஓவியங்கள் தமிழ்நாட்டில் நிலவிய வெப்ப தட்ப நிலையால் தாக்கப்பட்டு அழிந்திருக்கவேண்டும். சித்த அண்ணல்களின் இருப்பிடமாதலால் சித்தண்ணவாயில்கள் எனப் பெயர் பெற்றுக்காலப் போக்கில் சித்தன்ன வாசல் என மருவி வழங்கலாயிற்று. பல்லவ அரசனாகிய மகேந்திரவர்மன் (கி. பி. 640-670) சமணனாக இருந்த காலத்தில் சித்தன்ன வாசலிலுள்ள குகை குடையப்பட்டு, அக்குகையிலுள்ள தூண்கள், சுவர்கள், கூரைகள் ஆகிய இடங்களில் ஓவியங்கள் எழுதப்பட்டன. மிகவும் சீர்கேடான நிலையில் இருந்த ஓவியங்கள், 1920-ல்ஆண்டில் துப்ரே என்ற பிரெஞ்சுக்காரர் ஒருவராலும், து. அ. கோபிநாதராவ் என்பவராலும் கண்டு பிடிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களைப் போலவே, சுதை தீட்டிய சுவர்களில் வரையப் பட்டுள்ளன.

கற்பாறைகள் ஓவியம் தீட்டுவதற்கு ஏற்றதன்று. எனவே, பாறையைக் கரடுமுரடின்றி-மேடுபள்ளமில்லாமல் - ஒரே தளமாகச் செதுக்கிக்கொண்டு, பின்னர் அத்தளத்தின் மேல் சுண்ணாம்புச் சாந்து பூசப்பட்டது. சுண்ணாம்புச் சாந்தின் அளவு ஒரு நெல் பருமன். ஈரம் உலர்வதற்குமுன் வரையவேண்டிய ஓவியத்தின் முன்னோடியாக ஓவியன் கோடுகளைக்கொண்ட வரைபடம் ஒன்றை எழுதிக் கொண்டான். சுண்ணாம்புத் தளத்தில் ஈரப்பசை இருக்கும் பொழுதே அதை மெருகிட்டுப் பிறகு வண்ணங்களைக் கொண்டு ஓவியம் வரைந்தான்.

அர்த்தமண்டபத்தையும் கருவறையையும் கொண்ட இக்குகையில், அர்த்தமண்டபத்தின் இரண்டு தூண்களில் நாட்டியமாடும் இரு பெண்களின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. வலது தூணில் உள்ள பெண் அபயமுத்திரை காட்டி, இடது கையை நீட்டி, உடலை வளைத்துச் சாய்ந்து நிற்கிறாள். பலவித அணிகள் பூண்டுள்ளாள். வளையல்கள், கடகம், காதில் ஓலைகள், தாழைமடல்கள், சுட்டி ஆகியவை காணப்படுகின்றன. இடது தூணிலுள்ள வளோ முன்சொன்னவளைக் காட்டிலும் அழகு மிகுந்து காணப்படுகிறாள். தென்புறத் தூணில் ஓர் அரசனும் அரசியும் கோயிலுக்குப் போவது போல் வரையப்பட்ட ஓவியம் காணப்படுகிறது. அரசன் கழுத்தில் மணிமாலையும் காதில் குண்டலங்களும், தலையில் மகுடமும் அணிந்திருக்கிறான். அரசியின் தலை கொண்டையிடப்பட்டுள்ளது. இங்குக் காணப்படும் அரசன் காஞ்சி ஆதிவராகர் கோயிலில் உள்ள படத்தை ஒத்திருக்கின்றதால், சித்தன்ன வாசல் குகையைக் குடைவித்த மகேந்திரவர்மனுடைய தோற்றமே என்று சொல்லப்படுகிறது.

அர்த்தமண்டபத்துக் கூரையின் நடுவில் தாமரைக்குளம் ஒன்று வரையப்பட்டுள்ளது. இக்குளத்தில் தாமரை மலர்களும், மொட்டுகளும், கொடிகளும் மிகுதியாக உள. கொடிகளும், இலைகளும், அல்லி மலர்களும், செங்கழுநீர்ப் பூக்களும் இக்குளத்தை அழகு செய்கின்றன. தாமரைபூத்த இத்தடாகம் மீன்களும் பறவைகளும் இருப்பதுபோலவும் யானைகளும் மாடுகளும் அத் தடாகத்தைக் கலக்கி விளையாடுவது போலவும் காட்சியளிக்கிறது. சமண பவ்வியர்கள் குளத்தில் இறங்கி நீராடப் போகின்றார்கள். மூன்று மனித உருவங்களும் தடாகத்தில் காணப்படுகின்றன. இருவர் கோவணதாரிகள்; ஓட்டைக் காதுடையவர்கள். ஒருவர் வலது கையால் மலர் பறிக்கிறார். இடது கையில் பூக்குடலை இருக்கிறது. இவர்கள் நிறம் சிவப்பும் செம்மை கலந்த மஞ்சளும், மற்றொருவர் தாமரைப் பூவைத் தண்டுடன் வைத்திருக்கிறார்.

சித்தன்னவாசல் ஓவியங்கள் பார்ப்போரின் மனத்தை ஈர்க்கின்றன. அவை உயிர்த் துடிப்புடன் காணப்படுகின்றன. கலையில் கைதேர்ந்த ஓவியனின் படைப்புகளே இந்த ஓவியங்கள். நாடகக் கணிகைகள் தோற்றமும், அவர்கள் கைவீசி உடலை வளைத்து நெளிந்தாடும் கோலமும் ஓவியனின் கைத்திறமையை

மட்டுமின்றி, அவன் நாட்டியக் கலையையும் நன்கு பயின்றவன் எனக் காட்டுகின்றன. சித்தன்ன வாசல் ஓவியங்கள் முற்காலப் பாண்டியர்களுடையவை என்ற கருத்தும் நிலவுகிறது.

**காஞ்சிக் கயிலாசநாதர் கோயில் ஓவியங்கள் :**

பல்லவ அரசன் இராஜசிம்மனால் (கி.பி. 690-710), காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் கட்டப்பட்டது. அங்குள்ள சுவர்களின் மீது ஓவியங்கள் தீட்டப்பட்டன. பலமுறைகள் சுண்ணாம்பு நீரால் வெள்ளையடிக்கப்பட்டதால் அவை மறைக்கப்பட்டிருந்தன. ஓவியங்கள் மறைபட்டிருப்பதை அறிந்து சுண்ணாம்பு மேல் பூச்சுக்களைச் சுரண்டும்போது பல ஓவியங்கள் சிதைந்து போயின. ஓர் உடலும், ஒரு முழங்கையும் விரிந்த கையின் விரல்களுமே இப்போது காணப்படுகின்றன. வண்ணக் கலவை, ஓவியனின் கைவண்ணக் கலவையைக் காட்டுகிறது.

**தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஓவியங்கள் :**

சித்தன்ன வாசல் ஓவியங்களுக்குப் பிறகு சோழர் காலத்தில் ஓவியம் சிறப்புற்றது. இராசராசன் எடுப்பித்த தஞ்சைப் பெரியகோயிலில் கருவறையின் திருச்சுற்று மாளிகையில் பல ஓவியங்கள் உள. நுண்கலைகளின் பிறபகுதிகளில் இராஜராஜன் எவ்வளவு கவனம் செலுத்தினானோ அதே போன்று ஓவியக்கலையிலும் அவனுக்கிருந்த ஈடுபாட்டை அங்குள்ள ஓவியங்கள் காட்டுகின்றன. கருவறையைச் சுற்றியுள்ள இடத்தில் ஒரு மனிதனே நடக்க முடியும். இருள் நிரம்பியுள்ளது. அங்குதான் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. தஞ்சையில் நாயக்கர் ஆட்சி நிலவியபோது சோழர்காலத்து ஓவியங்கள்மீது சுண்ணாம்பு சாந்து பூசப்பட்டு ஓவியங்கள் எழுதப்பட்டன. வெப்பதட்பநிலையால் தாக்கப்பட்டு அண்மையில் அச்சாந்து உதிர்ந்து விட்டதால், சோழர் ஓவியங்கள் கண்ணுக்குத் தென்படலாயின. இராஜராஜனுடைய ஆட்சிக் காலத்தில் சைவம் கோலோச்சியது. சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஓவியம் ஒன்று அங்கே காணப்படுகிறது. சுந்தரரின் திருமணத்தைச் சிவபெருமான் கிழவேதியர் வேடத்தில் வந்து தடுத்து விடுகிறார். எதிரே திருவெண்ணெய் நல்லூர்க் கோயில் வரையப்பட்டுள்ளது. அதற்கடுத்துச் சோறு பொங்கும் ஒரு பெண்ணிடமிருந்து குடியானவன் ஒருவன் உணவு பெறுகின்றான். சற்று மேலே கயிலாயத்தில் சிவபெருமான் புலித்தோலின் மீது யோக மூர்த்தியாய் அமர்ந்திருக்கிறார். நந்தியும் சிவகணங்களும் உளர். அப்சரசுகள் நலினமாடுகின்றனர்.

அதற்குக் கீழே சுந்தரரும் அவருடைய நண்பர் சேரமான் பெருமாளும் முறையே வெள்ளையானை மீதும் குதிரையின் மீதும் அமர்ந்து தேவகானங்கள் இசைக்கக் கயிலாயம் நோக்கி வருகின்றனர். அவர்கள் ஆறொன்றைக் கடப்பது போன்ற தோற்றம். தேவ கந்தர்வர், அவர்கள் மேல் பூமாரி பொழிகின்றனர். வானுலகத்து அப்சரசுகள் நடனமாடிக் கொண்டு நாயன்மார்களை வரவேற்றுக் கயிலாயத்துக்கு அழைத்துக் கொண்டு போவது போலக் காணப்படுகின்றனர். நடனமாதர் மூவரும் இடது கையை இடுப்பில் வைத்துக் கொண்டு, வலது கையை அரைநிலா முத்திரையாகக் காட்டி இடுப்பை வளைத்து வானத்தில் பறந்து செல்வது போன்ற தோற்றம். மிகச் சிறந்த ஓவியங்களில் இது ஒன்றாகும். கண்களின் மருட்சியும் கொண்டை அழகும் விம்மிப் புடைத்த மார்புகளும் இவ்வோவியத்தின் தனிச்சிறப்புகள்.

பெருவுடையார் கோயிலில் காணப்படும் நடனமாது ஓவியம் ஒன்று, குறிப்பிடத்தக்கது. ஆடுகின்றவளின் பின்தோற்றத்தைக் காண்கிறோம். வலது கையைத் தலைக்கு மேல் உயர்த்தி, முதுகை வலப்புறம் வளைத்து, வலது காலை மடித்துப் பாதத்தைப் பின்புறமாகத் திருப்பி, இடது காலுடன் இணைத்து, இடது கையை நன்றாக மடித்து முன்பக்கம் கொண்டு போய், முகத்தைப் பின்புறம் பாதி முகம் தெரியுமாறு திருப்பி, வலது மார்பின் பகுதி தெரிய, இடுப்பில் கட்டியுள்ள 'உதரபந்தனம்' ஆடும் வேகத்தைக் காட்டச், சதுரதாண்டவத்தை ஒத்த நடனத்தை நிகழ்த்துகின்ற ஆடல்மகள் ஒற்றைக் கண்ணால் பின்பக்கம் பார்ப்பது ஆடலின் உச்ச நிலையைக் காட்டுகிறது. உருண்டு திரண்ட அவள் உறுப்புக்களும் இளமையின் வனப்பும் ஆடலின் அழகும் நாட்டியக்கலை சோழப் பேரரசின்கீழ் எத்துணை சிறந்து விளங்கியது என்பதைக் காட்டுகின்றன.

தஞ்சைக் கோயிலிலுள்ள இன்னோர் ஓவியம் ஆடல் வல்லானுடையது. இராஜராஜனும் தேவியரும் தங்கள் குலதெய்வமான தில்லை நடராஜனை வணங்கி நிற்கின்றனர். பெருவுடையார் கோயில் நடராஜர் செப்புத் திருமேனியும் அங்குக் காணப்படும் ஓவியமும் கோயில் முகப்பிலுள்ள கல்லில் செதுக்கப்பட்ட கூத்தப்பெருமான் சிற்பமும் இராஜராஜன் காலத்தில் நடராஜர் உருவ அமைப்பின் ஒற்றுமையை உணர்த்துகின்றன. பிருகதீசுவரர் கோயிலின் ஓவியங்கள் முந்திய சோழர்காலத்து ஓவியக்கலையின் நிலைக்கு மிகவும் மதிப்பு வாய்ந்த ஆதார மூலமாக அமைகின்றன. சித்தன்னவாசல், பனைமலை, காஞ்சிபுரம், ஆகிய இடங்களில் காணப்படும் முதல்தர ஓவியத்தின் நயம், இந்த அழகிய ஓவிய வரிசையில் தொடரப்பட்டிருக்கிறது என்று திரு. சிவராமமூர்த்தி 'இந்தியஓவியம்' என்ற நூலில் எழுதுகிறார்.

**கேரள ஓவியங்கள் :**

இன்றையத் தமிழ்நாட்டுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது, ஒரு காலத்தின் அதன் பகுதியாயிருந்த கேரளம் என்ற சேர நாடாகும். மொழியாலும் வரலாற்றாலும், இனத்தாலும் மிக நெருங்கியது கேரளம், எனவே கலைத்துறையிலும் தமிழ்நாட்டுக்கும் கேரளத்துக்கும் பெரியதோர் இடைவெளி யில்லை. சேரமான் பெருமாள் நாயனாரும், குலசேகராழ்வாரும் சேர அரசர்கள். எல்லோரும் தமிழுக்குரியவர்களே. ஓவியத்துறையிலும்

கேரளத்து ஓவியம் தமிழ்நாட்டு ஓவியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதுவே. ஏற்றுமானூர்க் கோயிலிலுள்ள நடராஜர் ஓவியம் பற்றி ஆனந்தக் குமாரசாமி புகழுரை வழங்கினார். இங்குள்ள இப்பெரிய ஓவியத்தில் நடராஜருக்குப் பதினாறுகைகள் இருக்கின்றன. கீழேயுள்ள வலது இடது கைகள் வரங்கொடுப்பதாயும் தண்டஹஸ்தமாயும், உள. வலது புறக் கைகளில் கோடரி, தமருகம், பாம்பு, பாசக் கயிறு, நெருப்பு, பிறைநிலா, திரிசூலம் ஆகியவை உள. இடது கைகளில் மான், மலர், வீணை, அங்குசம், மண்டையோடு, நந்திக் கொடி ஆகியவற்றை இறைவன் வைத்துள்ளார். முடியின் உச்சியில் சந்திரன் இருக்கின்றான். முயலகன் சற்றுப் பருமனானவன். அவனிலும் பெரியது அவன் காலடியில் கிடக்கும் பாம்பு. திருமால் கடம் வாசிக்கிறார். நான்முகன் தாளம் கொட்டுகிறார். அன்னை அருகில் நின்று இறைவன் ஆடலைக் காண்கிறாள். முழு வட்டமாய்த் திருவாசி அமைந்துள்ளது. தேவர்களும் முனிவர்களும் தலைமேல் கைகூப்பிய நிலையில் உள்ளனர். இறைவன் ஆடலைப் பலர் கூட்டமாய் நின்று கண்டுகளிக்கும் காட்சி,

கூடிநின்றா னொரு காலத்துத் தேவர்கள்
வீடநின்றான் விகிர்தா வென்னும் நாமத்தைத்
தேட நின்றான் திகழும் சுடர் மூன்றொளி
ஆடநின்றான் என்னை ஆட்கொண்டவாறே

என்ற திருமூலர் பெருமானின் திருவாய் மொழிக்கு இலக்கணம் போலமைந்துள்ளது. ஏற்றுமானூர்க்கோயில் ஓவியம். இது கி. பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

ஏற்றுமானூர்க் கோயிலில் மரவேலைப் பாடுள்ள படம் ஒன்று ஓவியத்தை ஒத்து அமைந்துள்ளது. கருவறைக்குள் நுழையும் வாயிலுக்கு மேல், இரண்டு கைகளுடன் கல்லில் ஒரு பலகைச் சிற்பமும் செதுக்கப்பட்டிருக்கிறது. கேரளத்தில் நடராஜ ஓவியங்கள் பல உள. அவை உன்னிப்பாய்ப் பார்க்கப்படவேண்டும்.

கொச்சி மட்டாஞ்சேரி அரண்மனை ஓவியம் ஒன்று வில்வளைத்துப் போர் செய்யும் இலட்சுமணனையும் இந்திரசித்தையும் காட்டுகிறது. வளைத்த வில்லிலிருந்து ஒருவர் மற்றொருவர் மேல் செலுத்தும் கணைகளையும் காண்கின்றோம். அனுமன் தோளின் மேல் இலட்சுமணன் அமர்ந்து போர் செய்கின்றான். இரு தரப்பு வீரர்களும் இப்போர்க் காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஓவியம் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

### நாயக்கர் காலத்து ஓவியங்கள் :

சோழ அரசர்கள் காலத்துக்குப்பின் தமிழ் நாட்டை ஆண்ட நாயக்கர்கள் காலத்திலும் ஓவியம் தழைத்தது என்று தெரிகிறது. சோழர் கால ஓவியத்தின் எழிலையும் உயர்தரத்தையும் எட்டிப் பிடிக்கவில்லையென்றாலும், ஓவியக் கலைச்சுடர் அணையவில்லை. மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் பொற்றாமரைக் குளத்துக்கு வடபக்கத்துச் சுவரில் சோமசுந்தரக் கடவுள் புரிந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் எழுதப்பட்டுள்ளன. கவனிப்பாரற்று இவை மங்கிப் போய் விட்டன. திருவிளையாடற் புராணத்தைப் பாமர மக்கள் படிப்பதற்கெனப் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்களில் இப்படங்களையொட்டிப் பல படங்கள் அண்மைக்காலம் வரை அச்சிடப்பட்டு வந்தன.

மதுரையை ஆண்டவர்களுள், அரசி மங்கம்மாள் குறிப்பிடத்தக்கவர். பலவித நன்மைகளை மக்களுக்குச் செய்தவள் என்று சொல்லப்படுகிறது. பயணிகள் நலன் கருதிச் சாலைகளில் மரங்கள் வைக்க ஏற்பாடு செய்தாள். மங்கம்மாள் சாலைகளை மதுரை, திருநெல்வேலிப் பகுதிகளில் இன்றும் காணலாம். மகன் இறந்தபின் பேரன் வயது வரும்வரை ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்தாள். மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் பொற்றாமரைக் குளத்தையொட்டி மேற்குப் பக்கம் ஒரு சிறு மண்டபம் இருக்கிறது. அம்மண்டபத்தில் மேலே உட்பக்கம் மங்கம்மாளும் அவளுக்கெதிர்ப்பக்கம் அவளுடைய அமைச்சனும் மீனாட்சிசுந்தரேசுவரரை வணங்குவதுபோன்ற ஓவியம் ஒன்று வரையப்பட்டுள்ளது. மங்கம்மாள் கைம்பெண்ணாயினும் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு விளங்கும் பெண்மணியாய்த் தோற்றமளிக்கிறாள். எதிர்ப்புறம் நரசப்பையா என்ற அமைச்சன் நிற்கிறான். கிழவன் சேதுபதி மறவர் நாட்டை ஆண்டபொழுது படையெடுத்துச் சென்ற நரசப்பையா, கொல்லப்பட்டான். சொல்லப்படும் கதைக்கேற்ப கி. பி. 1704-ஆம் ஆண்டில் அவளுடைய பேரன் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வயது வந்த காலை, அச்சய்யா என்ற பிராமணன் சொல்லைக் கேட்டு மங்கம்மாள் ஆட்சியைத் துறக்காமலிருக்கவே, அவள் கைது செய்யப்பட்டு உணவு மறுக்கப்பட்டு இறந்தாள்.

திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் கருவறையைச் சுற்றிய திருவிண்ணிழியைத் தாங்கிய முதற்பிராகாரம் புறச்சுவரிலும் மேல்தளத்திலும் வைணவ நூற்றெட்டுத் திருப்பதிக் கோயில்களின் தோற்றமும் அங்குள்ள பெருமாள், தாயார் திருவுருவங்களும் ஆங்காங்கே காணப்படுவதுபோல் எழுதப்பட்டிருக்கின்றன. பெயர்கள் தெலுங்கில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அதே போன்று திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலிலும் திருவிண்ணகரங்கள் வண்ணத்தால் எழுதப்பட்டுள்ளன.

### ஓவியர்மணி இரவிவர்மாவின் படைப்புகள் :

தெய்வங்களைத் தென்னாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர் இரவிவர்மா. இந்தியா முழுவதிலும் குடில்களை, அரண்மனைகளை-அறிஞர் இல்லங்களை-திருக்கோயில்களை-பஜனைமடங்களை-தோட்டி முதல் தொண்டைமான் வரையுள்ள எல்லாத் தரப்பினர் இதயங்களையும் அழகுபடுத்தின இரவிவர்மாவின் ஓவியங்கள் எனலாம். எண்ணெய் வண்ணத்தில் துணிமேல் தீட்டப்பட்ட இரவிவர்மாவின் ஓவி

யங்கள் ஆயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு நாடு முழுவதும் பரந்து கிடந்தன. சாதகப் புள் பருகவேண்டும் என்பதற்காக சந்திரனொளியை ஈசன் சமைத்தான்; பந்தியில் அமர்ந்து அமுதம் பருகவேண்டும் என்பதற்காகவே அமரர்களைப் படைத்தான்; இந்திரன் மாண்புக்காகவே வெள்ளை யானையைப் படைத்தான்.

''மலரினில் நீல வானில் மாதரார்முகத்திலெல்லாம் ஈசன்
இலகிய அழகை இயற்றினான் சீர்த்தியிருந்த
உலகினில் எங்கும்வீசி ஓங்கிய இரவிவர்மன்
அலகிலா அறிவுக் கண்ணால் அனைத்தையும் நுகருமாறே''

என்று சுப்பிரமணிய பாரதியார் இரவிவர்மாவுக்குப் புகழ்மாலை சூட்டினார் என்றாலும் இரவிவர்மா இந்நாட்டுக்கே உரிய பாணியைக் கையாளவில்லை என்பதால், இந்திய ஓவிய உலகில் சிறந்த இடம் பெறவில்லை என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. ''இரவிவர்மாவின் ஓவியங்கள் இந்தியக் கருத்துக்களை மையமாகக் கொண்டமையால் நாடு முழுவதையும் இணைக்கும் கருவியாக அவர் விளங்கினார். ஆனால் அவர் ஒரு சிந்தனாசக்தியுள்ள கலைஞராயிருந்திருந்தால் இன்னும் பத்து மடங்கு ஆழமாயும் அதிகமாயும் அவர் புகழ் பரவியிருக்கும். முன்னேற்றத்தின் ஒளிவிளக்கைப் பெற்றவர் அதைக் கைவிடவில்லையாயினும் உரிய முறையில் பயன்படுத்தவில்லை. களங்களைப் பற்றிய நோக்கு, சிந்தனாசக்தி இல்லாமை, கட்டுப்பாட்டுக் குறைவு, பொருளுக்கேற்ற குறிக்கோள், மிகப் புனிதமான நூல்கள் இதிகாசங்கள் பற்றியவைகளைக் கையாளுவதில் இந்திய உணர்ச்சி அருகிப் போயினமை ஆகியவைகளே அவருடைய குறைகள்''.

இரவிவர்மாவின் கலை உண்மையில் நாட்டுக் கலையன்று. தாமிருந்த சுற்றச் சூழலிலேயே அவர் உழன்றார். அவருடைய தெய்வங்களும் நாயகர்களும் மிகச் சாதாரணமான அச்சில் வார்க்கப்பட்டவர்கள். தாம் வகித்த இடங்களுக்கேற்ப அவர்களிடம் மேதகவு இல்லை. சுருங்கச் சொல்வதென்றால், இரவிவர்மாவின் படங்களில் நாட்டுக்கலை இல்லை. இந்திய வாழ்க்கையும் இலக்கியத்தையும் மேலெழுந்தவாறு அறிந்த எந்த ஐரோப்பிய மாணவனும், அவரைப்போன்று வரைய முடியும் என்ற ஆனந்தக் குமாரசாமியின் கருத்து சிந்தனைக்குரியது. ஆனந்தக் குமாரசாமி மனம் நொந்து எழுதியுள்ளார். நம்நாட்டு மரபில் வளர்ந்த இரவிவர்மா அதையொட்டியே படங்கள் வரைந்தார். மேட்டுக்குடி மக்களின் உருவங்களைத் தெய்வங்களுக்கு அவர்கொடுத்தார். என்றாலும் கன்னியாகுமரி முதல் பனிவரை ஈறாக அவருடைய ஓவியங்கள் மக்கள் மனத்தை உலுக்கி மகிழ்ச்சியைத் தந்தது என்பதை மறக்க முடியாது. கலைவன்மையை ஒளிப்பதிவு செய்யும் ஓவியங்கள் இரவிவர்மாவின் படைப்புகளில் இல்லையென்றும்சொல்லிவிடமுடியாது. நாயர்பெண், இசைக்கருவியை மீட்டும் தமிழ்ப்பெண் என்பவை குறிப்பிடத்தக்கதாகும். செந்தமிழ்நாட்டுச் செப்புத் திருமேனிகள், தென்னாட்டுக் கோயிற் சிற்பங்கள், கேரளத்து ஓவியங்கள் இன்னும் இவை போன்றவை, இவருடைய நெஞ்சைக் கௌவியிருக்குமாகில், புகழ்பெற்ற கலை வல்லுநர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இரவிவர்மா என்ற கதிரவன் எதிரில் மின்மினிப்பூச்சிகளாவார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை.

## இராமநாதபுரத்து ஓவியங்கள்

ஓவியத்துக்குப் பேர்போன சித்தன்னவாசல், மறவர் சீமையிலுள்ளது. 17-18-ஆம் நூற்றாண்டுகளில் மறவர் சீமையை ஆண்ட சேதுபதிகள், ஓவியத்தில் நாட்டம்கொண்டிருந்தார்கள் என்றால் வியப்பில்லை. இராமநாதபுரத்தில் உள்ள அரண்மனைச் சுவர்களில் பல ஓவியங்களைத் தீட்டச் செய்தார்கள். இராமலிங்க விலாச அரண்மனையில் இன்றும் அவ் ஓவியங்களைக் காணலாம். சேதுபதிகள் ஆட்சியின் முக்கிய நிகழ்ச்சிகளை அவைகள் தெரிவிக்கின்றன. தஞ்சாவூர்ப் போரைச் சித்தரிக்கும் ஓவியம் ஒன்றை இராமலிங்க விலாசத்தில் நுழையும்போது பார்க்கலாம். கி.பி. 1800ஆம் ஆண்டுக்குப் பிற்பட்டதாக இருக்கலாம். கர்னல்மார்ட்டின்சும், முத்துராமலிங்க சேதுபதியும் சந்திக்கும் ஓவியம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. முத்துராமலிங்க சேதுபதியின் ஆட்சியின்போது (கி. பி. 1760-1772), 1780-1794) கி. பி. 1770-ஆம் ஆண்டில் தஞ்சாவூர் அரசன் படையெடுப்பைத் தாமோதரம் பிள்ளை என்ற இராமநாதபுரம் தளவாய் முறியடித்தான். இராமநாதபுரம் சேனை கடைசியாக வாகைமாலை சூடியது. அப்பொழுதுதான் இராமேசுவரம் கோயிலிலுள்ள சொக்கட்டான் மண்டபம் என்ற பிராகாரங்களைக் கட்டியவன் முத்துராமலிங்க சேதுபதி. சேதுபதிகள் முடிசூட்டப்படும் கொலு மண்டபத்தின் மேல்தளத்தில் மன்னார்குடாவில் முத்துக் குளிப்பதைச் சித்தரிக்கும் படம் ஒன்றுள்ளது. அங்கேயே மறவர்கள் போர்த் திறமையைக் காட்டும் ஓவியம் ஒன்றும் தீட்டப்பட்டுள்ளது. புராண இதிகாசங்களைச் சித்திரிக்கும் படங்களும் நிரம்ப உள்ளன.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

# பிராட்டியின் பெருமை

திரு நா. வேணுகோபால் நாயகர், B.A.,B.L.,
செயலாளர்: ஸ்ரீவைஷ்ணவ மகா சங்கம், சென்னை.

பிராட்டி என்ற சொல், யாரைக் குறிக்கின்றது என்பதை முதலில் காண்போம். பூமிக்கு அடியிலே, மிக ஆழத்திலே அமைந்துள்ள வைரங்களைத் தோண்டி வெளியே கொண்டு வந்து தருவதைக் காண வியக்கின்றோம். கடலின் அடித்தளத்தில் குடிவாழும் முத்துக்களை, மூழ்கி மேலே கொண்டுவந்து தருவதையும் கண்டு மகிழ்கின்றோம். ரிஷிகள் இதிகாச புராணங்களை அருளினார்கள். ஆழ்வார்கள் அருளியது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். இதற்கு வியாக்கியானங்களை விளக்கி உரைகளை அருளியவர்கள் ஆசாரியர்கள். இவைகளில் ஊறிக்கிடக்கும் ரகசியங்களை, உட்பொருள்களை, வைரத்தையும் முத்தையும் மிக முயன்று திரட்டுவதுபோல, 18 நூல்களாகத் திரட்டி வெளியிட்டருளினார், வைணவ ஆசாரியரான பிள்ளை லாகாசாரியர். இவைகள் அஷ்டாதச ரகசியங்கள் எனவும் அழைக்கப்படும்.

இந்தப் பதினெட்டு நூல்களில் ஒன்றான முமுட்சுப்படியில், துவய அதிகாரத்திலும், சீர்வசனபூடணத்தில் புருஷகார உபாய அதிகாரத்திலும், 'பிராட்டி' என்றும், 'பெரிய பிராட்டி' என்றும் பெயர்ச் சொல்லாகவும், 'இவள்' என்ற சுட்டுச் சொல்லாகவும் அருளியுள்ளார். இவ்விதமாகப் பெரிய பிராட்டியார் என்றும், பிராட்டி என்றும் பேசுவது ஏன்?

பரம பதத்திலே 'திருமடந்தை மண் மடந்தை இருபாலும்' திகழ்வதாலே பூமிப் பிராட்டியாரான மண்மடந்தையினும், வேறுபடுத்தித் திருமடந்தையை அதாவது சீதேவியைப் பெரிய பிராட்டியார் என் அருளுகிறார் பிள்ளைலோகாசாரியர். திரு நாராயணனான இறைவனுக்குப் பரமபதம் நித்திய விபூதி (நிலையான இருப்பிடம்), அவதாரங்கள் கண்டருளும் இம்மண்ணுலகம் லீலாவிபூதி (விளையாட்டுக்கிடம்). தெய்விகத் தன்மை சுடர்விடும் பரமபதத்தில் எழுந்தருளியுள்ள போது தாயாரைப் பெரியபிராட்டியார் என்றும் பூமிப்பிராட்டியார் என்றும் குறிப்பிடுவது போல, மண்ணுலகாம் லீலா விபூதியில் தெய்வீகத் தன்மையை மறைத்துக் கொண்டு அவதரித்தருள்கையில் பிராட்டி என்பது மரபு. இதனால், சீதாபிராட்டி உருக்குமிணிப்பிராட்டி நப்பின்னைப்பிராட்டி எனச் சொல்வழக்குகள் ஏற்பட்டுள்ளன. இவர்களைப் பிராட்டியார் என்னாமல் பிராட்டி என்றாலும் சாலும். சீர்வசனபூடண நூலிலே, பிராட்டி என்ற சொல்லாலேயே, சீதாபிராட்டியைக் குறித்தருள்கிறார் பிள்ளை உலகாசாரியர்.

**இதை உறுதிப்படுத்தும் வாக்கியங்கள்:**

81. உபாயத்திற்குப் பிராட்டியையும் திரௌபதியையும், திருக்கண்ணமங்கையாண்டானையும் போல இருக்கவேணும். 82. பிராட்டிக்கும் திரௌபதிக்கும் வாசி சக்தியும்அசக்தியும். 366. பிராட்டி ராட்சசிகள் குற்றம் பெருமாளுக்கும், திருவடிக்கும், அறிவியாதவாறு போலே, தனக்குப் பிறர் செய்த குற்றங்களைப் பகவத் பாகவதர் விஷயங்களில் அறிவிக்கக் கடவன் அல்லன்.

முமுட்சுப்படி நூலிலும் இதனையே மேலும் உறுதிப்படுத்துகின்றார். 129. திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன் சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே. 135. இவள் சந்நிதியாலே காகம் தலைபெற்றது; இது இல்லாமையாலே ராவணன் முடிந்தான். எனவே பிராட்டியின் பெருமை என்றால், சீதாபிராட்டியின்பெருமை என்றே கொள்ளக் கிடக்கின்றது. இதனையே பிராட்டி வைபவம் என்பது வைணவ மரபு. வைபவம் என்றால் விசேடம் என்றும், அவதரித்துக் காட்டிய அதிசயங்கள் என்றும் கொள்ளலாம்.

'நாராயணன் விளையாட்டெல்லாம்' வடமொழியில் இராமாயணமாக அருளிய வான்மீகிமுனிவர், இராமனை நாராயணனாகவே பாடினார். சீதையை லட்சுமிதேவியாகவும் அதாவது திருமகளாகவும் பாடினார். இவ்விதமாக அடிமுதல், சீதை திருமணக்கூடத்தில் காலடி வைப்பது முதலே பாடுகிறார்!

நாம் இப்போது மிதிலாநகரில் இருக்கின்றோம். காவல் அமைந்த மிதிலை அது. அந்தக் கடிநகர்! ஆம், கொடி கட்டிப் பறக்கும் மிதிலாபுரிதான் இது! செழுமணிக் கொடிகள்!

ஞானவேந்தனான, ராஜரிஷியாம் ஜனக மகாராஜர் ஆளும் மிதிலையின் கொடிகளுக்கு

மல்லவா ஞானம் நிறைந்துள்ளது! யாரையோ கூவி, எதனையோ கூறித் தம் கைகளைக்காட்டி அழைக்கின்றனவே! என்ன ஆச்சரியம். ''கைகளை நீட்டி அழைப்பது போன்ற தம்மா!''. யாரை, எப்படி அழைக்கின்றன. இராமனாம் ஐயனை 'சீக்கிரம் வருக!' என்று 'ஒல்லைவா' என்று அழைப்பது போன்றதம்மா. ஏன் இப்படி இராமனை அழைக்கின்றன அந்தக் கொடிகள்!

மிதிலா புரியிலே தேர்தல் நடைபெற வில்லை! ஆனால் திருமணத் தேர்தல் நடைபெறுகிறதாம். இதுவரை எத்தனையோ வேட்பாளர்கள் வந்தனர்! ஆனால் இந்தக் கொடிகள் அவர்கள் எவரையும் சட்டை செய்யவில்லை! இராமனாம் வேட்பாளனைக் கண்டதே தாமதம்! அழைக்க ஆரம்பித்தனவாம்! காரணம்? குற்றமற்ற செந்தாமரை மலரினை விட்டு மையறு மலரின் நீங்கித் திருமகள் அல்லவா இங்கே அவதரித்துத் திருமணத்திற்கும் தயாராக இருக்கின்றாள்! செய்யவள் இருந்தாள் என்று! அவதரித்துள்ளவள் திருமகளாக இருப்பின் அவளை மணக்க வரும் இராமன், பரமபதநாதனான தாமரைக் கண்ணனாக அல்லவா இருக்கவேணும்! ஆம்! அவன் தாமரைக்கண்ணன்தான்! புண்டரீகாட்சனே! கமலச் செங்கண் ஐயனை அழைப்பது போன்றதம்மா! பொய்யில் புலவராம் திருவள்ளுவரும், தமது பொய்யாமொழியாம் திருக்குறளில் தாமரைக் கண்ணன் திருமால்தான் என்றும், அவன் எழுந்தருளும் இடம் உண்டு என்றும், அதுவே தாமரைக் கண்ணாம் உலகு என்னும் பரமபதம் என்றும் ஒப்புக் கொள்ளுகிறார்!

*தாம் வீழ்வார் மென்தோள்*
*துயிலின் இனிது கொல்!*
*தாமரைக் கண்ணான் உலகு!*

இப்படி அழைப்பதில் இந்த மிதிலைக்குத்தான் என்ன எக்களிப்பு! திருமகள் எங்கோயோ போய்ப் பிறந்துவிடாமல், என்னிடமல்லவா பிறந்தருளியுள்ளாள்! இது மிதிலாபுரியாம் யான் செய்த தவப்பயன் அல்லவா! ''யான் செய்தவத்தின் வந்து செய்யவள் இருந்தாள்!'' சாதாரண தவமா இது! செய்யவளான அவள் என்னிடம் பிறக்கும்படி மட்டுமல்ல! மேலும் திருமணமும் செய்து கொள்ளவும், அதுவும் திருமாலையே திருமணம் செய்து கொள்ளவும் அல்லவா, 'மா' தவம் செய்துள்ளேன்! யான் செய்மா தவத்தின் வந்து செய்யவள் இருந்தாள்! பூர்ண சந்திரோதயமாக மிளிரும் இப்பாடலை முழுவதுமாகக் காண்போம்!

''மையறு மலரின் நீங்கி,
யான் செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று
செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர்,
கமலச் செங்கண்
ஐயனை ஒல்லைவா என்(று)
அழைப்பது போன்ற தம்மா!

செந்தாமரை மலரினை விட்டுத் திருமகள் மிதிலையில் அவதரித்ததும், மிதிலையே களிப்பிலும் சீர்மையிலும் உச்சநிலை அடைந்து, அதுவே செந்தாமரையாகி விட்டதாம்! இவ்விதமாக, அகம் மலர்ந்து, முகம் மலர்ந்து வர வேற்ற மிதிலையிலே புகுந்தனர், விசுவாமித்திர முனிவரின் தலைமையில் பெரிய பெருமாளும் இளையபெருமாளும்! செந்தாமரைக்குத் தோற்றதா சீதையின் அழகு! காமனின் கற்பனைக்கும் அடங்குவதா அது!

*ஆதரித்(து) அமுதிற் கோல்தோய்த்(து)*
*அவயவம் அமைக்கும் தன்மை*
*யாதெனத் திகைக்கு மல்லால்,*
*மதனற்கும் எழுதவொண்ணாச்*
*சீதையைத் தருத லாலே,*
*திருமகள் இருந்த செய்ய*
*போதெனப் பொலிந்து தோன்றும்*
*பொன்மதில் மிதிலை புக்கார்*

சீதாபிராட்டிதான் திருமகளாம் பெரிய பிராட்டி என்று வெளிப்படுத்துகிறார் கம்ப நாட்டாழ்வார். இதனையே தொடர்ந்தும் விளக்குகிறார் கவிச்சக்கரவர்த்தி! சீதைக்கும் ஒரு குறை உண்டு. ஆம், அவளுக்கு இடை (மருங்கு) இல்லை. ''மருங்கிலா நங்கைக்கும்''. இராமனுக்கும் ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது. அவனுக்கு வசை (கெட்ட பெயர்) கிடையாதாம்! ''வசையில் ஐயற்கும்''. இவர்கள் இருவருக்கும் இடையில் இதுவரை இருந்த பிரிவு, போன இடம் தெரியாமல் ஓடி விட்டது. மிதிலா புரியின் ராஜவீதியிலே, வெற்றி நடைபோட்டுக் கொண்டிருந்த இராமனும்; மேலே பலகணி வழியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சீதையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பார்த்துக் கொண்டது மட்டுமல்ல, ஒருவரை ஒருவர் நன்றாக அடையாளமும் கண்டு கொண்டார்கள்! திருப்பாற்கடலிலே ''திருவனந்தாழ் வான்மீது குலாவிக் கொண்டிருந்தவர்களல்லவா நாம்'' என்று.

*கருங்கடல் பள்ளியில்*
*கலவி நீங்கிப் போய்*

இப்படி அடையாளம் கண்டு கொண்டதால் என்ன ஆயிற்று. இராமன் உடல் (ஒருங்குறும்) தனியாகத் தவித்தபடி வீதியில் இருந்தது! சீதையின் உடல் தனியாகத் தவித்தபடி பலகணியில் இருந்தது. ஆனால் இவர்கள் இருவரின் உயிரோ ஒன்றை ஒன்று ஒட்டிக்கொண்டன. ''ஒருங்குறும் இரண்டு உடல் உயிர் ஒன்று ஆயதே!''

இவ்விதமாகப் பிரிவு நீங்கி ஒருவரை ஒருவர் கண்டு கொண்ட பிறகு உடனே அருகில் போய்ப் பேசுவதும் அவசியம் தானா? ''பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?''. வாசுகிக்கு வாழ்வளித்த-வாசுகியால் வாழ்வுபெற்ற-வள்ளுவரும் பேசுகிறார்! ''கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல''. சீதாபிராட்டியே பெரியபிராட்டியார் என்பதைக் காணலாம் இப்பாட்டிலும்!

மருங்கிலா நங்கைக்கும்
வசையில் ஐயற்கும்

ஒருங்குறும் இரண்(டு) உடல்
உயிர்ஒன்(று) ஆயதே!

கருங்கடல் பள்ளியில்
கலவி நீங்கிப்போய்

பிரிந்தவர் கூடினால்
பேசல் வேண்டுமோ!

காதல் என்னும் தெய்விக உணர்வு, பிறவி தொறும் தொடரும் என்பது நம்பிக்கை. இராமாயண காலத்தில் எழுந்தருளியிருந்த முனிசிரேட்டர்களான இருவர் இதற்குச் சான்று பகர்கின்றனர்.

ஜனக மகாராஜரின் சபையிலே குலகுருவாக விளங்கிய கௌதம ரிஷியின் புதல்வரான சதானந்தர் பேசுகிறார். பெண் வீட்டுக்காரர் அல்லவா? அளக்கின்றார்! சீதை பெரிய பிராட்டியாரின் அம்சம் மட்டுமல்ல! பூமிப் பிராட்டியின் அம்சமும்கூடத்தான்! பூமிதேவியின் மடியிலே ஏர்க்கலப்பையால் கீற வேண்டியதுதான்! தன் அருளைக் கொட்ட ஆரம்பித்து விடுகிறாள்! அவள் மேனியிலிருந்து நெற்கதிர்களாகிய பச்சைப் பசுங்கிரணங்கள் வெளிவந்து பிரகாசிக்கும்! ஆனால் இவைமட்டிலும் அல்ல அவள் செல்வம். அவள் வயிற்றிலே பொன் முதலான எவ்வளவோ மூலப்பொருள்கள், கனிப்பொருள்கள், சுனைகள், திரவ ஊற்றுக்கள் பொதிந்துள்ளன! அந்த பல வகைப்பட்ட மூலப் பொருள்களான செல்வங்கள் எல்லாம், ஒரே உருக்கொண்டு ஒரே சமயத்தில் வெளிப்பட்டால், பார்க்க வேண்டுமே கண்கொண்டு! அந்தப் பேரழகே எங்கள் சீதை!

உழுகின்ற கொழுமுகத்தின்
உதிக்கின்ற கதிரின் ஒளி

பொழிகின்ற புவி மடந்தை
உரு(வு) வெளிப்பட்டென

இப்படியான பேரழகுடன் அவதரித்த சீதா பிராட்டியைக் கண்டாள், பாற்கடலைக் கடைந்தபோது அமுதத்துடன் எழுந்த பெரிய பிராட்டியான திருமகள்! ''புணரி எழுகின்ற தெள்ளமுதோடு எழுந்தவளும்'' பளிச்சென்று அவள் மனச்சாட்சி சொன்னது: 'இனி நீ கொலுவீற்றிருக்கும் இடத்திலே, சீதைதான் எழுந்தருளியிருக்க வேண்டும்! நீ கீழே இறங்கி ஒரு பக்கமாக நின்று அவளைத் தொழுது கொண்டிருப்பாயாக! பூதேவியின் வளத்தையும், சீதேவியின் வளத்தையும் திரட்டிக் கொண்டு உருவெடுத்த சீதா பிராட்டிக்குத் திருமகள் தன் இருக்கையைக் காலிசெய்து கைகட்டிக் கப்பம் செலுத்த வேண்டியது தானே! ''இழிந்து ஒதுங்கித் தொழுகின்றாள்''. இவ்விதமான நல்ல நலன்களை உடைய பெண் குலத்திற்கே அரசியாக எங்கள் சீதை அவதரித்துள்ளாள்! நல்நலத்துப்பெண்ணரசி தோன்றினாள்! சதானந்தர் பெண் வீட்டார் சார்பிலே அடித்துக் கொள்ளும் பெருமை இது.

உழுகின்ற கொழு முகத்தின்
உதிக்கின்ற கதிரின் ஒளி
பொழிகின்ற புவி மடந்தை,
உருவெளிப்பட் டெனப், புணரி
எழுகின்ற தெள்ளமுதோடு
எழுந்தவளும், இழிந்(து) ஒதுங்கித்
தொழுகின்ற-நன்னலத்துப்
பெண்ணரசி தோன்றினாள்!

அடுத்தபடி வசிட்டர் வாக்கு! இவர் பிள்ளை வீட்டார். ஆகையினாலே மாப்பிள்ளையை வைத்து மணமகளை அறிகிறார்! மிதிலா நகரம் செய்த தவத்தினால் சீதை அவதரித்தாளா? தசரதச் சக்ரவர்த்தியின் சாம்ராச்சியத்தில் உள்ள நாங்கள் அனைவரும் செய்த தவத்தினால் அல்லவா இராமன் அவதரித்தான்.

எங்கள் செய் தவத்தினில்
இராமன் என வந்தோன்

இந்த 'எங்கள் இராமன்' என்ன சாமானியனா?

வடிவார் சோதி வலத்துறையும்
சுடராழியும்
படையோர் புக்கு முழங்கும்
அப் பாஞ்ச சன்னியமும்

ஏந்திய ஆதிமூல புருஷன்தான்! உலகை எல்லாம் தன் திருவடியால் அளந்து, ஆட்படுத்தி, ஆளும் நெடுமாலே!

சங்கினொடு சக்கரம்
உடைத் தனிமுதல் பேர்
அங்கண் அரசு!

இவ்விதமாக மணமகன் திருமால் ஆகையினாலே, மணமகள் திருமகளாகத்தானே இருத்தல் வேண்டும்! அவன் சங்கு சக்கரத்தை விட்டு இங்கு அவதரித்தான். இவள் தாமரை மலரினை விட்டு அவதரித்துள்ளாள்! அவ்வளவுதான். ஆதலின் அவ்அல்லி மலர் புல்லும் மங்கை இவளாம்என வசிட்டன் மகிழ்வுற்றான். சதானந்த முனிவரின் திருவுள்ளத்தை அப்படியே ஆதரித்த வசிட்ட முனிவரின் தீர்ப்பு!

எங்கள் செய் தவத்தினில்
இராமன் என வந்தோன்,
சங்கினொடு சக்கரம்,
உடைத்த தனி முதல்பேர்
அங்கணரசு! ஆதலின்அவ்
அல்லி மலர் புல்லும்
மங்கை இவளாம் என
வசிட்டன் மகிழ்வுற்றான்!

(தொடரும்)

# காசுமீர சைவம்

*''மும்மொழிக் கொண்டல்''*

பேராசிரியர் திரு பெ. திருஞானசம்பந்தன், M.A., L.T., சென்னை.

சைவம் மிகத் தொன்மையான ஒரு சமயம். ஆரியர் வருகைக்கு முன்பே இது இந்நாட்டில் நிலவி வந்ததற்குச் சான்றாக மொகஞ்சதரோ நாகரிக காலத்தில் கிடைக்கப்பெற்ற பொருள்களுள், யோக வடிவைத் தாங்கியதாயும், திரிசூலம்போன்ற ஒன்றைக் கொண்டுள்ளதுமான ஓருருவத்தை எடுத்துக்காட்டுவோர் உண்டு. வேதகாலத்திய உருத்திரக் கடவுளின் சில இயல்புகள் புராண காலத்திய சிவனுடைய இயல்புகளோடு ஒன்றிவிட்டன என்று கூறுவர் பண்டார்க்கர் முதலிய அறிஞர்கள். இருக்குவேத காலத்திய முனிவர்கள் உருத்திரனை 'பிஷக்தமன்' (வைத்தியநாதன்) என்று போற்றினர். யசுர் வேதத்தின் நடுப் பகுதியில் சதருத்ரீயத்தில் 'பசூனாம்பதி:', உயிர்களுக்கெல்லாம் தலைவன் என்று போற்றப் படுகின்ற சிவனாகக் காண்கிறோம். பவன், சர்வன், ஈசானன் என்றெல்லாம் அவன் போற்றப்படுகின்றான். சுவேதாசுவதர உபநிடதம் பதி, பசு, பாசம் பற்றிப் பகர்கின்றது. மகாபாரதத்தில் உபமன்ய முனிவரால் கிருஷ்ணன் சிவயோகம் பற்றி உபதேசிக்கப்படுகிறான். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பதஞ்சலிமுனிவர் தனது மகாபாஷ்யத்தில் சிவன், கந்தன், விசாகன் ஆகியோர் பூசிக்கப்பட்டதையும், சிவபாகவதர்கள் என்ற ஒரு வகையினர் இருந்தனர் என்பதையும் குறிப்பிடுகிறார்.

தமிழ்ச் சங்க இலக்கியத்தில் 'ஆலமர் செல்வன்', 'பிறவாயாக்கைப் பெரியோன்', 'நீலமணி மிடற்றோன்', 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்' என்ற பெயர்களில் சிவன் குறிக்கப்படுகின்றான். 'அட்டமூர்த்தி' காளிதாசனாலும், சீத்தலைச்சாத்தனாராலும் குறிக்கப்படுகின்றது. புராணங்கள் சிவன் பெருமையை விரித்துரைக்கின்றன.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தர் அப்பர் ஆகியோரின் காலம் தொடங்கி, சைவம் தென்னாட்டில் புத்துயிர் பெற்று வளரத் தொடங்கியது எனினும், அவர்கள் காலத்திற்கு முன்பே காரைக்காலம்மையார், திருமூலர் ஆகியோர் நூல்களிலேயே, சைவசமயக் கோட்பாடுகளை நாம் தெளிவாக உணர்கிறோம்.

இந்திய நாட்டில் சைவத்தின் மூன்று குறிப்பிடத்தக்க பிரிவுகளாகக் கொள்ளத்தக்கவை, ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தென்னாட்டில் நிலவி வந்த சைவசித்தாந்தம், ஒன்பதாம் நூற்றாண்டு தொடங்கி நிலவுகின்ற காசுமீர சைவம், பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடங்கி நிலவிவரும் வீரசைவம் ஆகியவை.

பொதுவாக, சைவம் வேதங்களையும் ஆகமங்களையும் பிரமாண நூல்களாகக் கொண்டுள்ளது. சித்தாந்த சைவர்கள் வேதத்தைப் பொதுநூல் எனவும் ,ஆகமத்தைச் சிறப்புநூல் எனவும் கொண்டுள்ளனர். சிவாத்துவைதத்தைப் பரப்பிய சீகண்டரும், திருமூலரும் வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் வேறுபாட்டைக் கண்டிலர். சிவாகமங்களை வேதமாகிற பசுவின் பாலாகக் கண்டனர். 'ஒரும் வேதாந்தம் என்றுச்சியில் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்து சாரங் கொண்ட சைவ சித்தாந்தம்' என்றார் குமரகுருபரர். இச் சிவாகமங்கள் இருபத்தெட்டு என்பர். அவையாவன காமிகம், யோகஜம், சிந்த்யம், கரணம், அஜிதம், தீப்தம், சூட்சுமம், சகஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோக்தம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் ஆகியன. இவற்றுள் பத்தை வித்யேசுவரர்களுக்கும், பதினெட்டை உருத்திரர்களுக்கும், சதாசிவர் உபதேசித்தார் என்பது ஒரு மரபு. இப்பெயர்ப் பட்டியலில் மாறுபாடு இருத்தல் கூடும்.

இவற்றுள் கூறப்பெறாது திருமூலரால் கூறப்படுபவை தேவியாமளமும் காலோத்தரமும்; உமாபதி சிவம் சதரத்ன சங்கிரகத்தில் மேற்கோளாக எடுத்தாண்ட பதினோரு ஆகமங்களில், மேலே குறிப்பிடப்பெற்றவற்றுள் இடம்பெறாத பராக்யம், விசுவசாரோத்தரம், சர்வஞானோத்தரம், காலோத்தரம், தேவீகாலோத்தரம் ஆகியவை உள்ளன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இருபத்தெட்டு சிவாகமங்களுள், முதற் பத்து (சுப்ரபேதத்திற்குப் பதில் மகுடாகமத்தைக் கொண்டு) துவைத தந்திரங்கள் (ஆகமங்கள்) என்றும், அடுத்த பதினெட்டு (சில பெயர் வேறுபாடுகளுடன்) துவைதாத்வைத தந்திரங்கள் என்றும், காசுமீர சைவத்தில் ப்ரத்யபிஜ்ஞா தத்துவத்தை விளக்கும் தந்த்ராலோகத்தின்

உரையாசிரியராகிய ஜயரதர் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் காமிகம், மகுடம் போன்ற ஒருசில ஆகமங்கள் அத்வைத சைவவாதிகளான காசுமீர சைவர்களால் மேற்கோள்களாக ஆளப்பட்டுள்ளபோதிலும், 'அத்வைத தந்திரங்கள்' என்று அவர்களால் போற்றப்படுபவை அறுபத்துநான்கு. அவை, ஒவ்வொரு பிரிவிலும் எட்டு தந்திரங்களைக் கொண்டவையாக, எட்டு பிரிவுகளில் அடக்கப்பட்டுள்ளன. அப்பிரிவுகளாவன - பைரவம், யாமளம், மதம், மங்கலம், சக்ராஷ்டகம், பகுரூபம், வாகீசம், சிகாஷ்டகம் என்பவை. இவற்றின் விரிவை டாக்டர் காந்திசந்திர பாண்டேயின் அபிநவ குப்தர் பற்றிய ஆங்கில நூலில் *(பக்.78-80)* காண்க.

மேலே கூறப்பட்ட துவைத, துவைதாத்வைத, அத்வைத தந்திரங்களோடு நான்காவதாக 'குலதந்திரம்' என்ற பிரிவு அபிநவ குப்தரால் சுட்டப்பெறுகிறது. இது அஸ்ஸாம் பகுதியில் தோன்றியதாகவும், இதைத் தோற்றுவித்தவர் மீனசித்தர் எனப்படும் மச்சந்தர் எனவும், அவருக்குப் பின்னர் வந்தவர்கள் சுமதிநாதர், சோமதேவர், சம்புநாதர், அபிநவகுப்தர் எனப்படுவர் எனவும் அறிகிறோம்.

எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பு காசுமீரத்தில் சைவமும் பௌத்தமும் பின்பற்றப்பட்டு வந்தன. பௌத்த விகாரங்களைக் கட்டுவித்த மக்களும் மன்னர்களும் சிவன் கோவில்களையும் விஷ்ணு கோயில்களையும் கட்டுவித்தனர் என்று கல்ஹணரின் ராஜதரங்கிணியைப் பதிப்பித்த டாக்டர் ஸ்டீன் கூறுகிறார். எட்டாம் நூற்றாண்டில், லலிதாதித்ய மன்னரால் அபிநவகுப்தரின் மூதாதையரான அத்ரிகுப்தர் கன்னோஜ் நகரத்தினின்றும் அழைத்து வரப்பட்டார் என்றும், அதன் பிறகே சிவாகமங்கள் காசுமீரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன என்றும் கூறப்படுகிறது. அசோகரால் பௌத்தம் காசுமீரத்தில் பரப்பப்படுவதற்கு முன்னரே, அப்பகுதியில் பல தெய்வ வழிபாடு இருந்ததெனவும், அர்த்தநாரியான சிவனே அத்தெய்வங்களுள் முதன்மையாக வழிபடப்பட்டவர் எனவும், கல்ஹணரின் நூலிலிருந்து ஊகிக்கப்படுகிறது. சைவமும் பௌத்தமும் ஒருங்கிணைந்து வாழ்ந்த காரணத்தால், ஒன்று மற்றொன்றின் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருந்தன. குமாரிலபட்டர் போன்றோரின் செயலால் எட்டாம் நூற்றாண்டு தொடங்கி, பௌத்தம் நிலை குலையத் தொடங்கியது. ஆதிசங்கரரும் ஒன்பதாம் நூற்றாண்டில் காசுமீரப் பகுதியில் விஜயம் செய்து துவைதபரமாக வழங்கிவந்த சைவத்திற்கு ஒரு புதுத் திருப்பத்தைத் தந்தார்.

காசுமீர தேசத்தில் வாழ்ந்த அறிஞர் பெருமக்களால் தங்கள் நூல்களின் வாயிலாகப் பரப்பப்பட்ட காரணத்தால் இது, காசுமீர சைவம் என்று வழங்கப்படுகிறது. 'த்ரிக சாஸ்திரம்' என்பதே இத் தத்துவ நெறிக்கு உரித்தான பெயர். 'த்ரிகம்' என்பது 'சிவன், சக்தி, அணு (உயிர்); அல்லது பதி, பாசம், பசு' என்ற முப்பொருள். அல்லது 'பரை, அபரை, பராபரை' என்ற சக்திகள். அல்லது அபேதம், பேதாபேதம், பேதம், என்ற நிலைகள் ஆகியவை பற்றிக் கூறுவதால் அப்பெயர் பெற்றதெனப் பலவாறு கொள்ளப்படுவதுண்டு.

கயிலாசத்தில் வீற்றிருந்தருளும் சிவன், ஒருகால் துர்வாசமுனிவரை விளித்துச் சைவ சாத்திரங்களைப் பரப்புமாறு பணித்தார் எனவும், துர்வாசர் மானசிகமாக மூன்று புத்திரர்களைத் தோற்றுவித்து முதற்புத்திரரான திரியம்பகரிடம் அபேத சைவ சாத்திரத்தையும், இரண்டாமவரான ஆமர்த்தகரிடம் பேத சைவ சாத்திரத்தையும், மூன்றாமவரான சீநாதரிடம் பேதாபேத சைவ சாத்திரத்தையும் ஒப்படைத்துப் பரப்புமாறு கூறினார் என்றும் ஒரு வரலாறு உண்டு. திரியம்பகர் பரப்பிய அபேத சைவமே 'த்ரியகம்' எனப்படும் அத்வைத சைவம் என்று கூறப்படுகிறது.

இந்த த்ரிக தரிசனத்தை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிப்பதுண்டு. அவை *(1)* ஆகம சாத்திரம், *(2)* ஸ்பந்த சாத்திரம், *(3)* பிரத்யபிஜ்ஞா சாத்திரம் என்பன. இம்மூவகை சாத்திரங்களும் (நூல்கள்) த்ரிக தத்துவத்தை விளக்குவனவே யன்றி அதன் முப்பிரிவுகள் என்று கொள்ளுதல் கூடாது.

*(1)* ஆகம சாத்திரம்: 'ஆகமம்' என்ற சொல் வழிவழியாக மரபுபற்றி வந்தவற்றைக் குறிக்கும். இதில் ஞானம், கிரியை இரண்டுமே பேசப்படுபவை. இச் சாத்திரங்களுள் குறிப்பிடத்தக்கவை- மாலினீ விஜயம், ஸ்வச்சந்தம், விஞ்ஞான பைரவம், உச்சஷ் பைரவம், ஆனந்த பைரவம், மிருகேந்திரம், மதங்கம், நேத்ரம், நைசுவாசம், சுவாயம்புவம், ருத்ரயாமளம் ஆகியவை. இவற்றுள் பெரும்பாலானவை த்ரிக தரிசனம் தோன்றுவதற்கு முன்பே இருந்தன. அவை த்வைதக் கொள்கைக்கேற்பப் பெரும்பாலான மக்களால் அறியப்பட்டு வந்தன. இப்போக்கை மாற்ற எழுந்தது 'சிவசூத்திரங்கள்' என்ற முதல் நூல். இக்கருத்து சிவசூத்ர விமர்சனியில் கூறப்பட்டுள்ளது.

சிவபெருமானால் இயற்றப்பட்டமையால் இவை 'சிவசூத்திரங்கள்' எனப் பெயர் பெற்றனவென்றும், இவை ஒரு மலைப் பாறையில் வடிக்கப்பெற்றிருந்ததாகவும், வசுகுப்தரின் *(9* ஆம் நூ.) கனவில் சிவபெருமான் தோன்றி அத்வைத பரமாக 'சிவரகஸ்யாகம சாத்கிர சங்கிரகம்' என்றும் பின்னர் அழைக்கப்பட்ட இந்நூலை மக்களிடம் பரப்புமாறு பணித்தார் என்றும், ஒரு செய்தி கூறப்படுகிறது. இச்சூத்திரங்களுக்கு 'விருத்தி' (ஆசிரியர் அறியப்படவில்லை) ஒன்றும், பாஸ்கரரால் எழுதப்பட்ட விமர்சினியும் உள்ளன.

ஸ்வச்சந்தம், நேத்ரம், விஞ்ஞானபைரவம் மதங்கம் ஆகிய தந்திரங்களுக்கு அத்வைத பாமான உரைகள் எழுதப்பட்டுள்ளன என்றும், உண்மையிலேயே அவை துவைத பரமான சைவ நூல்களாகவே அதுவரை வழங்கிவந்தன என்றும் ஜகதீச சந்திர சட்டர்ஜி ''காசுமீர சைவம்'' பற்றிய தனது ஆங்கில நூலில் *(1914)*

குறிப்பிட்டுள்ளார். க்ஷேமராசர் இதைத் தமது உரைநூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். 'ஸ்வச்சந்த தந்திரத்திற்கு வழிவழியாகப் பேத வியாக்கியானம் தரப்பட்டு வந்துள்ளது. அதனால் விளைந்த அறியாமையைப் போக்க எழுந்தது, அத்வைதாமிருதத்தைப் பெருக்கும் எனது உத்யோகம் என்ற உரை' என்கிறார். மாலினிவிஜயதந்திரம் என்ற நூலும் இவ்வாறே அத்வைதக் கொள்கைக்கேற்ப ஆளப்பட்டது.

*(2)* ஸ்பந்த சாஸ்திரம்: ஆகம சாஸ்திரத்தை விளக்க எழுந்ததே இது. இதில் முதன்மையான நூல் 'ஸ்பந்த சூத்திரங்கள்'. இவை வசுகுப்தராலேயே எழுதப்பட்டன என்று க்ஷேமராசர் கூறியபோதிலும் கல்லடரே இதன் ஆசிரியர் என்று கருதப்படுகிறது. கல்லடரால் எழுதப்பட்ட விருத்தியுடன் கூடிய இந்நூலுக்கு 'ஸ்பந்த ஸர்வஸ்வம்' என்று பெயர். ஸ்பந்த சூத்திரங்களுக்கு எழுதப்பட்ட உரைகளாவன ராமகண்டரின் விவிருதி, உத்பலரின்(வைஷ்ணவரின்) பிரதீபிகை, க்ஷேம ராஜரின் ஸ்பந்த சந்தோஹம், ஸ்பந்தநிர்ணயம் ஆகியவை.

*(3)* பிரத்யபிஜ்ஞா சாஸ்திரம்: இச்சாஸ்திரமே தத்துவ விளக்கமாக அமைந்த விசார சாஸ்திரமாகும். இத்துறையில் தருக்க ரீதியான தத்துவ விளக்கம் தரப்படுகின்றது. வசுகுப்தரின் மாணவரான சித்தர் சோமானந்தரே இதற்கு வழிகாட்டி. சுவபட்சம், பரபட்சம் இரண்டையும் எடுத்துக்கூறும் முறை இவருடையது. இத்துறையில் அமைந்தது இவரது 'சிவதிருஷ்டி' யாகும். 'திருஷ்டி' என்பதும் தரிசனம் என்பதும் ஒன்றே. அவரே இதற்கு விருத்தியும் எழுதியிருக்கின்றார். அடுத்த நூல் அவருடைய மாணவரான உத்பலரின் 'ஈசுவர பிரத்யபிஜ்ஞா' என்பதாகும். இந்நூல் காசுமீரத்திற்கப்பாலும் புகழோங்கியிருந்ததால் மாதவாசாரியர் தனது 'சர்வதர்சன சங்கிரகம்' என்ற நூலில் ,த்ரிக சாஸ்திரத்தை, பிரத்யபிஜ்ஞா தர்சனம் என்றே வழங்குகிறார். இதற்கு உரை நூல்களாக அமைந்தவை, உத்பலரின் விருத்தி அபிநவகுப்தரின் பிரத்யபிஜ்ஞா விமர்சினீ அல்லது லகுவிருத்தி, பிரத்யபிஜ்ஞா விவிருதி விமர்சினீ ஆகியவை.

இவையன்றி இத் தத்துவங்களை விளக்கும் தோத்திர நூல்களும் உள்ளன. உத்பலரின் சிவஸ்தோத்ராவளீ பிரசித்திமானது. சைவர்கள் அனுட்டிக்க வேண்டிய நெறிமுறைகளும் சிலநூல்களில் விளக்கப்பட்டுள்ளன.

இவற்றினின்றும் வேறுபட்ட முறையில் சைவத்தின் எல்லா அம்சங்களையும் விளக்கும் முறையில் எழுதப்பட்டது, அபிநவகுப்தரின் 'தந்த்ராலோகம்'. எளிய முறையில் எழுதப்பெற்ற நூல்களுள் அபிநவகுப்தரின் பரமார்த்த சாரமும், க்ஷேமராஜரின் பிரத்யபிஜ்ஞா இருதயமும் குறிப்பிடத்தக்கவை. அத்வைத வேதாந்தத்தில் சதானந்தரின் வேதாந்தசாரம் எப்படி எளிய அறிமுக நூலாகக் கொள்ளத்தக்கதோ, அப்படியே பிரத்யபிஜ்ஞா இருதயமும்.

பின்னே வந்தவர்களுள் பரமார்த்தசார சங்கிரகத்திற்கு உரை எழுதிய யோகராஜரும் (12-நூ), தந்தராலோகத்திற்கு உரை எழுதிய ஜயரதரும், விஞ்ஞான பைரவத்திற்கு உரை எழுதிய சிவோபாத்யாயரும் (18-ஆம் நூ.) குறிப்பிடத்தக்கவர்கள். **

---

## அரையரும், எம்பாரும்

திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களை இசையுடன் பாடி, அதன் பொருளை அபிநயத்துடன் ஆடிக் காட்டி விளக்க வல்ல பெரியோர்களுக்கு, அரையர்கள் என்பது பெயர். திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின் பொருள் விளங்கும்படி, அரையர்கள் அபிநயம் பிடித்து ஆடிக் காட்டியருளிய திறம் பற்றிய குறிப்புக்கள் பல, வியாக்கியானங்களிலே காணப்படுகின்றன.

''மெச்சூது சங்கம் இடத்தான் நல் வேய்ஊதிப்
பொய்ச் சூதில் தோற்ற பொறையுடை மன்னர்க்காய்ப்
பத்தூர் பெறாது அன்று பாரதம் கைசெய்த
அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்
அம்மனே அப்பூச்சி காட்டுகின்றான்''

என்னும் பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்திற்கு, கண்ணை இறுத்துவது, முகத்தைத் தலைமயிரால் மறைப்பது முதலிய இளஞ்சிறு குறும்புகளைக் கண்ணபிரான் செய்வதாக, திருவரங்கம் நம்பெருமாள் சந்நிதியில் 'உய்ந்த பிள்ளை' என்னும் அரையர் அபிநயித்தார்.

இராமாநுசரின் பின்புறம் எழுந்தருளியிருந்த எம்பார் என்னும் வைணவப் பெருஞ் சான்றோர், அந்த அபிநய முறையைக் கண்டு, தமது திருவுள்ளத்திற் குறையுற்று, அதனைத் திருத்தும் நோக்கத்துடன், தம் திருக்கைகளைத் திருத்தோள்களோடு சேர்த்துக் காட்டி, பாடலின் பொருள் நுட்பத்தைக் குறிப்பினால் உணர்த்தினார். அக்குறிப்பின் நுட்பம் உணர்ந்த அரையரும், உடனே முன்னே தாம் அபிநயித்த முறையைவிட்டு, பெருமாள் தம் திருத்தோள்களில் சங்கு சக்கரங்கள் தரித்துக் கொண்டிருப்பதை அபிநயித்தார்.

பாண்டவ தூதனாகத் தன் சௌலப்பியத்தை வெளியிட்டு 'நம்மிலே ஒருவன்' என்று இவ்வுலகத்தவர் கொள்ளும்படி இருப்பவனாகிய கண்ணபிரான், சில சமயங்களில் அவர்கள் அஞ்சும்படி தனது இறைமைத் தன்மைக்கு அடையாளங்களான சங்கு சக்கரம் முதலியவற்றையும் காட்டுகின்றான் என்னும் பொருள் நுட்பம், எம்பார் திருத்திக் காட்டிய அபிநயத்தாற் புலப்படுத்தப் பெற்றது. அரையர் முதலிற் பொதுவாகவும், பின்னர்ச் சிறப்பாகவும் அபிநயித்துக் காட்டிய நுட்பம் கண்டு மகிழ்ந்த இராமாநுசர், இது எம்பாருடைய திருத்தமாகவே இருத்தல் வேண்டும் என்று கருதி, உடனே திரும்பிப் பார்த்து, ''எம்பாரே! நீர் இருந்தீரோ?'' என்று திருவாய் மலர்ந்தருளினாராம்.

—ஆசிரியர்.

# "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"

''மருத்துவப் பேரறிஞர்''
டாக்டர் திரு இரத்தினவேல் சுப்பிரமணியம், அவர்கள்
B.Sc., M.D., F.R.C.P.(London), F.C.C.P. (U.S.A.), F.A.M.S.

மனித வாழ்க்கையில் எல்லோருடைய விருப்பமும், இன்பமாக வாழவேண்டும் என்பது தான். மனிதன் மட்டுமல்ல, எல்லாவகையான உயிரினங்களும் இன்பமாக வாழவேண்டும் என்றுதான் முயற்சி எடுக்கின்றன. இதில் மனிதன் தன்பகுத்தறிவின் காரணமாகவும், சிந்தனைத் திறனின் காரணமாகவும், இன்ப மாக வாழ்வதன் பொருட்டுப் பலவழிகளைக் கையாள்கின்றான். மழையில் நனையாமலும், வெயிலில் காயாமலும் இருப்பதற்குக் குடை பிடித்துக் கொள்ளுகின்றான்; குளிரைத் தாங் கிக்கொள்ளக் கம்பளி முதலிய போர்வைகளைப் பயன்படுத்துகின்றான்; கல்லும் முள்ளும் குத் தாமல் இருக்கக் காலில் மிதியடிகள் அணிகின் றான்.

இங்ஙனமெல்லாம் பலவகைகளில் தன் னைக் காத்துக்கொண்டு, வாழ்க்கையை இன்ப கரமானதாக ஆக்கிக்கொண்டு, மனிதன் சுக போகங்களை அனுபவிக்கின்றான். அதே சம யம் பலதுன்பங்களையும், தனக்குத்தானே தேடிக் கொள்ளுகின்றான். உதாரணமாக, லாகிரிப் பொருள்களால், அதாவது சாராயம் பீடி சிகரெட் முதலியவற்றினால், மக்கள் தம்மைத் தாமே அவற்றிற்கு அடிமையாக்கிக் கொண்டு, காசு செலவழித்துப் பலவகை நோய் களை வரவழைத்துக் கொள்கின்றனர். ஆனால் நிமோனியா, மலேரியா முதலிய நோய்கள், நாம் தேடாமலே நம்மை வந்து அடைகின் றன. இப்படி வாழ்க்கையில் நாம் தேடாமல், தாமே வருகின்ற துன்பங்களை, ஒருவகையில் இன்பமே என்று எண்ணுகின்ற மனப்பக்கு வத்தை, நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் எந்நாளும் இன்பம் அமைவது அரிது, அரிது! ஆனால் அப்பர் சுவாமிகள், ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்று சொல்லுகின்றார். அது முடியுமா? சாத்திய மாகுமா? அப்பர் பெருமான் பொய்யா சொல் லுவார்?

நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலைஇல்லோம்
ஏமாப்போம்; பிணிஅறியோம்; பணிவோம்
அல்லோம்;
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை ;
தாம்ஆர்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன், நற் சங்கவெண் குழைஓர் காதிற்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடி இணையே
குறுகினோமே!

என்று அப்பர்பெருமான் பாடியுள்ள திருத் தாண்டகம், அனைவரும் அறிந்தது. இதில் அவர் ''இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'' என்று பாடுவது உண்மைதான். இதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. ஆனால், அவர் பாடுவது போல், முழுக்க முழுக்க நாம் கடவுளிடத்தில் நம்பிக்கைவைத்து, கடவுள்தான் நமக்குக் கதி, கடவுள்தான் துணை என்று, திட்டவட்டமாக நம்பிக்கை கொள்ளவேண்டும். கடவுள் இருக் கின்றார், அவர் நமக்குத் துணைபுரிவார், நம் மைக் காப்பாற்றுவார் என்று, நமக்குக் கடவு ளிடத்தில் உண்மையான, உறைப்பான பக்தி இருக்கவேண்டும். கடவுள் இருக்கிறாரோ இல் லையோ, அவர் நம்மைக் காப்பாற்றுவாரோ கைவிட்டு விடுவாரோ ,நாம் வேண்டுவதைக் கடவுள் தருவாரோ தரமாட்டாரோ, நம் பிரார்த்தனையைக் கடவுள் நிறைவேற்று வாரோ நிறைவேற்றமாட்டாரோ, என்றெல் லாம் ஒருசிறிதும் ஐயப்பாடோ, அவநம்பிக் கையோ நமக்கு இருத்தல் கூடாது.

அவநம்பிக்கையுடனும், ஐயப்பாட்டுட னும் கடவுளை வழிபட்டால், நாம் வேண்டு வது பலிக்கவும் செய்யலாம், பலிக்காமலும் போய்விடலாம். நாம் ஒரு பொருளின்மேல் ஆசைவைத்து, அந்தப்பொருள் நமக்குக் கிடைக்கவேண்டுமென்று ஆவலோடு இருக்கும் பொழுது, அந்தப்பொருள் துரதிருஷ்டவசமாக நமக்குக் கிடைக்காமலும் போகலாம். அப் பொழுது கடவுளின் திருவுள்ளம் அப்படி இருக் கிறது என்று, நாம் மனத்தைத் தேற்றிக் கொண்டு அமைதியாக இருந்து விடுவோமே யானால், அப்பொழுது நமக்கு ஆசை அறு படுகிறது. பிறகு நமக்கு யாதொரு வருத்தமும் உண்டாவதில்லை. இதுபற்றித்தான் திருமூல ரும்,

''ஆசை அறுமின்கள்; ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்;
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பம்;
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே''

என்று அருளிச் செய்தார். இங்ஙனம் கடவுள் மீது நம்பிக்கைவைத்து வாழும்போது; கடவு ளின் திருவுள்ளம் எப்படியோ அப்படியே நடக் கட்டும் என்று, மனஅமைதியுடன் இருந்துவர முற்படும்பொழுது; ஒருவனுக்கு உலகஆசைகள் படிப்படியே சிறிதுசிறிதாகக் குறையத் தொடங்குகின்றன.

கிருஷ்ணபகவான், தாம் அருளிச்செய்த பகவத்கீதையில் நரகத்தின் வாசல்கள் மூன்று என்கின்றார். அவையாவன:

காமம்
கோபம்
உலோபம்

என்பனவாகும். இவைகள் நரகத்தின்வாசல்கள் ஆதலின், இவைகள் மூன்றையும் நாம் விட்டு விடவேண்டும் என்று, அவர் உபதேசிக்கின்றார்.

காமம் என்பது, ஒரு மனிதன் தன் மனைவியை விட்டுவிட்டு, பிறன்மனைவியின் மேல் ஆசை கொள்வது. தன் மனைவியின்மீது ஆசை கொள்வது காதல் அல்லது அன்பு. இந்த உலகமே அன்பினால் கட்டுப்பட்டது. அன்பினால் இயங்குகின்றது. அதனால் ஒருவன்தன் மனைவியின்மீது ஆசைகொள்வது குற்றமன்று, நற்றமேயாகும். ஆனால் காமம் அத்தகையது அல்ல. காமமானது நம்மைத் தீயவழிக்கே கொண்டு சென்று அழித்துவிடும்.

''காமமே கொலைகட் கெல்லாம்
காரணம்; கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாம்
காரணம்; கூற்றும் அஞ்சும்
காமமே கள்ளுண் டற்கும்
காரணம்; ஆத லாலே
காமமே நரக பூமி
காணியாக் கொடுப்ப தாகும்''

என்று பரஞ்சோதிமுனிவர், தாம் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் பாடியிருப்பதும் இங்குநாம் கருத்தில் இருத்துதற்கு உரியது.

காமத்தைப்போலவே கோபமும் கொடியது. கோபத்தினால் விளையும் தீங்குகளையெல்லாம், ''வெகுளாமை'' என்னும் அதிகாரத்தில், திருவள்ளுவர் தம் திருக்குறளில் விளக்கியுள்ளார்.

'தன்னைத்தான் காக்கில் சினம் காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்''

என்று திருவள்ளுவர் நம்மை எச்சரிக்கின்றார். கோபமானது, கோபங்கொள்ளும் மனிதனையே கொன்றுவிடும் என்று கூறியிருத்தல், மிகவும் அனுபவபூர்வமான ஓர் உண்மையாகும். இவ்வுண்மையை நாம் நம் வாழ்க்கையில் கண்கூடாக அனுபவத்திற் காணலாம். சர். ஜான் ஹண்டர் (John Hunter) என்னும் ஆங்கில மருத்துவர், ''என்உயிர், எனக்குக் கோபமூட்டும் முட்டாளின் கையில் உள்ளது'' என்று குறிப்பிடுகின்றார். ஏனெனில், அவருக்கு இருதயநோய் இருந்தது. இருதயநோய் உள்ளவர்களுக்கு, இருதயத்திற்கு இரத்தம்கொண்டு செல்லும் இரத்தக்குழாய் சிறுத்து இருக்கும். இந்நிலையில் கோபம் ஏற்பட்டாலோ, அல்லது அதிகப்படி வருத்தம் அல்லது பயம் ஏற்பட்டாலோ, இருதயத்துடிப்பு அதிகமாகிவிடும். அப்பொழுது போதுமான இரத்தம் இருதயத்திற்குள் பாயாமல், மார்பில் வலிஏற்பட்டு முடிவில் மரணம் ஏற்பட்டுவிடும்.

கோபத்தை அடக்கவேண்டுமாயின், மனிதனுக்குச் சத்தியப் பிதாவான கடவுளிடத்தில் திடமான நம்பிக்கை இருக்கவேண்டும். நம்மில் சிலர், பிறர்கூறும் இகழ்ச்சியையோ அல்லது புகழ்ச்சியையோ சமமாகக் கருதி, அவைகள் தம்மைச் சேர்ந்ததில்லை என்று பொறுமையாகவும், சாந்தமாகவும் இருந்துவிடுகிறார்கள். பெரியவர்கள், யாரேனும் தம்மைக்கொல்ல வந்தால்கூட, அதுவும் தெய்வத்தின் ஆணை என்று சும்மா இருந்து விடுகின்றார்கள்.

காந்திமகானைச் சுட்டபோதும்கூட, அவர் 'ராமா' என்று, இராம நாமத்தைச் செபித்துக் கொண்டே கீழே சாய்ந்துவிட்டார். தன்னைச் சுட்டவனைப் பார்த்துத் 'துரோகியே! என்னைச் சுட்டுவிட்டாயே' என்று சொல்லவில்லை. அதே போல், மெய்ப்பொருள் நாயனார் வரலாறும்கூட! சிவவேடத்தில் வந்து தன்னைக் கத்தியால் குத்திய கயவனைக் காவலர்கள் யாதொரு கெடுதலும் செய்யக்கூடாது என்று ஆணையிட்டு, அவனை எல்லைக்கப்பால் பத்திரமாகக் கொண்டுபோய் அனுப்பி வைத்த செய்தியைக் கேட்கும்வரையில் உயிர்தாங்கியிருந்து, அதன்பின்னரே உயிர் துறந்தார் மெய்ப்பொருள்நாயனார்!

கோபம் போல, உலோபம் என்பதும் கொடியது. உலோபமாவது, வேண்டிய செலவுகளைக் கூடச் செய்ய மனம் வராத கஞ்சத்தனம். என் அனுபவத்தில்கூட, நான் பார்த்திருக்கிறேன். ஒருசிலர், நிறையப்பணம் இருந்தால்கூட, தமக்கு வேண்டிய செலவுகளைக் கூடச் செய்யாமல், தம் அந்தஸ்தையும் பதவியையும் பயன்படுத்திக் கொள்கின்றனர். தமக்கு வைத்தியம் பார்த்ததற்குக்குட, பணம் தருபவர்கள் அரியராக இருக்கின்றார்கள். தமக்கு வைத்தியம் செய்துகொண்டு, தம் பதவியைப் பயன்படுத்தி டாக்டருக்கு ஏதேனும் ஒரு சிறு சலுகை செய்துவிட்டு, பணம் தர மனம் வராத செல்வலோபிகள் பலர் இருக்கிறார்கள். ஆனால் ஏழையாய் இருந்தாலும், தம்மால் முடிந்த தொகையைக் கொடுக்கவேண்டும் என்று விரும்புபவர்களும் இருக்கிறார்கள். உலோபிகளில் பலர், தாமும் அனுபவிக்காமல், பிறரையும் அனுபவிக்கவிடாமல், வாழ்வதைக் காண்கின்றோம். இவர்களைக் குறித்தே,

''ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்
கொன்று
ஈதல் இயல்பிலா தான்''

என்று திருக்குறளும்,

''உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்— கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பான்.......''

என்று நாலடியாரும், பெரிதும் இரங்கிக் கூறுகின்றன. உலோபம் என்னும் தீயகுணம் ஒன்றே ஏனைய எல்லா நல்ல குணங்களையும் கெடுத்து அழித்துவிடுமாம்.

''உளப்பரும் பிணிப்பரும் உலோபம் ஒன்றுமே,
அளப்பருங் குணங்களை அழிக்கும் ஆறுபோல்,
கிளப்பரும் கொடுமைய அரக்கி கேடிலா
வளப்பெரும் மருதவைப்பு அழித்து மாற்றினாள்''

என்று கம்பர், தாடகையைப் பற்றிக் கூற நேருங்கால், இவ்வுண்மையைக் குறிப்பிடுதல் காணலாம்.

உணவுப் பொருள்கள் மீதம் ஏற்பட்டால், அதை உடனடியாக மற்றவர்களுக்குக் கொடுத்தல் நலம். தாமே உண்ணவேண்டும், பிறர்

உண்ணக்கூடாது என்று நினைத்து, அதை வாளா வைத்திருந்துவிட்டு, பிறகு அதைப் பலர் வீணாக்குகின்றார்கள். உதாரணமாக, அரிசி முதலிய பொருள்களை ஒருமாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு வைத்திருக்கலாம். காய்கறி, பால் முதலிய பொருள்களை அதிக நாட்கள் வைத்திருந்தால் கெட்டுப்போகின்றன. யாருக்கும் பயன்படாமல் அவைகள் வீணாகின்றன. பிறருடன் சேர்ந்து உண்ணுவதால், அப்பொருள்களை வீணாக்காமல் தடுக்க முடிகிறது. பிறருடன் சேர்ந்து உண்பதால் மனத்திற்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதே தத்துவம் தான், கோயில் பிரசாதத்திலும் இருக்கிறது. கோயில் பிரசாதத்தை எல்லோருக்கும் சிறிது சிறிதாகப் பகிர்ந்தளிக்கிறார்கள். அதைப் பகிர்ந்தளிப்பவருக்கேகூட, ஒருசில வேளைகளில் அந்தப் பிரசாதம் கிடைக்காமல் போகிறது. அல்லது முழுவயிற்றுக்குக் கிடைப்பதில்லை. அப்போது அவர் அரை வயிற்றுக்கு மட்டும் உண்கிறார். இதனால் அவருக்கு மனத்திருப்தி ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், ஆரோக்கியமாகவும் இருக்க முடிகிறது. அதிகம் சாப்பிடுவதால் ஏற்படுகின்ற அஜீர்ணம் புளிஏப்பம் முதலியன ஏற்படுவதில்லை. மற்றும் பிற வியாதிகளும் வருவதில்லை. எல்லோருடனும் சேர்ந்து உண்பதால், மனம் மகிழ்ச்சி அடைகிறது. இதையே ஔவையார், ''ஐயமிட்டு உண்'' என்கின்றார். அதாவது பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து, அவர்களுடன் சேர்ந்து சாப்பிடுக என்பது கருத்து.

பிறருடன் கலந்து சாப்பிடுபவர்களைப் பார்த்தால், உடல் பருமன் இல்லாமல் இருப்பதைக் கண்கூடாகப் பார்க்கலாம். அப்படி இல்லாமல் தாமே அனுபவிக்கவேண்டும்; தாமே சாப்பிடவேண்டும் என்று, தமக்கென்றே சுயநலம் மிக்க வாழ்க்கையை அமைத்துக்கொண்டு வாழ்பவர்களின் உடல், பொதுவாகப் பருமனாகவே இருக்கும். உடல் பருமையாக இருந்தால், அதிக வியாதிகள் வரும். உடல் பருமன் அடைபவர்கள், இருதய நோயினால் அவதிப் படுகிறார்கள். கொஞ்சம் வேகமாக நடந்தால் கூட, அவர்களுக்கு மூச்சு வாங்கும். இவர்களுக்குப் பசி உண்டாவதில்லை. அதனால் தாம் சாப்பிடவில்லை என்று உடல் பருமன் உள்ளவர்கள் சொன்னால்கூட, யாரும் அவர்களுக்காக அனுதாபம் காட்டுவதில்லை. இவர் தான் பருமனாக இருக்கிறாரே, இவருக்கு எதற்கு இப்பொழுது உணவு என்று எல்லோரும் நினைக்கிறார்கள்; வைத்தியர்களும் இப்படியே கருதுகிறார்கள். உடல் பருமன் ஏற்பட்டவுடன் உடலைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் இறங்குகிறார்கள். அதை முன்கூட்டியே, உடல் பருமன் ஏற்படாமல் செய்திருக்கவேண்டும். உடல் பருமையானபிறகு முயற்சி எடுத்தால் அது பலனளிப்பதில்லை.

அதேபோல்தான், கடவுள் நம்பிக்கையும் கூட! துன்பங்கள் வந்தபிறகு கடவுளைத் தொழுவதைவிட, துன்பங்கள் வராமல் நன்றாக இருக்கும்போதே, கடவுள் உண்டென்று நம்பி, அவரை அன்புடன் தொழுது, நல்லவர்களாக வாழ்வது நலம். ஒருசிலர் கடவுள் இல்லை என்று மேடை ஏறிப் பேசுகிறார்கள். பாமர மக்கள் அதை நம்பி ஏமாந்துவிடுகிறார்கள். இப்படி எத்தனையோ பேர்! நான் ஒரு சமயம் ஒரு பெரும் பிரமுகரின் வீட்டிற்குச் சென்றேன். அவர் வீட்டில் வேங்கடாசலபதி, மற்றும் விநாயகர் படங்கள் இருந்தன. அவரிடம் நான் ''என்ன சார், கடவுள் இல்லை என்று தீவிரமாக மேடை ஏறிப் பிரசாரம் செய்கிறீர்கள். ஆனால் , தங்கள் வீட்டில் தெய்வங்களின் படங்களை வைத்துப் பூசிக்கின்றீர்களே!'' என்று கேட்டேன். அதற்கு அவர், ''என்ன செய்வது? நான் ஒவ்வொரு நாளும் வீட்டை விட்டுக் கிளம்புமுன், என் மனைவி என்னைச் சுவாமி படத்திற்கு முன் நிறுத்திக் கடவுளைக் கும்பிடுமாறு வற்புறுத்துகிறாள். அதோடு குங்குமத்தையும் எடுத்துத் தருகிறாள். நானும் வேண்டாவெறுப்புடன், என் மனைவிக்காகத் தினமும் கடவுளைக் கும்பிடுகின்றேன்'' என்று சொன்னார். நான் மனதில் நினைத்துக் கொண்டேன். அவருக்கு விருப்பம் இருக்கிறதோ இல்லேயோ, அவரை அறியாமல் தினமும் ஆண்டவனை அவர் நினைத்துக் கொண்டுவிடுகிறார் என்று. எனவேதான், அவர் ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றியும் பெற்றுவிடுகிறார்; பெரிய பதவிகளிலும் இருக்கிறார் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

ஒரு கதை சொல்வதுண்டு. கொடிய பாவி ஒருவன், தான் சாகும்பொழுது தன் மகன் நாராயணன் என்பவனை 'நாராயணா' என்று அழைத்தான். தெரிந்தோ தெரியாமலோ, அவன் பகவானின் நாமத்தை உச்சரித்ததினால் அவன் அடுத்த பிறவியில் மேன்மையான பதவியை அடைந்தான் என்று சொல்வதுண்டு.

''மொய்த்தவல் வினையுள் நின்று
மூன்றெழுத் துடைய பேரால்,
கத்திர பந்தும் அன்றே,
பராங்கதி கண்டு கொண்டான்''

என்று தொண்டர் அடிப்பொடியாழ்வார், பாடியிருத்தலும் இக்கருத்தை வலியுறுத்தும். பகவானின் திருப்பெயரைச் சொல்லி அழைத்ததினாலேயே, இவ்வளவு நன்மை ஏற்படுகிறதென்றால், நாம் எந்நாளும் பகவானை நினைத்து உருகி அன்புடன் வழிபடுவோமானால், அவர் நமக்கு உதவிசெய்யாமல், கருணை காட்டாமல் போய்விடுவாரா! நாம் கடவுளை நோக்கிச் செய்யும் பிரார்த்தனைகளுக்கு நிச்சயம் பலன் கிடைக்கும். பிரார்த்தனையினால் நமக்கு வாழ்க்கையில் ஏற்டும் கவலைகளும் துன்பங்களும் நீங்கி, நிரந்தரமான இன்பமும் மகிழ்ச்சியும் ஏற்படும். எனவே தான் அப்பர்பெருமான் ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்று கூறியுள்ளார். ஆதலால் கடவுள் நம்பிக்கையுடன் வாழ்ந்து வருவோமேயானால், நாம் எந்நாளும் இன்பமாக வாழலாம்! இது நிச்சயம்; பொய்யன்று.

''துன்பம் இன்றித், துயர்இன்றி, என்றும்நீர்
இன்பம் வேண்டில், இராப்பகல் ஏத்துமின்!
என்பொன் ஈசன் இறைவன்என்று உள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே!''

— திருநாவுக்கரசர்

# காவளம்பாடிக் கண்ணன்

டாக்டர் திரு ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

''மாதவன்என்றென்று ஓதவல்லீரேல்
தீதொன்றும்அடையா ஏதஞ்சாராவே''(1)

[மாதவன் - இலக்குமிநாதன்; தீது-முன்னைய பாவங்கள் ; ஏதம்-மேலுள்ள பாவங்கள்].

காவளம்பாடியை நோக்கி நம் மாட்டு வண்டி வந்துகொண்டிருக்கும் பொழுதே இந்தத் திருவாய்மொழிப் பாசுரம் நம்மனத்தே எழுகின்றது. வாடாமலர் கொண்டு நாள்தோறும் நாடமுடியாமலும், திருவேங்கடம் மேயானை அடிபணிய முடியாமலும் இருப்பவர்கட்கு ஒருவழி அருளிச் செய்கின்றார் ஆழ்வார் இப்பாசுரத்தில்.

இதில் 'மாதவன் என்று' சொல்லாமல் 'மாதவன் என்று என்று' என இரட்டித்துச் சொன்னதன் காரணத்தைச் சிந்திக்கின்றோம். இலக்குமி சம்பந்தத்தை இரண்டு தடவை அநுசந்திக்க வேண்டும் என்பது குறிப்பு. இரண்டு கண்டமாக உள்ள 'துவயம்' என்னும் மந்திர இரத்தினத்தில் முன்வாக்கியத்திலும் பின்வாக்கியத்திலும் உள்ள 'ஸ்ரீமத்' என்ற பதங்களின் பொருள்களைத் திருவுள்ளம் பற்றி, துவய அநுசந்தானம் செய்ய நியமிக்கின்றார் ஆழ்வார் என்று கொள்ள வேண்டும். ஆசாரிய இருதயத்திலும் ''மாதவன் என்று துவயமாக்கி''2 என்று அருளிச் செய்திருப்பதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது. ''ஸ்ரீமத்'' என்ற இரண்டு பதங்களின் கருத்தை நம் ஆசிரியர்கள் தெளிவாக்கியுள்ளனர்.

> ''இதில் முற்கூற்றால் பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈசுவரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது; பிற்கூற்றால் அச்சேர்த்தியிலே அடிமையை இரக்கிறது''(3)

என்பது முமுட்சுப்படி. முன்வாக்கியத்தில் இலக்குமி சம்பந்தம் சொன்னது புருஷகாரமாக; பின்வாக்கியத்தில் அது சொன்னது பெரியபிராட்டியாரும் அவனுமான சேர்த்தியிலே கைங்கரியம் செய்கையைக் குறிப்பிட்டவாறு. ஆக அடையும் நிலையோடு அநுபவிக்கும் நிலையோடு வேறுபாடின்றி இரண்டு நிலையிலும் இலக்குமி சம்பந்தம் உத்தேசமாக இருப்பதால் இங்கு ''மாதவன் என்றென்று'' இரட்டித்து அருளப் பெற்றுள்ளது. இத்திருவாய்மொழி முதற்பாசுரத்தில் சொன்ன 'நாரணமே'4 என்பதனுடன் 'மாதவன்' என்ற இதனை இரண்டு தடவை சேர்த்துச் சொல்ல வல்லீர்களாயில் என்பது குறிப்பு. எட்டெழுத்துத் திருமந்திர அநுசந்தானத்தோடு மாத்திரம் நில்லாமல் துவயாநு சந்தானமும் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றார் ஆழ்வார். ஒருவர் முன்னே சொல்ல மற்றொருவர்பின்னே சொல்லுவதற்கு 'ஓதுதல்' என்று பெயர். 'உங்கட்கு ருசி இல்லையாகிலும் பிறரால் தூண்டப் பெற்றவராகி எப்பொழுதாவது சொல்ல நேரிட்டால்' என்பதனைக் குறிக்கவே ''ஓதவல்லீரேல்'' என்கின்றார். பிரம்மஞானம் பெறுவதற்கு முன்னர் செய்யும் பாவங்கள் பூர்வ பாவங்கள் எனப்படும்; இவற்றையே 'தீது' எனக் குறித்தார். பிரம்ம ஞானம் பெற்ற பின்பு நேரும் பாவங்கள் உத்தரபாவங்கள் எனப்படும்; இவற்றையே 'ஏதம்' எனக் குறித்தார். ஆண்டாளும் இவற்றை,

''போயும் பிழையும்
புகுதருவான் நின்றனவும்
தீயில் தூ சாகும்''(5)

என்று அருளிச் செய்திருப்பதையும் ஈண்டு நினைக்கின்றோம். போயபிழைகள் தீயிலிட்ட தூசுபோலத் தொலைந்தொழியும்; இனிவரும் பிழைகள் தாமரை இலைத் தண்ணீர்போல் பற்றுதலின்றி ஒழிந்து போகும். ஈட்டாசிரியரும் ''மேலே சொன்ன திருமந்திரமும் (10.5:1) இப்பாட்டில் சொன்ன (10.5:7) 'ஸ்ரீமத்' பதமும் தனித்தனியே பேற்றுக்குப் போதியதான பின்பு, இரண்டினையும் சேர்த்துச் சொன்னவர்கட்குப் பேறு சொல்ல வேண்டாவிறே'' என்று கூறியுள்ளதையும் சிந்திக்கின்றோம்.

இந்த எண்ணங்கள் நிறைந்த மனத்துடன் இருக்கும் நம்மை, மாட்டுவண்டி காவளம்பாடியில் கொண்டு சேர்க்கின்றது. இத்திருத்தலம் சீகாழி இரயில் நிலையத்திலிருந்து பத்துக் கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. திருமணிக்கூடத்திலிருந்தும் மாட்டுவண்டியில் வரலாம். இங்கிருந்து நான்கு கி.மீ. தொலைவிலுள்ளது. காவளம்பாடி எந்தவித வசதிகளும் இல்லாத ஒரு சிற்றூர். இத்திருத்தலம் திருநாங்கூர்த் திருப்பதிகளில் ஒன்பதாவதாகும்.

திருமங்கையாழ்வார் இத்திருப்பதி எம்பெருமானை ஒரு திருமொழியால் மங்களாசாசனம் செய்துள்ளார்(6). இத்திருமொழிப்

1. திருவாய்மொழி 10.5:7
2. ஆசாரிய ஹிருதயம்-சூத்திரம் 228
3. முமுட்சுப்படி—122
4. திருவாய்மொழி, 10.5:1
5. திருப்பாவை—5.
6. பெரிய திருமொழி 4.6.

பாசுரங்களில் நாங்கை நாட்டுவளம் ஓரளவு காட்டப்பெறுகின்றது. நாங்கை நாட்டு நீர் நிலைகளில் கயல் மீன்கள் அச்சத்தால் துள்ளி ஓடுகின்றன; மலர்களில் வண்டுகள் ஆரவாரத் துடன் தேனை நுகர்ந்து இன்புறுகின்றன. நாட் டின் சோலைகளின் நீழலில் நறுமணம் நிறைந்து காணப்பெறுகின்றது. சோலைகளில் எங்கும் நறுமலர்கள் பூத்துக் குலுங்குகின்றன; கால்வாய்கள் தோறும் நீர் பாய்ந்தோடியவண் ணம் உள்ளது. சோலைகள் எங்கும் அழகிய மயில்கள் தோகை விரித்தாடுகின்றன. பருத் தெழுந்துள்ள பலா மரங்களிலும் மாமரங் களிலும் நறுமணம் வீசும் கனிகள் பழுத்துத் தொங்குகின்றன. இவை கனிந்து விழுந்து தேன் வெள்ளமிடப் பெற்றனவாகத் திகழ்கின்றன. திருநாங்கூரில் விண்ணளாவிய பெரிய மலைகள் போன்ற மாடமாளிகைகள் பொருந்திக் காணப் பெறுகின்றன. இவற்றில் நான்மறைவல்ல அந் தணர்களும் பகைவர்களை விரைவில் வென்று ஒழிக்கவல்ல வீரர்களும் வாழ்கின்றனர்.

திருப்பாசுரங்களில் பரத்துவ எம்பெரு மான், அவதார எம்பெருமான்கள் சேவிக்கப் பெறுகின்றனர். முதலையால் கவ்வப்பெற்று ஆயிரம் திருநாமங்களை அநுசந்தித்த கஜேந் திராழ்வானின் இடர் களைந்த எம்பெருமான் அநுசந்திக்கப் பெறுகின்றான். ஆதிவராகமாகி அண்டபித்தியில் அழுந்திக் கிடந்த பூமியைக் கொணர்ந்தவன்; மாவலியின் யாக பூமியில் வாமனனாக எழுந்தருளிக் குறையிரந்தவன். இராமனாக வந்து வாலியைக் கொன்று சுக்கிரீ வனுக்கு மகுடம் சூட்டியவன். இராவணனுடைய பத்துத் தலைகளையும் அறுத்துத் தள்ளி வீட ணனுக்கு அரசை அளித்தவன். கண்ணனாக வந்து காளியன் என்ற நாகத்தின்மீது பல்வேறு நர்த்தனங்களைச் செய்தவன். மல்லர்களைக் கொன்று பாரதப்போரில் பல்லாயிரம் அரசர் களை நாசமடையச் செய்தவன். தருமபுத்திர னுக்கு அரசளிக்க விரும்பித் தூது போனவன்; குவலயாபீடத்தையும் அதன் பாகனையும் கொன்றொழித்தவன். சத்தியபாமைக்காகத் தேவேந்திரனைச் செற்று, விரைந்து நந்தவனத் தின் அழகை அறிந்து கற்பகத் தருவினை பூமிக் குக் கொண்டு வந்தவன். காயத்ரீ, த்ரிஷ்டுப், ஜகதீ, அநுஷ்டுப், பங்க்தி என்று சொல்லப் பெறும் சந்தசுக்களெல்லாம் தானாகஇருப் பவன்; எழுத்துக்களின் எண்ணிக்கை கொண்டு சந்தசுகளின் பெயர்களை அறுதியிட்டவன். பஞ்சபூதங்கட்கு நியாமகன்; காரியப்பொருள் கள் யாவும் அழிந்து கிடந்த காலத்து எல்லாம் தன் பக்கலிலே ஐக்கியமாகித் தானொருவனே என்னும்படி நிலை பெற்றிருப்பவன்;இவற்றை யெல்லாம் பாகுபாடு செய்து காரியங் கொள்ள நினைத்த காலத்து இவற்றுக்கெல்லாம் காரண பூதனாக நின்றவன்; இவ்விதமாக அருமறை களால் உணர்த்தப்படுபவன்.

இப்படிப்பட்ட எம்பெருமானே காவளம் பாடியில் திருக்கோயிலில் சேவை சாதிப்பவன் என்று ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால் பட்டவண்ணம் திருக்கோயிலில் புகுகின்றோம். நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திரு முகமண்டலம் கொண்டு சேவை சாதிக்கும் கோபால கிருஷ்ணனை வணங்குகின்றோம்; கண்ணன் என்ற திருநாமத்துடனும் இந்த எம் பெருமான் வழங்கப் பெறுகின்றான். தாயாரின் திருநாமம் மடவரல் நாங்கை செங்கமலவல்லி நாச்சியார். இவரையும் வணங்கி இவருடைய திருவருளுக்குப் பாத்திரமாகின்றோம். எம்பெரு மானின் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்களை மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின் றோம். ''காவளம்பாடி மேய கண்ணனே! களைகண்நீயே'' என்று ஒருமுறைக்கு ஒன்பது முறையாக வேண்டுகின்ற ஆழ்வார் வாக்கி லேயே நாமும் இறைஞ்சுகின்றோம்.

இந்த நிலையில் திவ்விய கவியின் திருப் பாசுரமும் நினைவிற்கு வர அதனையும் ஓது கின்றோம்.

''செப்பேன் மனிதருக்குஎன்
செஞ்சொல் தமிழ்மாலை

கைப்பேன் பிறதெய்வம்
காண்பாரை-எப்போதும்

காவளம்பாடித் திருமால்கால்
தாமரை தொழுது

நாவளம்பாடித் திரிவேன்
நான்''(7)

[செப்பேன்-பாடேன் ; செஞ்சொல்-இன் சொல்; பிறதெய்வம்-திருமாலையன்றி வேறு கடவுள்; கைப்பேன்-வெறுப்பேன்; நா-(எனது) நாவினால்; வளம்பாடி-வள மாகக் கவிபாடி; திரிவேன்-காலம் கழிப் பேன்.]

''உலகப்பற்றுக்கு ஏதுவான மனித வழி பாட்டை நீக்கி, பிற தெய்வ வழிபாடு செய் பவர்களை வெறுத்தொதுக்கி, வீடுபேற்றிற்கு ஏதுவான திருமால் திருவடிகளின் மீது கவி தைகள் யாத்து வழிபட்டுப் பொழுது போக்கு வேன்'' என்கின்றார், மறந்தும் புறந்தொழா வீரவைணவராகிய திவ்வியகவி. தமது அநுட் டானத்தை இங்ஙனம் வெளியிட்டதைச் சிந் திக்கின்றோம். இதனால் இவர் திருமாலடியார் களிடம் பேரன்பு கொண்டவர் என்பதையும் தெளிகின்றோம்.

இத்திருக்கோயிலின் வழிபாடு காலை 10 மணிக்குத்தான் தொடங்குகின்றது. இந்த நேரத்தைத் தவிர, வேறு நேரங்களில் வந்தால் சேவை கிடைக்காது. இத்திருக்கோயிலில் மடைப்பள்ளி இல்லை. இத்திருக்கோயிலி லிருந்து ஒன்றரை கி. மீ.க்குக் கிழக்குத் திசை யில் திருமங்கையாழ்வார் நாடோறும் 1008 அடியார்க்குத் திருவாராதனம் செய்த மங்கை மடம் என்ற சிற்றூர் உள்ளது. இச்செய்திகளை அறிந்த நிலையில் 'பார்த்தன்பள்ளி' என்ற திருத்தலத்தை நோக்கிப் பயணமாகின்றோம்.

# கணபதி வரவும் - செலவும்

"மகாவித்துவான்"
திரு. பண்டித. வி. நடேசனார், B.A., J.P., சென்னை

இந்தியாவில் உள்ள சமயங்கள் மதங்கள் யாவற்றிற்கும் பொதுவாம் தெய்வம் கணபதியே. இத்தெய்வத்தின் துணைகொண்டே, தத்தம் கடவுளரை மக்கள் வணங்குகின்றனர். கடவுளைப்பற்றிப் பேசாத பௌத்த மதத்திலும் கணபதிபூசை உண்டு. காரணம்; தலையாய காரணம்; புத்தர் விநாயகரைப் பூசித்தவர். இன்றும் புத்தர்கோயில்களில் கணபதிக்கு இடம் உண்டு; நித்திய பூசையும் உண்டு. சமணரும் கணபதியைச் சிறப்புடன் போற்றுகின்றனர். அறுசமயக் கடவுளர்க்கும் கணபதியே முன்நிற்கிறார். முன்னவனை வழுத்தியே ஏனைய வழிபாடுகள் ஆரம்பமாகின்றன. இத்தகைய ஐதிகம் இமயம் முதல் கன்னியாகுமரி முனை வரை,வேரூன்றி உள்ளதைக் காணலாம். உலகெலாம் காணலாம். (பார்வை : அமெரிக்க மாது, ஆலிஸ் கெட்டி (Alice Getty) இயற்றிய ''கணேசர்'' என்னும் அரிய நூல்.

கிரேக்க நாட்டிலும் ரோமாபுரியிலும் இத்தாலி தேசத்திலும் ''கணேசர்'' என்பவரை ''ஜேனஸ்'' என்று அழைக்கின்றனர்; வழிபடுகின்றனர். ரோமாபுரியில் வாயிற் கதவருகில் வைத்து ஜேனஸ் பூசிக்கப்படுகின்றார். 'டோர் வேகாட்'' என்று சொல்லுகின்றனர். 'அவரே எல்லாப் பொருளுக்கும் முதல்வர்'' (He (Janus) was the beginning of every thing '')என்றும், ''ரோமாபுரி நாகரிகத்திற்கு அடிப்படை வீடும் குடும்பமும் ஆவன போல், ஜேனசும் வெஸ்டாவும் (அக்னி) ரோமர்களின் வழிபாட்டிற்கு அடிப்படை*'' என்றும், ''மிகப் பழைமையான கடவுள் (ஜேனஸ்) அவரே எல்லாவற்றிற்கும் தொடக்கம்;எல்லாச் செயல்களுக்கும் மூலம்'' என்றும், ''தினசரி, வாரம், மாதம், வருட ஆரம்பத்தில் அவரே (ஜேனஸ்) முதல் பூசைக்குரியவர்'' என்றும் கிரேக்க நாட்டினரும் ரோமாபுரியரும் கூறுகின்றனர். ஜேனஸ் (கணேசர்) கடவுளுக்குரியதாகத் தம் முதல் மாதத்தை ''ஜனவரி'' என்றும், ''ஜனுவேரியஸ்' என்றும் பெயரிட்டனர் மேனாட்டார். தமிழர்க்கும் ஆண்டின் முதல் மாதமாக ஒருகாலத்தில்'ஆவணி'யே இருந்தது. புத்தாண்டினைக் கணபதி பூசையோடு ஆரம்பித்தனர் அறிஞர்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய கணபதியைத் தமிழகத்திற்கு வாதாபியிலிருந்து பரஞ்சோதியார் கி. பி. 642-ல் கொண்டு வந்தார்; அதன் பின்னரே கணபதி பூசை தமிழ்நாட்டில் தமிழர்களிடையே பரவியது என்று சிலர் செப்பினர், அவர் தம் கூற்றுக்கு ஆதரவாகச் சேக்கிழார் பாடிய சிறுத்தொண்ட நாயனார் (பரஞ்சோதியார்) கதையைக் காண்பிக்கின்றனர். வரலாற்று ஆசிரியராகிய தெய்வச் சேக்கிழார்டி புராணத்தில் வாதாபி வெற்றியைக் கூறுகின்றாரே அன்றி ''வாதாபி கணபதியைக் கணபதீச்சரத்திற்கு வெற்றிச் சின்னமாகக் கொணர்ந்தார்'' என்று கூறவில்லை.

திருச்செங்காட்டங்குடியிலுள்ள கணபதீச்சரக் கடவுளருளால் பிறந்தவர் பரஞ்சோதியார். செங்காட்டங்குடியில் வீற்றுள்ள சிவனுக்குச் ''சீராளன்'' என்னும் பெயருண்டு. அச் சிவனது பெயரையே சிறுத்தொண்டர் தம் தவப் புதல்வனுக்கு இட்டார். (கணபதீச்சரக்கோயிலே மிகப் பழையது. அதற்கு அக்கோயில் கல்வெட்டுகளே சான்றாகும்). சிறுத்தொண்டர் சென்று அழைக்க ஞான சம்பந்த நாயனார், அவர் தம் இல்லம் வந்து, கணபதீச்சரத்தைத் தரிசித்தார்; தேவாரம் பாடினார் என்கிறார் சேக்கிழார்.

இன்று பாதாமி என்னும் இடமே அன்று வாதாபி (வாதாவி) எனப்பட்டது. இப்பழைய நகரம் பம்பாய் இராசதானியில் பெல்காம் மாவட்டத்தில் உள்ளது. இது சாளுக்கிய அரசனாகிய இரண்டாம் புலிகேசியினது தலைநகரமாக வீற்றிருந்தது. மகாராட்டிரத்தில் விநாயகர் வழிபாடு மிகப் பிரசித்தி பெற்றது. இங்கு மராட்டியர் விநாயக ஜயந்தியைக் கொண்டாடுவது போல், வேறு எந்த இடத்திலும் இந்தியாவில் காண முடியாது. பஞ்ச திராவிடர்களில் மராட்டியர் ஒரு வகுப்பினைச் சார்ந்தவராவர். திராவிடப் பண்பாடு உடையவர். வாதாபியிலிருந்தே பரஞ்சோதியார் கணபதியைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தார் என்பதற்குப் பெரிய புராணத்தில் சான்றுகள் இல்லை. சேக்கிழார் கூற்றினைக் கவனியுங்கள்.

* "As the house and the family were the foundation of Roman civilization, so were Janus and Vesta, the foundation of Roman Worship.''

''மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து
வாதாவித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை
வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும்
பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே இகலரசன் முன்
கொணர்ந்தார்''(6)

''எண்ணில'' என்பதில் வாதாபி நகரின் கோட்டைக்குள் இருந்த ஒரு விநாயகரை (கூத்தாடு கணபதி) நினைவுக் குறியாகப் பரஞ்சோதியார் கொண்டு வந்தார் என்று கூறுவர். இவ்வுரைக்குச் சரித்திரக் குறிப்போ அகச்சான்றோ புறச்சான்றோ இல்லை. ஆனால் கர்ண பரம்பரைக் கதைக்கேற்பத் திருச்செங்காட்டங்குடி (இக் கணபதி வருவதற்கு முன்பே உள்ள) கணபதீச்சரத்திற்கும் உத்தராபதீச்சரத்திற்கும் இடையில் ''வாதாபி கணபதி'' எனக் கூறும் விநாயகரின் தனிச்சந்நிதி இன்றும் இருக்கிறது. திருச்செங்காட்டங்குடியில் உள்ள "நரமுகவிநாயகர்" வேறு எங்கும் காண முடியாத சிற்ப வேலைப் பாடுடையது.

''பரஞ்சோதியார் மகாமாத்திரர் மரபினர்; வைத்தியக்கலை, வடநூற்கலை, படைக்கலப் பயிற்சி முதலியவற்றிற் சிறந்த புலமையுடையவர்; தம் மன்னற்காகப் பல போர்களில் ஈடுபட்டவர். தம் அரசனுக்காக வாதாபியைத் தாக்கி அழித்தவர். தாம் பிறந்த திருச்செங்காட்டங்குடியில் ஞானசம்பந்தர் பாடல்பெற்ற கணபதீச்சரத்துக் கடவுளுக்குத் தொண்டு செய்து வந்தவர்'' என்பன சேக்கிழார் கூறும் குறிப்புகளாம். வாதாபி பிடித்த காலம் கி.பி. 642 ஆகும். அப்பரால் சைவனாக்கப்பட்ட மகேந்திரபல்லவனின் மகனாம் முதலாம் நரசிம்மவர்மன் ஆட்சியில் வாதாபி (கி. பி. 642 முதல் 655 வரை) இருந்தது. வாதாபிப் படையெடுப்பைச் சிறுத்தொண்டர் வரலாற்றிற் செருகியுள்ளதே சேக்கிழாரின் வரலாற்றுப் புலமையைக், காட்டுகிறது. வாதாபி கணபதி வரவின் பின், தமிழகத்தில் கணபதி பூசை உண்டாயிற்று அல்லது பரவிற்று எனச் சேக்கிழார் குறித்திருப்பாரே. அப்படிச் சொல்லாததற்குக் காரணம்; தலையாய காரணம்: ஆனைமுகக் கடவுளின் வழிபாடும், முருக பூசையும், காலம், கடல், இடம் கடந்தவை என்பதேயாம். ''பிடியதன் உரு உமை கொள'' எனப் பாடிய ஞானசம்பந்தரும் ''பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக்கத்தை'' எனப் பாடிய திருநாவுக்கரசரும் வாதாபி விநாயகர் வரவினைப் பற்றியோ, '-பிள்ளைக்கறி, சீராளன் கறி, சீராளன் குழம்பு, பிள்ளைக்கறிப் பிரசாதம், சித்திரை மாத அமுது படையல்'' பற்றியோ கூறவில்லை. அவ்விருவர்க்குப் பின்னரே பரஞ்சோதியார்க்கு மகன் பிறப்பும், பைரவர்க்குப் பிள்ளைக்கறி படைப்பும் நடந்தவை எனத் தீர்மானிக்கலாம். இன்றும் யாழ்ப்பாணத் தமிழரிடை போசன வகைகளில் ''சீராளன் குழம்பு'' உண்டு. இச் சீராளன் குழம்பு செய்வதற்கு முன்னரே பௌத்தர்களிடையேயும் கணபதி வழிபாடு இலங்கையில் பரவியுள்ளது என அறிக.

விநாயகக் கடவுள் கஜமுகாசுரனைக் கொன்ற காலத்து, அவனது இரத்த வெள்ளம் பெருகியதால், இத்தலம் செங்காட்டங்குடி எனக் காரணப் பெயர் எய்தியது. இவ்வாலயத்தில் கணபதியால் பிரதிட்டித்த இலிங்கமூர்த்தி எழுந்தருளி இருத்தலின் ''கணபதீச்சரம்'' ஆயிற்று. சுவாமியின் பெயர் கணபதீச்சரர்; தேவியார் திருக்குழல்நன்மாது. எனவே இப் புண்ணிய தலம் கணபதிக்கு உரியது. மற்றொரு சந்நிதி உத்தராபதீச்சரம்; இவண் பைரவர்க்கே முதலிடம். கணபதி பூசித்த சிவலிங்கத்திற்கே தினசரி முதல் அபிடேகம். கணபதீச்சரக்கோயிலின் விரிவே உத்தராபதீச்சரம் எனலாம்.

---

**தேர்த்திருவிழா:** சென்னைத் திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயிலில் 14.9.80 அன்று காலை 9 மணியளவில், ஆனந்தஞானத் திருத்தேரில், அருள்மிகு தேவி கருமாரியம்மனின் தேர் உலா நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது. அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், தேர்வடம்பிடித்துத் தேரோட்டத்தைத் தொடங்கிவைத்தார்கள். அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், துணை ஆணையர் திரு.வி.சௌ. கோதண்டபாணி, தவத்திரு சுவாமி இராமதாசர், திரு.ஆர். சர்வேசுவரராவ், திரு. எம்.பி. நாராயணன், திரு. புலவர். வேதா. திரு. கலவை. அ. கோபாலகிருஷ்ணன், திரு. எஸ். ஜெகந்நாதன் ஆகிய அறங்காவலர் குழுவினரும், நிர்வாக அதிகாரி திரு.த. நாகராசன் முதலியவர்களும் விழாவில் கலந்துகொண்டனர். திரு. இராவ் அண்டு கம்பெனி (25, ஜஸ்டிஸ் பண்டாலை சாலை, சென்னை-21) உபயதாரராக இருந்து, இத் தேர்த்திருவிழாவினைச் சிறப்புற நடத்திக் கொடுத்தனர். பண்ணிசை மன்னர் காட்டூர் டி. இராசசேகரன் குழுவினர் இன்னிசை வழங்கினர்.

---

# திருக்கோயில் வழிபாட்டின் பயன்கள்

(அருட்டிரு. மறைமலை அடிகளார்)

"இனி, பலவேறுவகையான பிணிகளால் துன்புறுவோர், ஓரோஒருகால் தாம் இருக்கும் ஊரை விடுத்து, இயற்கைநலம் வாய்ந்த வேறு ஊர்களுக்குச் சென்று வைகுவராயின், அப்பிணிகள் எளிதிலே நீங்கிடக் காண்பார்கள்.

திருக்கோயில்களைப் பண்டைக்காலத்தில் அமைத்த நம் தமிழகச் சான்றோர்கள், இறைவனருளுக்கு மாறாய் நில்லாமல், அதனோடு ஒத்துநின்று, உடல்நோய் உளநோய்களைத் தீர்த்தற்கேற்ற, நல்ல தண்ணீரும், தூயகாற்றும், அழகிய காட்சிகளும், இயற்கையாக வாய்ந்த சிறந்த இடங்களைத் தெரிந்தெடுத்தே, திருக்கோயில்களை அமைத்து வைத்தனர். அழுக்குப்படாத பளிங்கினுள்ளேயே ஞாயிற்றினொளி பெரிதும் ஊடுருவி விளங்கித் தோன்றுதல்போல, நல்ல தண்ணீரில் மூழ்கியும், அதனைப் பருகியும், தூய காற்றை உள்ளிழுத்தும், தூயதாகிய உடம்பினுள்ளும், அழகிய சிறந்த மலைக்காட்சி, கானகக் காட்சிகளைக் கண்டு எழுச்சி பெற்றுக் களித்து உயர்ந்தோங்கி இன்புற்றுச் சொக்கிய உள்ளத்தினுள்ளுமே, இறைவன்தன் அருளொளி முனைத்து விளங்கும்; அஃது அங்ஙனம் விளங்கவே, உடம்பையும் உயிரையும் பற்றிய பிணி எத்துணைக் கொடியதாயிருப்பினும், அஃது அவ்விரண்டையும் அறவே விட்டு நீங்கும்; உடம்புக்கும் உயிருக்கும் முன்னில்லாத நலமும், அழகும், ஆற்றலும் உண்டாகும். ஆகவே, திருக்கோயில்களும், அவை அமைந்த விழுமிய இடங்களுமே, மக்கள் எய்திய உடல்நோய் உளநோய்களை ஒருங்கே நீக்குதற்கேற்ற, இசைவுகள் முற்றும் வாய்ந்தனவாகும்.

ஆதலின், சிவபிரான் திருக்கோயில், முருகப்பிரான்மலைக்கோயில், திருமால் திருக்கோயில் உள்ள ஊர்கட்குச் சென்று, ஆங்காங்கு இறைவனை வணங்கி, ஏழையெளியவர்கட்கும், கற்றவர்கட்கும் அறஞ்செய்து, சிலநாள் வைகி வருவாராயின், நோயாளர்கட்கு அந்நோய் நீங்குதலுடன், அவர்கள் உடம்பும் உயிருந் தூயவாகி நீண்ட காலம் வளவிய வாழ்க்கையில் இன்புற்று வாழ்வர். அரிய மருந்துகள் தொடர்பாக உண்டும்,வேறுபல முறைகளைச் செய்தும், தாங்கொண்ட நோய் நீங்கப்பெறாமல், நீளத் துன்புற்றுத் தம் உடம்பையும் உயிரையும் வெறுத்துவிட்டோர் பலர், கடைப்படியாக இறைவன் திருக்கோயில்கட்குச் சென்று இறைவனை வணங்கி, ஏழையெளியவர்கட்கும் கற்றார்க்கும் ஈகை யறங்களைச் செய்து, ஆங்காங்கு வைகிவரவே, தாம்கொண்ட நோய் தீர்ந்து நலமுற்று வாழ்தலை, யாம் நேரே பார்த்திருக்கின்றோம்.

தீராத வயிற்றுவலி கொண்டார் ஒருவர், திருவதிகையில் வந்து இறைவனை வணங்கி ஈகை யறங்களைச் செய்து, அங்குச் சிலநாள் வைகவே, அவர் அந்நோய் தீர்ந்து,அவ்வூரையே தமக்குக் குடியிருப்பாகக் கொண்டிருந்ததை, யாம் பல ஆண்டுகளுக்கு முன் அங்குச் சென்றபோது கண்டு வியப்புற்றேம். இதனாற், பழையநாளில் திருநாவுக்கரசு நாயனார்க்கு வயிற்றுவலி தீர்த்த அத் திருத்தலம், இக்காலத்தும் அங்குச் செல்வார்க்கு அது தீர்த்து நலந் தருதல் பெரிதும் போற்றற்பாலதன்றோ? இன்னும், யாம் எமது பிள்ளைமைப் பருவத்தில் நாகபட்டினத்திற் கலை பயின்றுகொண்டிருந்த ஞான்று, எல்லாராலும் அருவருத்து ஒதுக்கப்பட்ட ஏழைத் தொழு நோயாளர் (குட்டரோகி)ஒருவர், அவ்வூரில் நீலாம்பிகைப்பிராட்டி திருக்கோயிலுக்குப் பின்னேயுள்ள ஒரு திருக்குளத்தில் நாடோறுந் தலைமுழுகி, இறைவனையும் இறைவியையுந் தொழுது வரவே, அந்நோய் முற்றும் நீங்கி நலம்பெற்ற புதுமையினை, எம்முடன் பயின்ற தெய்வ நம்பிக்கையில்லாத மாணவர் சிலரும், வியந்து சொல்லக் கேட்டு மிக வியந்தோம்.

இன்னும், எம் அன்னையார் தமக்கு நாற்பதாண்டு ஆகியும் பிள்ளைப் பேறில்லாது வருந்துதல் கண்ட எம் அருமைத் தந்தையார், அவரை அழைத்துக்கொண்டு சிவபிரான் திருக்கோயில்கடோறுஞ் சென்று இறைவனையும் இறைவியையும் வணங்கி, இறுதியாகத் தொண்டைநாட்டின்கண்ணதான திருக்குழுக்குன்றத்தில் வந்துவைகி, இறைவன் எழுந்தருளி இருக்கும் 'வேதாசலம்' எனப் பெயரிய மலையைச் சிலநாட் சுற்றி வணங்கி, ஈகையறங்களைச் செய்துவர, அந்நோன்பு முடிந்தவுடன் எம் அன்னையார் எம்மைக் கருக்கொண்டு பெற்றெடுத்தனரென்றும், அக்காரணம்பற்றியே 'வேதாசலம்' என்னும் பெயர் எமக்கு இடப்பட்டதென்றும், எம் தாய்தந்தையரே யன்றி, இந்நிகழ்ச்சியினை யறிந்தாரெல்லாரும் வியந்து சொல்லக் கேட்டோம். நாகபட்டினத்தில் உள்ளாரெவர்க்கும் இப்பெயர் இல்லாமையால், அங்குள்ள பலரும் எமது பெயர்ப் புதுமை கண்டு, அதன் காரணத்தை உசாவுதல் வழக்கம். இங்ஙனமே தீராதநோய் கொண்டார் பலர், இறைவன் திருக்கோயில்கட்குச் சென்று வழிபாடு செய்தலொன்றினாலேயே, நோய் தீரப்பெற்ற வரலாறுகள்

மிகப்பல. ஆகவே, பிணிப்பட்டவர் நீலகிரி, கோடைக்கானல் முதலான குளிர்மிகுந்த மலை நாடுகளுக்குச் சென்று, தமக்குள்ள பிணியை மிகுதிப்படுத்திக்கொண்டு, கடவுள் வழிபாடும் இல்லாதவர்களாய் மாய்ந்தொழிதலைவிடக், கடவுள் நினைவை மிகுதிப்படுத்துந் திருக் கோயில்கட்குச் சென்று, உயர்ந்த தெய்வ எண்ணம் உடையராய், ஈகையறங்களைச் செய்து, நோய்நீங்கி இனிது வாழ்தல் நன்றன்றோ?

இக்காலத்தில் ஒருசாரார் தெய்வ நம்பிக்கையும் திருக்கோயில் வழிபாடும் வேண்டாமென்று கரைகின்றார். அங்ஙனமாயின், தெய்வத்தை நம்பாமலுந் தெய்வத்தை வழிபடாமலும் இருக்கும் இவர்க்கும், இயற்கையிலேயே அவ்விரண்டுஞ் செய்தற்குரிய பகுத்தறிவு வாயாத விலங்குகளுக்கும், வேறுபாடு என்னை? மக்கள், விலங்குகளினுஞ் சிறந்த உயர் பிறப்பினர் என்பது எதனால்? விலங்குகள் கண் முதலான ஐம்பொறிகளுக்குப் புலனாகாத நுண்பொருள்களை அறியவல்லன அல்ல. மக்களோ ஐம்பொறிகளுக்கும் புலனாகாத நுண்பொருள்களையும் அறிந்து, அவற்றைப்பெறும் அவாவும் அறிவும் ஆற்றலும் உடையர்; அதுபற்றியே அவர் விலங்குகளினுஞ் சிறந்த பிறப்பினராகக் கருதப்படுகின்றார். இவ்வாறு மக்களைச் சிறந்தவராக ஆக்குதற்கண், உயிர்களையும் உலகங்களையும் வகுத்த இறைவனை உணரும் உணர்வே தலைசிறந்து நிற்கின்றது. ஆதலால், இவ்வுணர்வை இழக்குமாறு பொய்யறிவு புகட்டி, மக்களை விலங்குகளாக்க முனைவோர்தந் தீயசொற்களைக் கேளாமல், நம்மனோர் இறைவனைத் திருக்கோயில்கடோறுஞ் சென்று வணங்கித் தம் உடம்பையும் உயிரையும் புனிதமாக்கித், தாமுந் தம் பிள்ளைகளும் நீடுவாழ்தலிற் கருத்து வைப்பாராக!

இறைவனின் திருக்கோயில்கட்குச் சென்றால் நோய் நீங்குதல் எக் காரணத்தால்? கடவுள் அருளினாலா? அல்லது கடவுள் நோய் தீர்ப்பரென்னும் நம்பிக்கையினாலா? அல்லது அங்குள்ள நல்லதண்ணீர் தூயகாற்று அழகிய காட்சிகள் முதலியவற்றைப் பெற்று இன்புறுதலாலா? எனின்; இவை எல்லாமுமே நோய் நீங்குதற்குக் காரணங்களாகும். அங்ஙனமாயின் இருந்த இடத்திலிருந்தே கடவுளருளைப் பெறலாகாதோ? திருக்கோயில்கட்குச் செல்லல் வேண்டுமோ? என வினவின்; ஆவினிடத்துப் பாலைப் பெறவேண்டுவோர், அதன் கன்றைக்கொண்டு பாலைச் சுரப்பித்துக் கறத்தலைக் காண்கின்றோமன்றோ! அதுபோலவே இறைவனிடத்து மெய்யன்பு பூண்டு ஒழுகியவாற்றால் அவனுக்கு உரிமைப்பிள்ளைகளாம் பேறுபெற்ற மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தர் முதலான நாயன்மார் சென்று வணங்கிய திருக்கோயில்களிலுள்ள திருவுருவங்களிலேதாம் இறைவனது அருள் விளங்கி நின்று ஏனையோர்க்கும் நலந்தரும்.

இதனாலன்றோ நாயன்மார் பாடல்பெற்ற திருக்கோயில்கள், ஏனையவற்றினும் விழுமியவாக வைத்து ஆன்றோரால் தொன்றுதொட்டுப் போற்றப்படுகின்றன; அக் கோயில்கட்குச் செல்லும் மக்களுந் தாம் பெறக்கருதும் நலங்களைப் பெற்று வருகின்றனர். ஆகவே, நாயன்மார் சென்று வழுத்திய திருக்கோயில்களிலும், ஆழ்வார்கள் சென்று வழிபட்ட திருமால் கோயில்களிலும், இறைவன் முனைந்து நின்று அருள்செய்தல் திண்ணமேயாமென்க.''

—அருட்டிரு மறைமலை அடிகளார்,
''மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை''

## ஆலய அமைப்பு வகைகள்

சிவாலயங்களின் அமைப்பு, சரீரப் பிரஸ்தாரம் என்றும், இருதயப் பிரஸ்தாரம் என்றும், இருவகைப்படும். சரீரப் பிரஸ்தாரமாவது, மனித உடலின் உறுப்புக்களைப் போன்ற பகுப்புக்களுடன் கூடியது. சிவாலயங்களில் கர்ப்பக் கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், தம்ப மண்டபம், நிருத்த மண்டபம் என ஆறு மண்டபங்கள் பெரும்பாலும் அமைந்திருக்கும். அவைகள் மனித உடலின் அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இவைகள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம் விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களைக் குறிக்கும். மற்றொரு வகையில் நோக்கினால், கர்ப்பக் கிருகம் தலையும், அர்த்தமண்டபம் கழுத்தும், மகாமண்டபம் மார்பும் போல விளங்குகின்றன. யாக சாலை நாபியாகவும், கோபுரம் பாதமாகவும் திகழ்கின்றது. உடம்பிலுள்ள வாய் நாக்கு அண்ணாக்கு ஐம்பொறிகள் இருதயம் உயிர் என்பனவற்றைப்போல, சிவாலய அமைப்பிலும் பல பகுதிகள் உள்ளன. சிவாலயம் உடல். கோபுரம் வாய். நந்தி நாக்கு. துவஜ ஸ்தம்பம் அண்ணாக்கு. விளக்குகள் ஐம்பொறிகள். கர்ப்பக் கிருகம் இருதயம். சிவலிங்கம் உயிர். மனித உடல், தோல் இரத்தம் இறைச்சி எலும்பு மச்சை மேதை சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களால் இயன்றுள்ளது; அதுபோலவே, சிவாலயங்களும், செங்கல், வெண்கல், கருங்கல், சுண்ணம், மணல், நீர், காரம் என்னும் எழுவகைப் பொருள்களால் அமைக்கப்படுகின்றன.

இனி, இருதயப் பிரஸ்தாரம் என்பது, சிவபிரானைப் புறத்தே பூசிப்பது போல, அகத்தே பூசிப்பதற்கு முப்பத்தாறு தத்துவ சொரூபமான இருதய கமல அமைப்பைக் கற்பிப்பது. ஆத்ம தத்துவம் இருபத்து நான்கும், தாமரையின் நாளம். வித்தியா தத்துவம் ஏழுடன், சுத்தவித்தை ஆகிய எட்டும், தாமரை மலரின் எட்டு இதழ்கள். ஈசுவரம் சதாசிவம் என்பவை கேசரங்கள். சக்தி தத்துவம் தாமரையின் பொகுட்டு. சிவ தத்துவம் அப்பொகுட்டினுள் காணப்படும் விதை வடிவங்கள் என்று, இங்ஙனம் இருதயத்தில் தாமரை வடிவமாய்த் தியானம் செய்து இறைவனை வழிபடும் முறை, இருதயப் பிரஸ்தாரம் எனப்படும்.

—ஆசிரியர்.

# அப்பரடிகளும் அருள்நெறிகளும்

திரு பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்.

இன்றைக்குச் சுமார் 1,300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அப்பரடிகள் சமுதாயத்தில் பெரும் புரட்சி கண்டவர்-சமயத்தின் ஏற்றம் காட்டித் தமிழகத்தைத் தட்டி எழுப்பியவர். 'சமயமே வாழ்வியல், வாழ்வே சமய இயல்' என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவர். மக்கள் பொருட்டு வரும் துன்பத்தைத் தாம் ஏற்று, மலை கலங்கினும் மனங்கலங்காது நின்று, இறையருளில் ஒன்றித் தன்னை ஒறுத்தலே சமயநெறி என்பதைச் சொல்லிலும் செயலிலும் காட்டியவர். பிறப்பால் வேறுபாடு எதுவும் சமுதாயத்தில் கூடாது என்ற உணர்வை நாட்டு மக்கள் உள்ளத்தில் ஊட்டியவர். இத்தகைய நல்ல அருட்பெருந் தலைவர்-சமயத் தலைவர்-சமுதாயச் சீர்திருத்தச் செம்மலார், எவ்வாறு இறையருளை ஏற்று வாழ்ந்தார் என்பதையும், அவ்விறைவன் அருளை எவ்வாறு உலகுக்கு உணர்த்தினார் என்பதையும் ஈண்டு நாம் காண்போம். இறைவன் அருள்நிலையும், இவர் அவ்வருளைப் பற்றிப் பாடிய பெருநிலையும், பலவிடங்களில் நமக்கு விளங்குகின்றன. எனினும் அளவு கருதி இரண்டொன்று கண்டு அமைவோம்.

திருநாவுக்கரசர் சைவ சமயத்தில் பிறந்தவர். தமக்கையார் திலகவதியாரின் நல்லருளால் வளர்க்கப் பெற்றவர். பிறந்து மொழி பயின்ற பின் அறிவு நிரம்பப் பெறும் நாளில், அவருக்கு ஓர் ஆசை உண்டாயிற்று. பிற சமயங்களைப் பற்றி அறிய வேண்டும் என்ற ஆவலே அது. சமண சமயம் பற்றி அறிய வேண்டும் என்ற அவாவே அது. எனவே சமண சமயம் பற்றி அறிய நினைத்தார். அதனால் சமண சமயம் புகுந்தார். அதில் அறிவன அறிந்து சிறந்தவராகித் தருமசேனர் எனப் பட்டமும் பெற்றார் ஆயினும் சேக்கிழார் அடிகள் அவர் சமணம் சார்ந்தமைக்குக் காரணம் இறைவன் அருளாமையே எனச் சுட்டிக் காட்டுகின்றார்.

தமக்கையார் அருளுருவாய் விளங்கினார் என்பதையும், தம்பியாருக்காகவே வாழ்ந்தார் என்பதையும்,

''தம்பியார் உளராக
வேண்டுமென வைத்த தயா
உம்பர்உல கணையவுறும்
நிலைவிலக்க, உயிர் தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்காது
அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து
திலகவதியார் இருந்தார்''

எனக் காட்டிய சேக்கிழார், இறையருளின்மையே அப்பர் சமணம் புகுந்தமைக்குக் காரணம் என்பதை,

நல்லாறு தெரிந்துணர
நம்பர் அருளாமையினால்
கொல்லாமை மறைந்தொழுகும்
அமண்சமயம் குறுகினார்

எனக் காட்டுகின்றார். பிறகு அவரே, அப்பர் இறையருளால் சைவம் சார்ந்த நிலையை, ''ஈசன் அருள் கூடுதலால் ஒவ்வா இப்புன்சமயத் தொழியா இத்துயரொழியச் செவ்வாறுசேர் திலகவதியார் தாள்சேர்வன்'' எனக் காட்டுவர். இவ்வாறு இறைவன் நல்லடியார்களை அடித்தும் அணைத்தும் அருள்வான் என்ற உண்மையைச் சேக்கிழார் நன்கு விளக்கிக் காட்டுகின்றார். இறைவனது அருளுடைமையை நன்கு உணர்ந்தவர்கள், நலமுறினும் அன்றி அவலமுறினும் அவன் அருளே என எண்ணி அமைந்து, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக இருப்பார்கள் என்பதை உணர்தல் வேண்டும்.

அப்பரடிகளாரது வாழ்க்கை இவ்வாறு ஆண்டவன் அருளோடு நிரம்பியதேயாகும். 'அருள் நயந்தஞ்செழுத் தேத்தப் பெற்ற அக் கருணை நாவரசு'(130) என்று, அப்பர் அருளால் ஆர்ந்த சிறப்பினையும், அவ்வருள் வழியே அவர் கல்லே தெப்பமாகக் கொண்டு கரை சேர்ந்ததையும் சேக்கிழார் சுட்டிக் காட்டுகின்றார்.

அருளுடைய நல்லவர்தம் தோற்றத்தைச் சேக்கிழார் நமக்கு எடுத்துக் காட்டுவதைஈண்டு எண்ணல் வேண்டும். தம்மை மறந்து தெய்வநெறி பற்றி, மக்கள் தொண்டராகிய அறப்பணி ஆற்றும் நல்லவர் எவ்வாறு இருப்பார் என்பதைச் சேக்கிழார், அப்பர் மேலேற்றி,

''மார்பாரப் பொழிகண்ணீர்
மழைவாருந் திருவடியும் மதுரவாக்கில்
சேர்வாரும் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளும் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப் படையும் தாமுமாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச்செல்வார்''

என்கின்றார். அருள்நிறைந்த நெஞ்சத்தால் உலகம் வாழத் தாம் வாழுவர்; கண்ணீர் பெருக்குவர்; இன்சொற்களே சொல்லுவர் ;

இறைவனையே எண்ணுவர்; அனைத்துக்கும் மேலாக உலகம் வாழ அதன் வளர்ச்சி கருதித் தொண்டினைச் செய்வர். இந்த அருள்நலம் தான் வையத்தை வாழ வைப்பது, ஆம்! இத் தகைய அருள்நலம் சான்ற அப்பரடிகள் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தமையினாலேதான், தமிழ்நாடு தன் வாழ்வும் மொழியும் பண்பாடும் பிற நல்லியல்புகளும் சிறக்கத் தலைநிமிர்ந்து நின்றது; இன்றளவும் நின்று வாழ்கின்றது.

இனி, அப்பரடிகள் காட்டும் அருள்நெறி யினைக் கண்டு அமைவோம். அருளே வடிவான அவர் ஆண்டவன் அன்பினைப் பலவகையில் எடுத்துக் காட்டுகின்றார். அவற்றுள் ஒன்று மிக உயர்ந்ததாகும். தேவாரம் பாடிய மூவ ருள் சம்பந்தரும் சுந்தரரும் தத்தம் பதிகங் களின் இறுதிப் பாடல்களில் தம்மைப்பற்றியே குறிப்பிடுவர். தம் சிறப்பியல்புகளைக் காட்டித் தம் பாடலைப் பாடின் உண்டாகும் பயன் இது என்றும் குறிப்பிடுவர். ஆனால் அப்பர் அவ் வாறு குறிப்பிடாது, ஒவ்வொரு பதிகத்தின் கடைசியிலும் இறைவனுடைய பேரருள் திற னையே போற்றிப் புகழ்கின்றார்.

இராவணன் கயிலை மலையைப் பெயர்க்க முயன்றனன். மலை அசைய, மலைமங்கை நடுங் கத், தம் விரலால் ஊன்றி இராவணனை மலை யின் கீழ் இறைவன் அழுத்தினார். அழுந்திய அவனே வருத்தத்துக்கிடையில் சாமவேதம் பாடி, இறைவனைப் போற்றினான். உடனே அவன் தம் வாழிடத்தைப் பெயர்க்க நினைத்த கொடுமையையும் மறந்து, அருள் சுரக்கப்பெற்று அவனைக் கண்டு வாழ்த்தி, விடுவித்து வரமும் கொடுத்தருளினார். இத்தகைய நீலகண்டனது நிறை நலமாம் அருளமுதத்தையே அப்பரடிகள் தம் திருப்பதிகக் கடைசிப் பாடல்களில் விளக் கிக் காட்டுகின்றார். இதனினும் சிறந்த எடுத் துக்காட்டு இறையருளை விளக்கத் தேவையும் உண்டோ? அப்பர் தேவாரம் முழுவதும் இவ் வுண்மையைப் பரக்கக் காணலாம்.

''தருக்கு மிகுத்துத் தன்தோள்வலி
உன்னித் தடவரையை
வரைக்கைகளால் எடுத்தார்ப்ப
மலைமகள் கோன் சிரித்து
அரக்கன்மணி முடிபத்தும்
அணிதில்லை அம்பலவன்
நெருக்கிமிதித்த விரல்கண்ட
கண்கொண்டு காண்பதென்னே''

என்று இராவணன் தருக்கினையும், வலியையும் காட்டி அவனை ஆட்கொண்ட திறனைஅப்பர் எடுத்துக் காட்டுகின்றார். அவ்வாறு அழுத்திய திறன், அருள் பற்றியே என்ற உண்மையினை ''அடலாடித் தேருடைய இலங்கைக் கோவை அருவரைக்கீழ் அடர்த்தானை, அருளார் கரு கருணைக் கடலானைக் கஞ்சனூர் ஆண்ட கோவை'' என்றும், ''வரங்களால் வரையை எடுத்தான் றன்னை அரங்க வூன்றி அருள்செய்த அப்பன் ஊர்'' என்றும்; ''தருக்கிச் சென்று தடவரை பற்றலும் நெருக்கி ஊன்ற நினைந்து சிவனையே அரக்கன் பாட அருளும் எம்மா னிடம்'' என்றும்; ''முன்கைமா நரம்பு வெட்டி முன்னிருக் கிசைகள் பாட, அங்கைவாள் அருளி னான் ஊர் அணி மறைக்காடுதானே'' என்றும் பலவகையில் இராவணன் அருள் பெற்றமையை எடுத்துக்காட்டி, இவ்வாறு மாற்றானுக்கே அருள்செய்த இறைவன், பாடிப் பரவும் நம் போல்வார்க்கு அருள் செய்யாதிருப்பானோ என விளக்கி, நம்மையெல்லாம் அவன் புகழ் பாட வைத்து, அவன் அருளுக்கு உரியவராக்க நினைக்கின்றார் அப்பர் அடிகள்.

'கூற்றாயினவாறு' எனத் தொடங்கும் முதல் பதிகத்தில், இறைவன் தமக்கு எவ்வெவ் வாறு அருள்செய்தான்-செய்கின்றான்-செய் வான் என்ற நிலையைப் பலபடக் காட்டி, அஞ்சலென்றடைந்தவரைக் காத்தலே ஆண்ட வன் அருள் என்பதையும் நன்கு விளக்குகின் றார்.

ஐயாறன் அடித்தலம் எவ்வெவ்வாறு மக் களுக்கு அருளுகின்றது என்ற உண்மையைத் திருவிருத்தத்தில் இருபது பாடல்களால் விளக் கிக் காட்டுகின்றார். ஆண்டவன் கருணை பிறந்த இந்தப் பகுதி மிகச் சிறந்ததாகும். ஒன்றே காட்டி அமைகின்றேன்.

துன்பக் கடலிடைத் தோணித்
தொழில்பூண்ட தொண்டர் தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந்
திறத்தன; மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி
செய்யும் அப்பொய் பொருந்தா
அன்பர்க் கணியன காண்க
ஐயாறன் அடித்தலமே

இவ்வாறு அணைத்தருளும் ஆண்டவன், அடித் தும் அருள்வான் என்ற உண்மையினை அப்பர் அடிகள் காட்டத் தவறவில்லை. ஆம்! இன்பம் துன்பம் இரண்டும் அவனருளால் உயிர்கள் நலம் பெற்று உய்யும் பொருட்டு நம்மைச் சார் வனவே என்ற அருளாற்றலை அப்பர் பல விடங்களில் காட்டுகின்றார்.

''நினைத்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்''

''ஓதுவித்தாய் முன் அறவுரைகாட்டி அமண
ரொடே
காதுவித்தாய் கட்டநோய் பிணிதீர்த்தாய்
கலந்தருளிப்
போதுவித்தாய் நின்பணி பிழைக்கில் புளியம்
வளரால்
மோதுவிப்பாய் உகப்பாய் முனிவாய் கச்சி
ஏகம்பனே''

என்றெல்லாம், தன் வாழ்வே சான்றாக இறை வனது மறக் கருணையையும், அறக்கருணையை யும் சுட்டிக் காட்டி, நம்மையெல்லாம் அவனடி போற்றி, அவனருள் பெற அழைக்கின்றார். ஆம், நாமும் அவர் காட்டிய வழிநின்று மக்கள் தொண்டியற்றி, அதே வேளையில் இறையருளை எண்ணிப் போற்றி வாழ்ந்தால், உய்தி உண்டு! வாழ முயல்வோமாக!

**

# அத்வைத தத்துவம்

*''வேதாந்த வித்தகர்''*

டாக்டர் திரு டி. எம். பி. மகாதேவன், MA., .Ph.D.

(முற்றொடர்ச்சி)

**மித்யை :**

உண்மையின் இலக்கணம் ''என்றும் உள்ளது; காலம் முதலிய அளவிற்கு உட்படாதது'' என்பதாம். இவ்விலக்கணத்தின்படி பார்த்தால் பிரமம் அல்லது ஆத்மாவொன்றே உண்மை. இதற்குக் குணங்கள் இல்லை; குறிகள் இல்லை. இது சொல்லுக்கும் மனத்துக்கும் எட்டாதது. ஆகையால்தான் உபநிடதங்கள் இது அன்று, (நேதிநேதி) என்று, விலக்கல் வாயிலாகப் பிரமத்தின் சொரூபத்தைப் போதிக்கின்றன. இதுவே நிர்க்குணப் பிரமம். நம்முடைய புத்திக்குச் சகுணமாக (குணங்களோடு கூடியவாக), தோன்றுகிறது. இந்த நிலையில் பிரமம் உலகத்திற்குக் காரணம். சகுணப் பிரமம் அல்லது ஈசுவரன் உலகிற்கு நிமித்த காரணம் மாத்திரம் அல்ல; உபாதான காரணமும் அப்பொருளே. பிரமத்தினிடமிருந்து உலகம் பிறக்கின்றது; பிறந்தபின் அதனுள்ளே அடங்குகின்றது. ஆனால் உலகம் பிறப்பதும் நிலைப்பதும் அடங்குவதும் உண்மை அல்ல. பால் தயிராக எவ்வாறு மாறுகிறதோ, அவ்வாறு பிரமம் உலகாகப் பரிணமிப்பது கிடையாது. கயிற்றினிடத்தே பாம்பு தோன்றுவது போல, பிரமத்தை ஆதாரமாகக் கொண்டு உலகம் தோன்றுகிறது. இந்தக் கொள்கைக்கு விவர்த்தவாதம் என்று பெயர். அதாவது பிரபஞ்சம் மாயை அல்லது மித்யை (பொய்த்தோற்றம்) என்பதாம்.

**அநிர்வசனீயம் :**

உலகம் மாயையென்று சொல்வதால் அத்வைதத்திற்கும் சூனியவாதத்திற்கும் வேறுபாடில்லை என்று சிலர் கருதுகின்றனர். அது தவறு. சூனிய வாதம் ''உண்மை என்பது ஒன்றுமில்லை'' என்று கூறுகின்றது. அத்வைதம் ''பிரமம் ஒன்றே உண்மை'' என்று போதிக்கின்றது. ''பாம்பும் உண்மையன்று. கயிறும் உண்மையன்று. இல்லாதது வியவகாரத்தில் கயிறாகவும், பிரமத்தில் பாம்பாகவும் தோன்றுகிறது'' இது சூனியவாதம். ''உண்மைப் பிரமம் ஒன்றே. இது வியவகாரத்தில் கயிறு முதலியனவாகவும், பிரமத்தில் பாம்பு முதலியனவாகவும் தோன்றுகிறது''—இது அத்வைதம். இத்தோற்றத்திற்குக் காரணம் மாயை. மாயை, ஒரு பாவ பதார்த்தம். அதாவது அது ஞானத்தின் அபாவம் அன்று; அது மித்யா ஞானம். மேலும், அது அனாதி. அதாவது ஆதியற்றது. காலம் மாயையின் காரியமான படியால், மாயை எப்பொழுது தோன்றிற்று என்னும் கேள்விக்கு இடமில்லை. ஆகையால் மாயை அனாதி. ஆனால், அது நித்தியமாகாது. நித்தியமான பொருள் பிரமம் ஒன்றே! மாயை எவ்வியல்புடையது என்று வினவுங்கால், நாம் ஒரு முடிவுக்கு வரமுடியாது. அது சத்தும் அன்று. அசத்தும் அன்று. ஆகையால், அது அநிர்வசனீயம் என்று கூறப்படுகிறது. அது எத்தகையது என்று சொல்ல இயலாது. ஆனால் ஞானம் உதயமாகும் போது, எவ்வாறு சூரியன் முன் இருள் நிலைக்காதோ அவ்வாறு மாயை நில்லாது மறைந்துவிடுகிறது.

**அத்தியாசம் :**

அவித்யை அல்லது அஞ்ஞானத்தினால் சீவன் தான்வேறு பிரமம்வேறு என்று கருதுகிறான்; தானல்லாதவற்றைத் தானாகப் பாவிக்கிறான். இதற்கு அத்தியாசம் என்று பெயர். ஆத்ம தருமங்களை அனாத்மாவிலும், அனாத்ம தருமங்களை ஆத்மாவிலும் ஏற்றி, ஒன்றை மற்றொன்றாகப் பாவிப்பது அத்தியாசம். இதனால்தான் ''நான் இது'' ''என்னுடையது இது'' என்ற வியவகாரம் ஏற்படுகிறது. மகன், மனைவி முதலியவர்கள் இன்புற்றோ துன்புற்றோ இருந்தால், ஒருவன் நான் இன்பிற்றுள்ளேன், நான் துன்புற்றுள்ளேன் என்று கருதுகிறான். அதுபோலவே தேகம், இந்திரியங்கள், மனம் முதலியவற்றின் தருமங்களை ஆத்மாவின்மீது ஆரோபிக்கிறோம். ''நான் பருத்திருக்கிறேன், இளைத்திருக்கிறேன், நான் குருடு, செவிடு, நான் எண்ணுகிறேன், விரும்புகிறேன்'' என்று தவறாக நாம் மதிக்கிறோம். உண்மை இதுவன்று. சீவாத்மாவின் வாஸ்தவ சொரூபம் பிரமம். இந்த உண்மையை தத்-த்வம்-அசி முதலிய மகாவாக்கியங்கள் போதிக்கின்றன.

**தத்துவமசி :**

இம் மகாவாக்கியங்கள் சீவனுக்கும் பிரமத்துக்கும் உள்ள அபேதத்தைப் போதிக்கின்றன. தத் த்வம் அசி என்ற வாக்கியத்திற்கு, ''அது நீ, நீ அதுவாய் இருக்கின்றாய்'' என்பது

பொருள். இது வாச்சியப் பொருள் அன்று, லட்சியப் பொருள். வாச்சியம் என்பது ஒரு சொல்லுக்குள்ள நேரானபொருள். லட்சியம் என்பது குறிப்புப் பொருள். சிங்கம் என்னும் சொல்லின் வாச்சியம் வனத்திலுள்ள ஒரு விலங்கு; ஒரு மனிதனைக் குறிப்பிட்டு ''அவன் சிங்கம்'' என்று சொன்னால், இங்கே சிங்கத்தின் சில குணங்களைப் பொருளாகக் கொள்ள வேண்டும். இது இலட்சியப் பொருள். தத், த்வம் என்ற பதங்களுக்கும், இலக்கணையால் பொருள் கொள்ள வேண்டும். தத் என்ற சொல்லுக்கு வாச்சியம், சர்வ சக்தி முதலிய குணங்கள் வாய்ந்த ஈசுவரன்; த்வம் என்ற சொல்லுக்கு வாச்சியம் அற்ப சக்தி முதலிய குணங்கள் படைத்த சீவன். இவ்விரண்டிற்கும் அபேதம் இருக்க முடியாது. ஆகையால் தத் த்வம் என்ற இரண்டு பதங்களுக்கு லட்சியமான பிரமத்தைப் பொருளாகக் கொள்ள வேண்டும். இது மகாவாக்கியத்தின் அகண்டார்த்தம் என்று சொல்லப்படுகிறது. இந்த உண்மையைச் சாட்சாத்கரிப்பது மோட்சம்.

### கருமமும் ஞானமும் :

மோட்சத்தைப் பெறுவதற்கு வழி ஞானம். கருமம் சாதனமாகாது. கருமத்தினால் இல்லாத ஒரு பொருளைத் தோன்றச் செய்யலாம் (உற்பத்தி), ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தை அடையலாம் (பிராப்தி); ஒன்றை மற்றொன்றாக மாற்றலாம். (விகாரம்) மலினமாயுள்ள வொன்றைத் துடைத்துச் சுத்தமாக்கலாம் (சம்ஸ்காரம்); ஆத்மா எப்பொழுதும் உள்ளது; எங்கும் உள்ளது; நிர்விகாரமாய் நித்திய சுத்தமாய் விளங்குவது. ஆகையால் அது கருமத்திற்கு விஷயமாகாது. அதை அடைவது என்று சொல்வதுகூட ஔபசாரிகம். எவ்வாறு சிலசமயங்களில் ஒருவன் தான் அணிந்த மாலை தன் கழுத்திலிருக்க அதை மறந்து அங்குமிங்கும் தேடி அலைகிறானோ, அதுபோல நாம் ஆத்மாவைத் தேடுகிறோம். எவ்வாறு கழுத்திலுள்ள மாலையை அடைய வழி, அதைத் தெரிந்து கொள்வதோ அவ்வாறே ஆத்மாவை அடைய மார்க்கம் ஞானம். நிஷ்காமகருமத்தினால் மனம்சுத்தமடைகிறது. உபாசனையால் ஒருமுகப்படுகிறது; அப்பொழுது ஒருவன் ஞானமார்க்கத்திற்கு அதிகாரியாகிறான்; வேதாந்த விசாரத்தில் ஈடுபடுகிறான்.

### நான்கு சாதனங்கள் :

வேதாந்த விசாரத்தை ஆரம்பிப்பதற்கு முன் நான்கு சாதனங்களை ஒருவர் பெற வேண்டும் என்று சங்கரர் கூறுகின்றார். (1) நித்தியாநித்திய வஸ்து விவேகம்; அழியாதது ஆத்மா. அழியக்கூடியவை மற்றப்பொருள் என்ற பகுத்தறிவு. (2) இகாமுத்ரார்த்தபல போக விராகம்: இந்த லோகத்திலும் பர லோகத்திலும் நாம் அடையக்கூடிய சுகத்தை நாடாதிருத்தல். (3) சமாதிசட்கசம்பத்து: சமம்முதலிய ஆறு குணங்கள். சமம் மனத்தை அடக்குதல்: தமம் இந்திரியங்களைத் தத்தம் விஷயங்களிலிருந்து திருப்புவது; உபரதி-திருப்பிய இந்திரியங்களை மறுபடியும் வெளிப் போகாது காத்தல்; திதிட்சை-வெப்பம், குளிர் முதலிய இரட்டை அனுபவங்களைப் பொறுத்தல்; சமாதானம்-மனத்தை ஒரு நிலையில் வைப்பது. சிரத்தை-வேதாந்த போதனையில் ஆர்வம் கொள்ளுவது. (4) முமுட்சுத்துவம்: மோட்சத்தைப் பெறவேண்டும் என்ற இச்சை. இந்த நான்கு சாதனங்களையும் பெற்ற ஒருவன் வேதாந்த விசாரம் செய்யவேண்டும்.

### ஞானத்தின் பகுதிகள் :

சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்பவை ஞானமார்க்கத்தின் பகுதிகள். சிரவணம் என்பது வேதாந்த வாக்கியங்களின் அர்த்தத்தைக் குருவினிடமிருந்து கேட்பது. மனனம் என்பது கேட்ட பொருளைச் சிந்திப்பது. நிதித்தியாசனம் என்பது சிந்தித்துத் தெளிந்ததை இடைவிடாது தியானிப்பது. ஆத்ம சாட்சாத்காரம் பெற நேரிடையான சாதனம் சிரவணமா, தியானமா? என்ற விவாதமொன்று அத்வைதிகளிடையே உளது. விவரணப் பிரஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் சிரவணம் என்றும், பாமதீப் பிரஸ்தானத்தைப் பின்பற்றுபவர்கள் தியானம் அல்லது பிரசங்கியானம் என்றும் கூறுகிறார்கள். ஆனால் இவ்விருவகுப்பினரும், ''சிரவணத்தினாலோ அல்லது பிரசங்கியானத்தாலோ ஞானம் உதயமாகின்றது. இதுவே மோட்சத்திற்குச் சாதனம்'' என்று ஒப்புக்கொள்கின்றனர்.

### அத்வைத அனுபவம் :

இந்தப் பிறப்பிலேயே நாம் மோட்சத்தைப் பெறலாம். அவ்வாறு மோட்சமடைந்தவர்கள் சீவன் முக்தர்கள். மோட்சம் என்பது நம்முடைய சொரூபமானபடியால், அதை வேறு தேசத்திலோ, வேறு காலத்திலோ அடையவேண்டும் என்பதில்லை. மோட்சத்தை மறைத்து நிற்பது அஞ்ஞானமானபடியால், அஞ்ஞானத்தின் அழிவே மோட்சம். சீவன் முக்தர்கள் தேகம் தாங்கிச் சீவிப்பவர்கள்போல, நம்முடைய அனுபவத்திற்குக் காணப்படுகின்றார்கள். உண்மையில் அவர்களுக்குத் தேகமேயில்லை; அவர்கள் அவ்வாறு காணப்படுவது நம்மையும் முக்தர்களாக ஆக்குவதற்காக. அத்வைத அனுபவத்தைச் சங்கரர் ''ஞானமே உருவாயும், ஆகாயத்தைப் போல மேலானதாயும், எப்பொழுதும் ஒரே பிரகாசமாயும், பிறப்பற்றும், ஒன்றாகவும், அழிவற்றும், மலமற்றும், எங்கும் வியாபகமாயும், இரண்டற்றதாயும் எது உளதோ அதுவே நான்-எப்பொழுதும் முக்தன் நான்'' என்று தம்முடைய உபதேச சாகஸ்ரீயில் விளக்கியிருப்பது, இங்கு நாம் உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

# "கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்"

பேராசிரியர் திரு. செ. வேங்கடராமச் செட்டியார், சிதம்பரம்

சீகாழியில் சிவபாத இருதயரும், பகவதியாரும் மனைத்தவம் புரிந்து, விரும்பிய வண்ணமே, பரசமயம் நிராகரித்து நீறாக்கும் புனை மணிப்பூண் புதல்வரைப் பெறுகின்றார்கள். திசையனைத்தின் பெருமையெல்லாவற்றையும் தென்திசையே வெல்லவும், விண்ணுலகையும் பிறவுலகையும் மண்ணுலகமே வெல்லவும், அயல்மொழி வழக்கையெல்லாம் தமிழ்வழக்கே வெல்லவும் தோன்றிய அப்புதல்வர், மூவாண்டு நிரம்பப் பெறுகின்றார். ஒருநாள் நீராடச் செல்லும் தந்தையாருடன், அக்குழந்தையும் அழுதுகொண்டு பின்தொடர்கின்றது. தாதையார் முனியவும் தவிராது தொடர்ந்துவரும் அப்பிள்ளையை அழைத்துச் சென்று, கரையில் இருத்தி விட்டு நீருள் பேராது மூழ்கிச் செபம் செய்கின்றார். தந்தையைக் காணாது அக் குழந்தை, கண்மலர்கள் நீர்ததும்பக் கைமலர்களால் பிசைந்து, வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் துடிப்பப் பொருமியழுகின்றது. திருத்தோணிச்சிகரம் பார்த்து, அம்மே அப்பா என்று அழைத்து அழுகின்ற பிள்ளையாரின் நிலையை அறிந்த சிவபிரான், பார்வதியோடு அந்தப் பொய்கைக் கரையை அடைகின்றார். அழுகின்ற பிள்ளையார்தமை நோக்கி, அருட் கருணை எழுகின்ற திருவுள்ளத்து இறையவர், தம்முடன் இருக்கும் மலைமகளைப்பார்த்தருளி 'நின் மார்பில் பொங்கியெழுகின்ற பாலினைப் பொன் வள்ளத்தில் கறந்து இம்மகவுக்கு ஊட்டுக' என்று பணிக்கின்றார்.

அம்மையாரும் அவ்வாறே பொன்வள்ளத்திற் கறந்து பாலோடு சிவஞானத்து இன்னமுதையும் கலந்து குழைத்தருளி, அப்பிள்ளையாரின் மலர்வாயில் வைத்து'உண்' என ஊட்டுகின்றார். அப்பாலினையுண்டு கொண்டே, எதிரில் உள்ள தம்மை நோக்கும் அக்குழந்தையின் கண்மலர் நீர் துடைத்தருளி அந்தப் பொற்கிண்ணத்தை விளையாட்டுப் பொருளாக அப்பிள்ளையின் கையில் கொடுத்து, அதன் அழுகையைத் தீர்த்தருளுகின்றார் சிவபிரான். யாவர்க்கும் தந்தை தாய் எனும் இவர்கள் அப்பிள்ளையாரிடம் தனியன்பு காட்டி இப்படி அருள் செய்தமையால் 'ஆளுடைய பிள்ளையார்' என்ற பெயருக்கு உரியராகின்றார் அப்பிள்ளையார். மேலும் ஒப்பற்ற சிவஞானம் கைவரப் பெற்றமையால் சிவஞான சம்பந்தர் ஆயினார். இந்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான், ''அகில தேவருக்கும் முனிவருக்குத் தெரிவரிய பொருளாகும் தாவில்தனிச் சிவஞான சம்பந்த ராயினார்'' என்று விளக்கியருளுகின்றார். மேலும் அக் கருத்தை நன்கு விளக்கும் நோக்கத்தால்,

'சிவனடியே சிந்திக்குந்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும்
பாங்கினி லோங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாமுணர்ந்தா ரந்நிலையில்''

என்ற அழகிய இனிய திருப்பாடலைச் செய்தருளியுள்ளார். இத் திருப்பாட்டிற்குப்பொருள் சொல்லுமுறையில், புலவர் பெருமக்களுக்கிடையே சில வேறுபாடுகள் இருந்து வருகின்றன. இதில் கூறப்படும் சிவஞானம், ஓங்கிய ஞானம், கலைஞானம், மெய்ஞ்ஞானம் என்பன வேறுவேறு ஞானங்கள் என்பாரும், மெய்ஞ்ஞானமும் கலைஞானமும் ஆகிய இரண்டே என்பாரும் ஆகின்றனர். சிவஞானமும் பாங்கினிலோங்கிய ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒரு பொருள்மேல் வந்த பலபெயர்கள் ஆதலின், அம்மூன்றையும் சிவஞானம் என்ற ஒன்றாகக் கொண்டும், அதனின் கீழ்ப்பட்டதாய கலைஞானத்தை ஒன்றாகக் கொண்டும், இருஞானங்களையுணர்ந்தார் சம்பந்தர் எனப் பெரும்பாலோர் கூறுகின்றனர். பாச ஞானமாகிய கலைஞானத்தையும் அம்மையின் ஞானப் பாலால் சம்பந்தர் பெற வேண்டுமா? என்பதே இங்கு ஆராய்ச்சிக்குரிய பொருளாகும். இத் திருப்பாட்டை அளவை நூல் முறையாலும், இலக்கண நூல் முறையானும் ஆராய்ந்துபார்க்கலாம்.

### அளவை நூல்முறை :

வித்துவேறு முளைவேறு ஆவதில்லை. நெல்விதைத்தால் நெற்பயிர் முளைப்பதல்லது கமுகு முளைப்பதில்லை. இது காட்சியளவையால் உணரத்தக்கது. காரணத்துளதாம் தன்மை காரியத்திலும் காணப்படுவதுதான் முறை. சீகாழிப் பிள்ளையாரின் அழுகையைத் தணிக்க அம்மையார் தம் திருமுலைப்பாலைக் கறந்து பொற்கிண்ணத்தில் ஊட்டுகின்றபோது வயிற்றுப் பசியோடு ஞானப்பசியும் நீங்குமாறு சிவஞானத்தின் இன்னமுதினையும் கலந்து ஊட்டினர் என்பதை,

''எண்ணரிய சிவஞானத்தின்னமுதங் குழைத்தருளி யுண்ணடிசி லென வூட்ட''

என்ற அடிகளால் புலப்படுத்தியுள்ளார் சேக்கிழார் பெருமான். திருமுலைப்பால் வயிற்றுப் பசியைத் தணிக்க, அதனோடு குழைத்தருளிய சிவஞானத் தின்னமுதமே, மூவாண்டுப் பருவத்தில் இறைவனைக் கண்டு தேவாரம் பாடும் ஞானத்தைக் கொடுத்து, அப்பிள்ளையாரை ஞானசம்பந்தராக்கியது என்பது தெளிவு.

சிவஞானத்தைக் குழைத்துக் கொடுத்த அம்மையின் திருமுலைப்பால், சிவஞானத்தையே கொடுப்பது முறையாமேயன்றி, பாச ஞானம் எனவும் அபர ஞானம் எனவும் சான்றோர்களால் இழித்துக் கூறப்படும் கலைஞானத்தையும் கொடுத்தது என்பது, அளவை முறையாகாது என்பது தெளிவு. கலைஞானம் என்பது உயிர்கள் தம் முயற்சியால் கற்றுணரத் தக்கது. மெய்ஞ்ஞானமோ உயிர்களின் முயற்சியால் வருவதொன்றன்று. இறைவன் அருளால் மட்டுமே வரத்தக்கது. இத்தகைய வேறுபாடு பெரிதுடைய கலைஞானத்தையும் மெய்ஞ் ஞானத்தையும் அம்மை குழைத்துத் தந்த ஞானப்பாலால் உணர்ந்தார் என்பது பொருந்துமா ?

சிவஞானம் மேலான ஞானமாதலின் அதை உணர்ந்தோர்க்கு அறியப் படாத பொருளே இல்லை. இயல்பாகவே புலப்படக்கூடிய கலைஞானம் அம்மையின் திருமுலைப்பாலால்வந்தது என்றால் அம்மையூட்டிய ஞானப்பாலுக்குச் சிறுமையன்றோ உளதாகும்? பரனைக் காட்டாத பாசஞானத்தை அம்மையின் ஞானப்பால் அருளியதாகக் கூறல் பொருந்துமா?

தாம் கூறப்போகும் 'கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்' என்பதற்குப் பின்னுள்ளோர், 'கலைஞானமும் மெய்ஞ்ஞானமும் உணர்ந்தார்' என உம்மைத் தொகையாக்கிப் பொருள் கொண்டிடுவார்களோ என்ற ஐயத்தால் போலும் சேக்கிழார் பெருமான், 'தாவில் தனிச் சிவஞான சம்பந்தராயினார்' என மேலே கூறி வைத்துள்ளார். தனிச்சிவஞானம் என்பது, கலைஞானத்தோடு சிறிதும் கலப்பில்லாது தனித்த சிவஞானம்—ஒப்பற்ற சிவஞானம் எனப் பொருள்படுதல் காணலாம். இதனோடு 'தாவில்' என்ற அடைமொழியும் கொடுத்துக் குற்றமற்ற தனிச் சிவஞானம் என்பதைப் புலப்படுத்தியுள்ளமை காணலாம்.

மேலும், 'யாரளித்த பாலடிசில் உண்டது நீ'? எனச் சிவபாத இருதயர் வெகுண்டு கேட்டபோது, சம்பந்தரின் செய்கை கூறவந்த சேக்கிழார்பெருமான், "இமயப்பாவையுடன், எண்ணிறைந்த கருணையினால்நின் றானையெதிர்காட்டி உண்ணிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால்'' என்று விளக்கியுள்ளமையும் காணலாம். இங்குத் திருஞானசம்பந்தரின் மொழியை, 'உயர்ஞானத் திருமொழி' எனச் சிறப்பித்திருப்பதை நோக்குதல் வேண்டும். இதனால் சம்பந்தர் உணர்ந்தது உயர்சிவஞானமே கலைஞானம் அன்று என்பதும், அவர் முதற்கண் மொழிந்த மொழியும் உயர்ஞானத்திரு மொழியே என்பதும் உணரலாம். உயர்வில்லாத கலைஞானத்தை விலக்கவே, 'உயர் ஞானத் திருமொழி' என அடைகொடுத்தவாறு அறியலாம்.

இதுகாறும் கூறியவற்றால் அம்மையார் எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத் தருளிய திருமுலைப்பாலையுண்ட சம்பந்தர் சிவஞானத்தை யுணர்ந்தார் என்று கூறுவதே பொருத்தமானதல்லது, பரனைக் காட்டாத கலைஞானத்தையும் உணர்ந்தார் என்று கூறுவது அளவைநூல் முறைக்கு ஏற்றதன்று என்பதைக் கண்டோம். நெல் கமுகாய் நீளுவதில்லை, நெல் நெல்முளையைத்தான் தோற்றுவிக்கும்; அதுபோலச் சிவஞானத்தைக்குழைத்த பால் சிவஞானத்தையே தந்தது.

### இலக்கண நூல்முறை :

இனி, இலக்கணநூல் முறையால் இத்திருப் பாடலை நோக்குவோம். புலவர்கள், ஒரு பொருள்மேல் பல பெயர் வரத் தொடுப்பது இயல்பு. அவ்வாறு பல பெயர்களை ஒரு பொருளுக்குக் கொடுத்துக் கூறும்போது இவ்வாறு தான் கூற வேண்டும் என இலக்கண நூலோர் ஒரு வரையறை செய்துள்ளனர்.

''ஒரு பொருள்மேல் பல்பெயர் வரின் இறுதி
ஒரு வினை கொடுப்ப, தனியும் ஒரோவழி''

(நன்னூல் 392)

என்பது அவ்வரையறை. ஒருபொருள் குறித்து வேறு பல பெயர்கள் வந்தால், இறுதியில் ஒரு வினையே கொடுத்தல் வேண்டும். ஒவ்வோரிடத்துத் தனித்தனியே வினை கொடுத்தலும் உண்டு என்பது பொருள். ''ஆசிரியன் பேரூர் கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்'' என்பது முதற்பகுதிக்கு எடுத்துக் காட்டு. ''எந்தை வருக! எம்பெருமான் வருக! மைந்த வருக! மணாள வருக!'' என்பது பிற் பகுதிக்கு எடுத்துக் காட்டு. இதில் நாம் நோக்க வேண்டியது முதற்பகுதியையே. ஒரு பொருள் பற்றிய பல பெயர்கள் அடுக்கி வந்து, இறுதியில் ஒருவினை கொண்டு முடிய வேண்டும் என்பது விதி. இடையில் வேறொரு பெயர் விரவினால், இறுதியில் ஒருவினைகொடுத்து

முடிக்க இயலாது. இவ்விலக்கண விதியை யுளங்கொண்டு அத் திருப்பாட்டை நோக்கு வாம்.

சிவஞானம், பாங்கினில் ஓங்கிய ஞானம், மெய்ஞ்ஞானம் இம்மூன்றும் ஒரு பொருள் குறித்த பல பெயர்கள். சம்பந்தர் சிவஞானத் தையும், பாங்கினில் ஓங்கிய ஞானத்தையும், மெய்ஞ்ஞானத்தையும் உணர்ந்தார் என்று இரண்டனுருபேற்று, நின்ற பெயர்களுக்கிறுதி யில் ஒருவினை கொடுத்தல் பொருத்தமாகும்; இம்மூன்றும் ஒரு பொருட் பெயர்களே யாத லின், சிவஞானத்தோடு சிறிதும் இயைபில்லாத கலைஞானத்தையும் இடையில் சேர்த்துக்கொள் வது பொருந்துவதன்று.

ஆசிரியன், பேரூர்கிழான், செயிற்றியன், இளங்கண்ணன், சாத்தன், பாணன் வந்தான் என்று, ஒரு பொருள்மேல் வராத 'பாணன்' என்ற பிறபெயரையும் உடன் எண்ணி இறுதி யில் ஒருவினை கொடுப்பது எப்படி வழுவோ, அப்படியே சிவஞானத்தின் வேறு பெயர்களா கிய ஓங்கிய ஞானம், மெய்ஞ்ஞானம் என்ற பெயர்களோடு கலைஞானத்தையும் சேர்த்து எண்ணி உணர்ந்தார் என இறுதியில் ஒருவினை கொடுப்பதும் வழுவாகும். இவ்வழுவினைத் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான் செய் தார் என்று கூறுவது பொருந்தாது; இதற்கு வேறு அமைதியான பொருள் கூறுவதே சிறப் புடையதாகும்.

சிவஞானத்தின் இயல்பை மூன்று வகை யாகப் பாகுபாடு செய்து புலப்படுத்துகின்றார் சேக்கிழார் பெருமான். ஒவ்வோரியல்பைக் கூறும்போதும் வெவ்வேறு பெயரைக் கையாளு கின்றார். சிவஞானத்தின் நிகழ்காலப் பயனை யும், எதிர்காலப் பயனையும், அதன் ஒப்புயர் வற்ற தன்மையையும் விளக்க வேண்டும் என் பது சேக்கிழார் நாயனாரின் கருத்து. முதற்கண் ''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவ ஞானம்'' எனச் சிவஞானம்பெற்ற உயிர், நிகழ் காலத்தில் பெறும்பயனை விவரிக்கின்றார். பதார்த்தம் பாராது பரமே பார்த்திருக்கும் பாக்கியம் வளர்வதற்குக் காரணமாகிய சிவ ஞானம் என்பது பொருள். அச்சிவஞானத்தைப் பெற்ற உயிர் எதிர்காலத்தில் எய்தும் பயனைக் கூறுவாராய்,

''பவமதனை யறமாற்றும்
பாங்கினில் ஓங்கிய ஞானம்''

என்கின்றார். பிறவியை அடியோடு அறுமாறு மாற்றுகின்ற நன்மையிற் சிறந்த ஞானம் என் பது பொருள். சிவஞானம், தன்னை அடையப் பெற்ற உயிர் மீண்டும் உலகிற் பிறவாது மாற் றும் சிறப்புடையது—முக்தியளிக்கும் சிறப்பு உடையது-என்பது கருத்து.

இனி, அந்த ஞானத்தின் பெருமை எத் தகையது என்னின்?, தனக்கு உவமையில்லாத சிவனைப் போலவே உவமையில்லாப் பெருமை யுடையது, பாசஞானமாகிய கலைஞானத் தால் உணர்தற்கு அரியது என்பார்,

''உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்''

என்கின்றார். 'உவமையிலா மெய்ஞ்ஞானம், கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்' என உவமையிலா என்ற அடையை மெய்ஞ்ஞானத் திற்கே ஏற்றவேண்டும். பாச ஞானமாகிய கலைஞானம், உவமையிலாக் கலைஞானம் எனச் சிறப்பிக்கப்படுதல் பொருந்தாது. கலைஞானத் தால் காண்பரிய கடவுளைக் காட்டிப் பிறவி யறுத்து முத்தியளிக்கும் சிவஞானமாகிய பாங் கினிலோங்கிய மெய்ஞ்ஞானம் இருக்கும்பொ ழுது, பாசஞானமாகிய கலைஞானம், 'உவமை யிலா' என்ற அடைமொழியைப் பெறுவது எங் ஙனம் பொருந்தும் ? ஈடும் எடுப்பும் அற்ற மெய்ஞ்ஞானமே 'உவமையிலா' என்ற அடை யைப் பெறுவதற்குரியதாகும். பாசஞானம், அபரஞானம் என்று இழித்துக் கூறப்படும் கலை ஞானத்திற்கு இந்த அடைமொழியைச் சேர்ப் பது குறிப்புச் சொல்லாய் அதற்கு இகழ்ச்சி யைப் புலப்படுத்துவதற்கே உதவும் என்பது தெளிவு.

உண்மை ஞானத்தின் மூன்று இயல்புகளைப் புலப்படுத்த வேண்டி, ''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்'' எனவும்; ''பவ மதனை யறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானம்'' எனவும், உவமையில்லதும் கலை ஞானத்தால் உணர்வரியதுமாகிய மெய்ஞ் ஞானம் எனவும், மூன்று பெயர்களைக் கொடுத் துச் சிவஞானத்தின் முப்பேரியல்புகளை விளக்கி அத்தகு மெய்ஞ்ஞானத்தை முன்னைத் தவ முடைய சம்பந்தர், அம்மையின் திருமுலைப் பால் அருந்திய நிலையில் உணர்ந்தருளினார் என்று, அம்மையின் திருமுலைப்பாலின் சிறப் பையும், அதைப் பெறுதற்கேற்ற தகுதி முன் னைத் தவத்தால் சம்பந்தர்க்கு இருந்த நிலை யையும், இவ்வினிய திருப்பாட்டால் தெய்வச் சேக்கிழார் புலப்படுத்தியுள்ளார் என்பதை யுளங்கொளல் வேண்டும்.

இத்திருப்பாட்டின் திரண்ட பொருள்: சிவனடியையே சிந்திக்கும் திருப்பெருகுதற்குக் காரணமாகியுள்ளதும், தன்னைப் பெற்ற உயிர் களின் பிறவியையறுத்து முக்தியளிக்கும் தன்மை யில் சிறந்துள்ளதும், உவமையில்லாததும் கலை ஞானத்தால் உணர்வரியதும் ஆகிய மெய்ஞ் ஞானத்தை முன்னைத் தவமுடைய சம்பந்தர், தாம் அம்மை திருமுலைப்பாலை அருந்திய வுடன் உணர்ந்தார் என்பதாகும்.

இப்பொருளே அளவை நூல் முறைக்கும், இலக்கண நூல் முறைக்கும் ஏற்புடையதாகும் என்பதை, அறிஞருலகம் ஏற்றுக் கொள்ளும் என நம்புகின்றேன்.

# திருமூலர் கூறும் இயற்கை மருத்துவம்

''மருதமலைச் சித்தர்''
டாக்டர் திரு கே. வி. கிரி, R.I.M.P., R.M.P. (சிம்லா),
மருத்துவ அதிகாரி, மருதமலை முருகன் கோயில், கோவை-41.

திருமூலர் என்பவர் தமிழ் மருத்துவம் ஆகிய சித்த மருத்துவநூல் ஒன்றை, 8,000 பாடல்களாகப் பாடியுள்ளார். அவர் தனது பாடல்களால் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்த்தார். அவரது பாடல்களில் சொற் சுவை, பொருட் சுவை, இலக்கியச் சுவை நிறைய உண்டு. அத்தோடு தத்துவங்களும் மருத்துவ முறைகளும், சிவனும் சீவனும் ஒன்றே என்ற ஞானிகளுக்குரிய யோக நெறிமுறைகளும் உண்டு. அவற்றில் இன்றைய மக்களால் மிகவும் விரும்பி ஏற்கப்பட்டு வரும் இயற்கை மருத்துவ முறையை ஒரு பாடலில் கூறியுள்ளார். அதன் கருத்து, அதனைப் பின் பற்றுவதால் குணமடையும் நோய்கள் போன்ற வற்றைக் காண்போம். திருமூலர் கூறும் இயற்கை வைத்தியம் :—

காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலையில் கடுக்காய்—மண்டலங்கொள்ளக்
கோலை யூன்றிக் குறுகி நடப்பவனும்
கோலை வீசிக் குலாவி நடப்பானே—

இப்பாடலில் கூறிய இஞ்சி, சுக்கு, கடுக்காய் மூன்றும் எல்லா இடங்களிலும் எப்போதும் கிடைப்பவை. எனவே இம்மூன்றின் மருத்து வக் குணங்களையும் பயனையும் பார்ப்போம்.

## காலையில் இஞ்சி

காலையில் தினசரி 1 துண்டு இஞ்சியை உணவிலேனும், தனியாகவேனும் 40 நாட்கள் (1 மண்டலம்) சாப்பிடவேண்டும். இஞ்சிக்குக் கார்ப்பு சுவையும், வெப்பத் தன்மையும் உண்டு. உணவு செரிப்புண்டாக்கச் செய்யும். உடலில் உள்ள பித்தநீரைப் போக்கும், நல்ல பசியும் உடல் உரமும் ஏற்படும். இது ஒரு கற்ப மருந்து. இது கண்களுக்கு நலத்தைப் பயக்கும். இஞ்சி யைத் தோல்நீக்கிப் பக்குவப்படுத்தி, தேனில் ஊறவைத்துத் தினந்தோறும் அதை மனதிடத் துடன் ஒரு துண்டை வெறும் வயிற்றில் உட் கொண்டால் நீண்டநாள் ஆரோக்கியமாக இருப்பதுடன் தேகமும் அழகுபெறும். மனோ பாவம் உண்டாகும். ஞாபகசக்தி அதிகரிக்கும். இதனைத் தொடர்ச்சியாக 40 நாட்கள் உட் கொண்டால் 'கோலை ஊன்றிக் குறுகி நடக் கும் வயோதிகரும் கோலை வீசிக் குலாவி நடக் கும்' வாலிபராகலாம்.

## கடும்பகல் சுக்கு

உலர்ந்த இஞ்சியே சுக்கெனப்படும். சுக்கு கார்ப்புச் சுவையும், வெப்பத் தன்மையும் உடையது. உடலின் வெப்பத்தைத் தூண்டுகிற சக்தியையும், பசியைத் தூண்டுகிற சக்தியையும், உடலில் உண்டாகும் வாயுவினை அகற்றும் சக்தியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சுக்கினால் செரியாமை; மார்பெரிச்சல், புளி யேப்பம், வெப்பம், மூலம், இரைப்பு இருமல், வயிற்று உப்புசம், தலைவலி போன்றவை நீங்கும். சுக்கு ஒரு கற்ப மருந்து. சுக்கினைப் பொடி செய்து தூளாக்கி, அதனை மூவிரல் அளவு பால் உணவு உண்டபின் சாப்பிட வேண டும். உண்ட உணவு நன்றாகச் சீரணமாகும். திருமூலரின் திருவாய்மொழிக்கிணங்க, தெய்வப் புலவர் வள்ளுவப் பெருந்தகையும் ''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்'' என்று இயற்கை மருத்து வம் பொதிந்த குறட்பாவையும் இங்கு நினைவு கூர்கிறேன். சுக்கு குடலிலுள்ள அசுத்த வாயுவை வெளியேற்றும். சீரணக் கருவிகளைப் பலப்படுத்தும். உடலில் உணவிற்குப் பின் உண்டாகும் களைப்பினை நீக்கும். வயிற்றுவலி வாந்தி, வயிற்றுப் பொருமல், குடல்புண், குடல் இறக்கம் போன்ற வியாதிகள் இம்முறையை அனுசரிப்போருக்கு வராது. இதனையும் 1 மண்டலம் 40 நாட்கள் சாப்பிட வேண்டும்.

## மாலையில் கடுக்காய்

கடுக்காய் துவர்ப்பு, அத்துடன் சிறிது இனிப்பு, புளிப்பு, கார்ப்புச்சுவையும் தன்ன கத்தே கொண்டது. கடுக்காயின் குணம், வெம்மை, வறட்சி, இயக்கம் என்னும் பண்பு களைக் கொண்டது. மேலும் இது பசியைத் தூண்டிச் செரிப்பிக்கச் செய்து, உடற்கட்டுக்கு வன்மை தந்து, முதுமை வரவொட்டாமற் செய்யும். அன்றியும் வாழ்நாள் பெருக்கையும், அறிவையும், ஆற்றலையும் தரும். இன்னும் இது வாதநோயைக் குறைக்கச் செய்யும். பக்குவ மாகாத உணவைச் செரிப்பிக்கச் செய்யும். வியாதிகள் தங்கிய இடங்களிலிருந்து அவை களை வெளிப்படுத்துதல், குடலிலுள்ள இயற் கைச் சக்தியைத் தூண்டி மலத்தை வெளிப் படுத்துதல், கிழத்தன்மையைத் தடுத்தல் ஆகிய குணங்களும் இதற்கு உண்டு. கடுக்காயைச்

சாப்பிடும் விதம்—கடுக்காயைக் கொட்டை நீக்கி மேல்தோலைப் பொடித்துச் சூர்ணமாக்கி (பவுடராக்கி), உணவிற்குப் பின் அரைத் தேக்கரண்டி அளவு வெல்லத்துடன் அல்லது பாலில் சர்க்கரை கலந்து மாலையில் 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட வேண்டும். உணவில் பால், நெய், தயிர் மோர், கீரைகள், பருப்பு வகைகள், காய்கறிகள் போன்றவற்றை அதிகமாகச் சாப்பிட்டு வர மேற்கண்ட மூன்றும் சிறந்த பயனளிக்கும்.

**காயகற்பம்**

அதிசய மனிதரும் விஞ்ஞான மேதையுமான ஜி. டி. நாயுடு அவர்கள் இஞ்சி, சுக்கு, கடுக்காய் மூன்றினையும் தனித்தனியே பக்குவப்படுத்தி ''காயகற்பம்'' (Rejuvenator) என்ற பெயரில் மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பித் தமிழ் மருத்துவத் துறையின் சிறப்பினையும், சித்தர்களில் ஒருவரான திருமூலரின் மருந்தில்லா உணவுமுறை மருத்துவத்தையும், அதன் விஞ்ஞான அறிவியல் குணங்களையும், உலகுக்கு எடுத்துக் காட்டினார். அவர் போன்று இயற்கை மருத்துவத் துறைக்கு உதவும் செல்வந்தர்கள், சித்தர்களின் நோயணுகாமுறையையும், இயற்கை தரும் இனிய மூலிகைகளையும் கண்டு பிடித்து, அனைவருக்கும் பயன்படும்படி செய்யலாம். இதனால் மருத்துவச் செலவும் குறையும். இயற்கையாக உடல் வன்மை பெருகும். நோயற்ற நல்லுடல் பெறலாம். ''Prevention is better than cure''–அதாவது வந்த நோயைத் தீர்ப்பதைக் காட்டிலும் நோயே வராவண்ணம் உடல் நலம் காப்பதுவே சிறந்தது. அத்தகு நோயற்ற நல்லுடல் பெற இயற்கை வைத்திய முறையைக் கடைப் பிடித்துப் பயன் பெறுவோம்.

---

## மடங்களின் நிர்வாகம்

1. பொதுவாகத் தமிழ்நாட்டிலுள்ள மடங்கள் பலவற்றின் நிர்வாகக் குறைபாடுகளைத் தெரிவித்து, மனுக்கள் பல பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன. குறிப்பாகத் திருவாவடுதுறை மடம் சம்பந்தமாக 2,3 ஆண்டுகளாக மனுக்கள் பல வரப்பெற்று, அவைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2. தஞ்சை மாவட்டம், மாயூரம் வட்டத்தில் உள்ள திருவாவடுதுறை மடத்தின் தற்போதைய ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி, 29.3.1967 முதல் பதவியில் இருந்து வருகிறார். இந்த மடத்தின் நிர்வாகம் சென்னை உயர்நீதி மன்றத்தின் ஏ.எஸ். 51/1936ல் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்படி நடைபெறுகிறது. இந்த மடத்துடன் சேர்ந்த ஆலயங்களின் எண்ணிக்கை 19. இந்த ஆலயங்களின் வரவு செலவு, நிர்வாகம் முதலியவற்றை, மடத்தின் தலைவரான மடாதிபதி, பரம்பரைத் தர்மகர்த்தர் என்றமுறையில் செய்து வருகின்றார்.

3. மடத்திற்குச் சொந்தமாக நஞ்சை, புஞ்சை நிலங்கள் ஏக்கர் 26,527.44. மடத்துக்கோவில்கள் 19. இவைகளுக்குச் சொந்தமான நிலங்கள் நஞ்சை 2,612.49. புஞ்சை 4,628.77. இவைகள் சரியானபடி பராமரிக்கப்படவில்லை என்றும்; இந்த நிலங்களை இந்துசமய அறநிலைய நிர்வாகத்துறைச் சட்டவிதிகளுக்கு உட்பட்டுக் குத்தகைக்கு விடவோ அல்லது விற்பனை செய்யவோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும்; மடம், ஆலயச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்றும்; மடம் மற்றும் அதனைச் சார்ந்த ஆலயங்களின் கணக்குகள் சில ஆண்டுகளாகத் தணிக்கைக்குக் கொடுக்கப்படவ்லலை என்றும்; பொதுமக்களால் புகார்கள் செய் ப்பட்டன.

4. மேற்சொன்ன புகார்கள் தொடர்பாக, மடம் மற்றும் அதனைச் சார்ந்த ஆலயங்களின் கணக்குகளை இத்துறைத் துணை ஆணையர், மற்றும் முதன்மைத் தணிக்கை அலுவலர், தஞ்சை மண்டலத் தணிக்கை அதிகாரி ஆகியவர்கள் 1979ல் சிறப்புத் தணிக்கை செய்தனர். இந்தச் சிறப்புத் தணிக்கை செய்யப்பட்டதின் விளைவாக மடத்தின் நிர்வாகத்திலும், மடத்தைச் சேர்ந்த ஆலயங்களின் நிர்வாகத்திலும், பல சீர்கேடுகளும், குறைபாடுகளும் தெரியவந்துள்ளன. இவைகளைக் கருத்தில் கொண்டு, மடத்தைச் சேர்ந்த ஆலயங்களுக்கு மட்டுமாவது, அதாவது திருவாவடுதுறை, தருமபுரம் மற்றும் குன்றக்குடி ஆதீனத்தின்கீழ் உள்ள ஆலயங்களுக்கு, செயல் அலுவலர்கள் சட்டப்பிரிவு 43 (எ)இன்படி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதின்பேரில், திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் மற்றும் தருமபுர ஆதீன கர்த்தர்களால்,சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No 664 மற்றும்,W.P.No 665/80ல் ரிட்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிரந்தரத் தடை உத்திரவு (Stay made absolute) பெறப்பட்டுள்ளது.

மேலும், இதேபோல மற்ற மடங்களின் நிர்வாகமும், சரிவர நடைபெறவில்லை என்று பொதுமக்கள் புகார்கள் அவ்வப்போது வருகின்றன. பொதுவாக மடங்களின் நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளை அறிந்து, அதனை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதின் பேரில், அனைத்து மடங்களையும் விரிவாக ஆய்வுசெய்ய ஆணையருக்கு உதவிசெய்யும்பொருட்டு, ஆணையர் ந.க.50952-80-பி1 நாள் 14.8.80ல் அனுப்பப்பட்ட கோரிக்கை, அரசினரால் பரிசீலனை செய்யப்பட்டு, அரசாணை எண்.970, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 1.10.80ல் துணை ஆணையர் தலைமையில் ஒரு பிரிவு இயங்க அனுமதிக்கப் பட்டுள்ளது. இப்பிரிவு விரைவில் தன்னுடைய பணியினைத் துவக்க உள்ளது.

---

# கோயில்

திரு.க. சி. கமலையா, அசோக் நகர்

## கோயிலும் கோட்டமும்

தமிழகக் கலைவரலாறு, பெருமளவு கோயில்களை மையமாகக் கொண்டது. எனவே 'கோயில்' என்பதை உற்று நோக்குதல் நன்று. 'கோயில்' என்ற சொல்லைச் சிலப்பதிகாரம் இருபொருளில் கையாள்கிறது.

விளங்குபூண் மார்பிற் பாண்டியன் கோயிலின்
அளந்துணர் வறியா ஆருயிர் முகக்கும்
கலவைக் கூட்டம் காண்வரத் தோன்றிப்
புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பிற்
பொதியிற் றென்றல் போலா தீங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்''

(புறஞ்சேரியிறுத்தகாதை. வரிகள் 126-132)

''இந்திரனாற் பூட்டப்பட்ட விளங்காநின்ற ஆரவாரத்தை யுடைய, மார்பாலே வெல்லும் போரைவல்ல பாண்டியனது கோயிற்கண், யாவரானும் அளவிட்டறியப்படாவாய இக்கலவைத் தொகுதி, தன்மெய்யெல்லாம் கமழும்படி தோன்றி, சங்கப் புலவரது செந்நாவாலே புகழப்பட்ட இச்சிறப்புக்களை யுடைத்தாகலிற் பொதியிற்றென்றல் தன்னை ஒவ்வாமைக்குக் காரணமாகி, இந்த மதுரைத் தென்றல் வந்தது. இதனைக் காணீர்'' என்று முன்னர்க் குறிப்பிட்ட வரிகளுக்கு அடியார்க்கு நல்லார் உரை எழுதுகிறார். 'கோயில்' என்ற சொல் மன்னவன் அரண்மனையைக் குறிக்கும் என்பதனை உறுதிப்படுத்தும் வகையில்,

'வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள்'

கண்ணகி என வழக்குரை காதையிலும் சொல்லப்படுகிறது. 'கோயில்' என்ற சொல் அரசனின் அரண்மனையையும், இறைவன் உறையும் இல்லத்தையும் சுட்டும் என்பதைச் சொல்லும் சிலப்பதிகார வரிகளாவன.

அருந்தெறற் கடவுள் அகன்பெருங் கோயிலும்
பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்
பால்கெழு சிறப்பிற் பல்லியஞ் சிறந்த
காலை முரசக் கனைகுரல் ஓதை

(புறஞ்சேரியிறுத்தகாதை. வரிகள் 137-140)

அரித்தற்றொழிலையுடைய கடவுளது அகன்ற பெரிய கோயிலிடத்தும், மன்னவன் கோயிலிடத்தும் காலை முரசம் சேர்ந்தொலிக்கும்.

இந்திரன் விழவூரெடுத்த காதையில், நான் மறைமரபில் தீமுறை (ஓமம்) நிகழ்ந்த கடவுளர் கோயில்களைப் பற்றியும் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெகுண்டை மன்னவன் கோயிலும்

(வரிகள் 139-143)

என இறைவன் கோயில், முருகவேள்கோயில், பலதேவன் கோயில், நெடியமால் கோயில், இந்திரன்கோயில் ஆகியவை கோயில்கள் என்று சொல்லப்படுகின்றன.

கடவுளர் கோயிலைக் குறிக்கக் 'கோட்டம்' என்ற சொல்லும் சிலப்பதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயில்
உச்சிக் கிழான்கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக்கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நிலாக் காட்டம்.

(கனாத்திறமுரைத்தகாதை. வரிகள் 9-13)

கற்பகத்தரு, வெள்ளை யானை, பலதேவர் சூரியன், இறைவனூராகிய கைலாயம், முருகன், வச்சிராயுதம், சாதவாகனன், அருகன், சந்திரன் ஆகியவர்க்கு எழுப்பப்பட்டவை கோட்டங்கள் எனப்பட்டன.

தெய்வங்களின் இருப்பிடங்கள் கோயில் என்றும், கோட்டம் என்றும் உரைக்கப்பட்டன, ஊர்காண்காதையில் கடவுளர் உறையுள் ஒவ்வொன்றுக்கும் சிறப்பான சொல்லை இளங்கோவடிகள் பயன்படுத்துகிறார்.

வேந்துதலை பனிப்ப வேந்துவாட் செழியன்
ஓங்குயர் கூடல் ஊர்துயி லெடுப்ப
நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவல் உவர்த்தோன் நியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்
அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்
மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்
வால் வெண் சங்கொடு வகைபெற் றோங்கிய
காலை முரசங் கனைகுர லியம்ப

(ஊர்காண்காதை, வரிகள் 5-14)

பாண்டிய மன்னன் தலைநகராகிய கூடலில் வைகறைப் பொழுதில் இறைவன், திருமால், பலதேவர், முருகன் ஆகியவர் கோயில்களி லிருந்தும், அறவோர் இருப்பிடங்களிலிருந்தும், மன்னவன் அரண்மைனயிலிருந்தும், காலை முர சம் சங்கத்தோடும் கொம்போடும் எழுந்தது. இறைவனுக்கும் மன்னவனுக்கும் உரியனவற் றைக் கோயிலென்றும், திருமாலுக்குரியதை நியமம் என்றும், பலதேவர்க்குரியதை நகர மென்றும், முருகவேளுக்குரியதைக் கோட்ட மென்றும், அறவோர் இருப்பிடத்தைப் பள்ளி யென்றும், குறிப்பிடுவதன் சிறப்பு சிந்திக்கற் பாலது. கோயில், நியமம், நகரம், கோட்டம், பள்ளியென்பன வற்றின் பரியாய அலங்கார முணர்க', என்று அடியார்க்கு நல்லார் கூறி னாராயினும் ஒவ்வொரு கோயிலும் ஒரு சிறப் புப் பெயரைக் கொண்டிருந்தது என்றுகொள் வதில் தவறொன்றுமில்லை. தெய்வங்களுக் கென அமைந்த இடங்கள் கோயில்கள் என வழங்கலாயின.

சோழன் தலைநகரமாகிய புகாரிலும், செழியன் தலைநகராகிய கூடலிலும் மட்டு மின்றிச் சேரநாட்டிலும் கோயில் அமைக்கும் வினைஞர் இருந்தனர். கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் எடுப்பித்ததைச் சிலம்பு கூறும்.

மேலோர் விழையும் நூனெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்
(நடுகற்காதை, வரிகள் 22-225)

நூனெறிமாக்கள் என்பதற்குத் 'தபதி' என்று அரும்பதவுரையாசிரியர் பொருள் கூறுகிறார்.

### முருகன் உறைவிடங்கள்

பண்டைத் தமிழர் இறைவனை இயற்கை யில் கண்டனர். எனவே மிகப் பழமையான காலத்தில் தமிழ்நாட்டில் பின்னர் எழுந்த மா பெரும்கோயில்கள் போல, அளவிலும் பரப்பி லும் அமைப்பிலும் கோயில்கள் இருக்கவில்லை. முருகன் உறையும் இடங்கள் பற்றித் திருமுரு காற்றுப் படையில் விளக்கம் பெறலாம்.

ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
(திருமுருகாற்றுப்படை வரிகள் 1216-226)

### முருகனை மக்கள் வழிபட்டார்கள்

ஊர்தோறும் எடுத்துக்கொண்ட விழாவி னிடத்தும் அன்பர்கள் வணங்குமிடமும் வேலன் வெறிக்களமும் காடும் சோலையும் அழகு பெறப்பட்ட ஆற்றிடைக் குறையும் ஆற்றங் கரையும் குளக்கரையும் பல சந்திகளும் கடப்ப மரத்தடியும் மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையும் முருகன் உறைவிடங்களாகும். முரு கன் திருப்பரங்குன்றத்தில் அமர்ந்திருத்தலும் உரியன்; அலைவாய்ச் சேரலும் அவனுடைய பண்பு; ஆவினன்குடியிலே தங்குதலும் உரி யன்; மலைகள் தோறும் சென்று விளையாடு தலும் நிலைபெற்ற குணம்; அருவிகளையும் சோலைகளையுமுடைய மலை கிழவோன்,

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்
(குன்றக்குரவை, பாட்டுமடை)

முருகன் என்றும் சிலம்பு சொல்கிறது. பொது வாக முன்னர்ச் சொன்ன இடங்களில் கோயில் கள் இருந்தன என்று கொள்வது பொருந் தும்.

### இறைவன் உறைவிடம் கோயில்

சங்க நூல்களின் காலம், சில கிறிஸ்துவத் தொடக்க நூற்றாண்டுகளுக்கு முன்னும் பின் னும் பின்னும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. திருமுருகாற்றுப்படை சங்க நூலாதலின் அக் காலவரையறைக்குள் எழுந்தது எனக் கொள்ள லாம். சிலப்பதிகாரத்தின் காலம் கி.பி. இரண் டாம் நூற்றாண்டென்று அறிந்தோர் கூறுவர். இறைவன் கோயில் அகன்ற பெருங்கோயிலாக வும் அறுமுகச் செவ்வேள் கோயில் அழகு கொழிக்கின்றதாகவும் இருந்தன என்ற செய்தி கிடைக்கின்றது. சிலப்பதிகாரத்தில் கோயில் களைப் பற்றிச் சொல்லும்பொழுது இறைவன் கோயில் முதலிடம் பெறுகின்றது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

நாயன்மார்கள்-ஆழ்வார்கள் வாழ்ந்த காலங்களில் கோயில்கள் சீரும் சிறப்புடனும் விளங்கின என்பதை விளக்க அவர்களுடைய பாடல்களில் காணப்படும் 'கோயில்' என்ற சொல்லாட்சி சான்று பகரும்.

''உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே''

என்பது திருமூலர்பெருமான் திருவாக்கு.

''அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள்ஊர்தி
உரை நூல் மறை உறையும் கோயில்—வரைநீர்''

எனப் பொய்கையார் பாடுவார்.

''கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயும் இலி தந்தையிலி தான் தனியன்காணேடி

என்று மாணிக்கவாசகரின் திருவாசகம் செப் பும்.

''புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயி லிலே
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ

என்று கோதைநாச்சியார் பகர்வார்.

### கோயில் வகைகள்

அப்பர் பெருமானின் தேவாரப் பாடல் ஒன்று, கோயில்களை வகைப்படுத்தி உரைக் கின்றது.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே

பெருங்கோயில் எழுபத்தெட்டு என்று திட்டவட்டமாக அப்பர்பெருமான் உரைப்பதால் மற்றைய வகைக்கோயில்களின் எண்ணிக்கை குறைவு எனக் கொள்ளலாம். ''எண்தோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்தான்'', என்று திருமங்கையாழ்வார் கூறுவதும் முன்னர் சொன்னதை அரண்செய்யும். பெருங்கோயில் என்பதுவும், மாடக்கோயில் என்பதுவும் ஒன்றேயாம். அப்பர் வகைப்படுத்திய கோயில்கள் பற்றித் திருஞானசம்பந்தர் சுந்தரர் இவர்களுடைய தேவாரப் பாடல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

*(1) பெருங்கோயில் - மாடக்கோயில்:* குன்றுகள் மேல் கட்டப்பட்டவை பெருங்கோயில்களாகும்.

*(2) கரக்கோயில்:* தேரைப் போன்ற அமைப்புள்ளது கரக்கோயிலாகும்.

*(3) ஞாழற்கோயில்:* நறுஞ்சோலைகளின் நடுவேயமைந்தது ஞாழற் கோயிலாகும். ஞாழல் கொன்றைமரத்தின் ஒரு வகை. புலிநகக் கொன்றையென்றும் சொல்லப்படுகிறது.

*(4) கொகுடிக்கோயில்;* முல்லைக் கொடிகள் படர்ந்த சூழ்நிலையில் அமைந்தது கொகுடிக் கோயில்.

கடிநாறு பூம்பொய்கைக் கயல்வாளை
குதிகொள்ளும் கருப்பறியலூர்க்
கொடியேறி வண்டினமும் தண்தேனும்
பண் செய்யும் கொகுடிக் கோயில்

என்று கருப்பறியலூர்க் கொகுடிக் கோயிலைச் சுந்தரர் பாடுவார்.

*(5) இளங்கோயில்:* பழமையான கோயில்களுக்கு மாறாகக் காலத்தால் பிற்பட்ட கோயில்கள் இளங்கோயில்களாகும். திருநாவுக்கரசர் தேவாரப்பாடல்களில் கடம்பூரிலும் திருமீயச்சூரிலும் இளங்கோயில்கள் இருந்தனவென்று தெரிந்து கொள்ளலாம். சித்தூர் நாட்டில் இக்காலத்தில் திருச்சானூர் என வழங்கும் ஊரில், ஈசனார் அமர்ந்தருளிய இடம் இளங்கோயில் என்பது சாசனங்களால் விளங்குகின்றது. திருவேங்கடக் கோட்டத்துக் கடவூர் நாட்டுத் திருச்சொகினூரில் உள்ள இளங்கோயிற்பெருமான் என்பது சாசன்வாசகம். இவ்வூரின் பெயர் திருச்சுகனூர் என்றும் சித்திரதானூர் என்றும் சிதைந்து வழங்கும், என்று ரா.பி. சேதுபிள்ளை 'தமிழகம்-ஊரும்பேரும்' என்ற நூலில் எழுதுகிறார்.

*(6) மணிக்கோயில்:* மணிபோன்ற விமான அமைப்பைக் கொண்டகோயில், மணிக்கோயில் எனப்பட்டது. பிற்காலக் கோயில்கள் சிலவற்றில் இவ்வமைப்பு மிகத் தெளிவாகக் காணப்படுகிறது.

*(7) ஆலக்கோயில்:* கல்லாலின் கீழிலிருந்து இறைவன் அருள்புரிந்தான். ஆலமரத்தடியில் எழுந்தகோயில் ஆலக்கோயிலாகும்.

**கற்கோயில் :**

இயற்கைச் சூழ்நிலையில் தொன்மைக் கோயில்கள் அமைந்தன, கட்டிடக்கலைவளர்ந்த பொழுது கோயில்கள் கல்லாலும் சுட்டமண்ணாலும் சுதையாலும் எழுப்பப்பட்டன. கட்டிடக் கலை உயர்ந்து நின்றதைச் சங்கஇலக்கியச் சான்றுகளால் நிறுவமுடியும். கல்லைப் பல்லவர் கவி சொல்லப்படைத்தார். பல்லவர் காலத்துக்கு முன்பே கட்டிடக்கலையில் (Architecture) இடம்பெற்றதுஎன்பதை வீரக்கல்நிலைநாட்டும்.

என்னைமுன் நில்லான்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கல்நின் றவர். (குறள் 771)

"பகைவீர்! என்முன் நிற்காதீர்! உங்களுக்கு முன் பலர் என் முன்னின்று இன்று கல்லாய் நிற்கின்றார் என்பதை அறியீரோ!'' என்று போர்க்களத்தில் வீரன் தன் வீரத்தை நெஞ்சு விம்மிப் புடைக்க நிகழ்த்திய உரையாகும் இக்குறட்பா. எனினும் பிற்காலக் கோயில்கள் பற்றிய ஆய்வில் பல்லவர் காலக் கற்கோயில்கள் முதலிடம் பெறுகின்றன.

பல்லவர் கற்கோயில்கள் மூன்று வகைகளிலடங்கும்: (1) குகைக்கோயில், (2) ஒற்றைக் கல்லாலான கோயில், (3) கட்டுமானக் கோயில் அல்லது கற்றளி. இம் மூன்று வகைக் கோயில்களையும் இன்று மாமல்லபுரத்தில் காணலாம். பாண்டிய நாட்டுப் பிள்ளையார் பட்டிக் குகைக்கோயில் கி.பி. ஐந்தாவது அல்லது ஆறாவது நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். எனவே பாண்டியர்க்கே இவ்வகையில் முதலிடம் .இக்கருத்தை ஏற்பாரும் மறுப்பாரும் உளர். காஞ்சிபுரத்திலிருந்தும் மாமல்லபுரத்திலிருந்தும் அரசாண்ட பல்லவர் வடக்கிலிருந்து வந்தவராயினும், நாயன்மார்கள்-ஆழ்வார்கள் பாடல்களில் தம்மைப்பறிகொடுத்துத் தமிழ்ப் பண்பாட்டில் ஊறியவர்கள். அத்தகையோரைத் தமிழ்ப் பல்லவர் என்று கூறலாம்.

**தமிழகக் கோயில்கள்**

''பூவெனப்படுவது பொறிவாழ் பூவே'' என்பது போன்று 'கோயில்' என்ற சொல் பிற்காலத்தில் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலையும், திருவரங்கத்து அரங்கநாதர் கோயிலையும் சுட்டுவதாயிற்று. இருப்பினும் பல நூற்றாண்டுகளாக எழுந்த கோயில்கள் தமிழ்நாட்டில் பல உள. பாண்டியர், பல்லவர் சோழர், விஜயநகரப் பேரரசு, நாயக்கர் முதலியவர் ஆட்சியின்போது கட்டப்பட்ட கோயில்கள், கோயிற் கட்டிடக்கலையின் சிறப்பையும் வளர்ச்சியையும் பற்றித் தெரிந்துகொள்ள உதவும். கழுகுமலை வெட்டுவான் கோயில், மாமல்லபுரத்து அலைவாய்க்கோயில் ( Shore Temple ), காஞ்சிக் கைலாசநாதர் கோயில், தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழேச்சுரம், சிதம்பரம் கூத்தப் பெருமான் கோயில், மதுரைச் சொக்கநாதர் -அங்கயற்கண்ணி கோயில், திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில், இராமேசுவரம் இராமநாதர் திருக்கோயில் ஆகிய சில கோயில்களின் தனிச் சிறப்புகள் கலையுள்ளம் படைத்தவரை ஈர்க்கும். இன்னும் பலவுண்டு. இவை பற்றித் தனியாக - விரிவாகத் தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாதது.

**



புதுக்கோட்டைத் திருக்கோயில்களைச் சார்ந்த வல்லத்திராக் கோட்டை அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயத்தில் 22.8.80 அன்று நடந்த திருப்பணிக் கால்கோள் விழாவில் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், பெருந் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். திருநாவுக்கரசு அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் திரு யு. சுப்ரமணியன், மேற்பார்வைப் பொறியாளர் திரு என். இராமச்சந்திரன், துணை ஆணையர் திரு. சி. எஸ். தீனதயாளு, உதவி ஆணையர் திரு வை. சுப்பையன், அறங்காவலர் குழுத் தலைவர் திரு எஸ். வி. எஸ். வெங்கடாசலம் முதலிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்.



இரத்தினகிரி அருள்திரு பாலமுருகன் திருக்கோயில் சித்த மருத்துவமனைத் திறப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்துதல்.

பதிவு எண். எம் 7039




இரத்தினகிரி அருள்திரு பாலமுருகன் திருக்கோயில் சித்த மருத்துவமனைத் திறப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தல்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.